
# பெண்

தொகுதி : 18

இலக்கம் : 01



"தூக்கியெறியப்பட முடியாத கேள்வியாய்
உங்கள் முன் பிரசன்னமாயுள்ளேன்"

# பெண்

தொகுதி : 18 இலக்கம் : 01

2013

சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம்

மட்டக்களப்பு.

# பெண்

**சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையத்தின் சஞ்சிகை**
*இல. 55, லேடி மன்னிங் டிறைவ்,*
*மட்டக்களப்பு.*

*தொலைபேசி இல.: 065-2223297*

**Fax No.: 065-2224657** **e-mail : suriyaw@slt.lk**

**THE WOMAN - A Journal Published by**
**Suriya Women's Development Centre,**
**No.55, Lady Manning Drive,**
**Batticaloa, Sri Lanka.**

| | | |
|---|---|---|
| ஆசிரியை | :- | விஜயலட்சுமி சேகர் |
| முன், பின் அட்டை வடிவமைப்பு | :- | நிர்மலவாசன் |
| கணினி வடிவமைப்பு | :- | சுபாஜெனி சங்கர் |
| அச்சகம் | :- | வணசிங்கா அச்சகம், |
| | | 126/1, திருமலை வீதி, மட்டக்களப்பு. |
| விலை | :- | 200/= |

## உங்களுடன் .......

"எங்களை எப்படி உங்களிடம் அறிமுகப்படுத்துவதென்பது எங்களுக்கு விளங்கல்ல. கணவன் இல்லாத பெண்கள் என்றோ, கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் என்றோ, அநாதைகள் என்றோ, தலமை தாங்கும் குடும்பப் பெண்கள் என்றோ எப்படி எங்களை அறிமுகப்படுத்துவது? இதுவரைக்கும் எங்களுக்கென ஒரு அடையாளம் கிடைக்கவில்லை. இது எங்களுக்கு ஒரு குழப்பாமான நிலமை. எங்கள் உறவுகள் இருக்காங்க என்ற நம்பிக்கையில், அவர்கள் இருக்கனும் என்ற ஆசையில் உறவுகளைத் தேடும் எங்களை எப்படி நாம் உங்களிடம் "நாங்கள் யார்" எனச் சொல்வது.

பெண்களுடன் வேலை செய்யும் நாம் இன்று உறவுகளைத் தேடியலையும் பெண்களைச் சந்திக்கையில் அவர்கள் கேள்விகளில் இருக்கும் நியாயங்களை, சிந்தனையில் இருக்கும் தெளிவைக் காண்கிறோம். இன்றைய இவர்களது உயிரோட்டமான தேடல்கள், உணர்வுகள் அதன் சக்தி. . . அதன் பெறுமதி காலத்தில் மறைபட்டுப் போகலாம், ஏனெனில் "அரசு எவ்வழியோ குடிகளும் அவ்வழியே" என்பதற்கிணங்க அரசின் வழியும் நிகழ்ச்சிநிரல்களுக்கேற்ப குடிகளின் அன்றாட ஓட்டங்களும் மாறிக் கொண்டும் விரைந்து ஓடிக் கொண்டும் உள்ளது.

பாரிய தெருக்களும் நினைத்தும் பார்க்கமுடியாத விபத்துக்களும், பொழுது புலருமுன் கிடைக்கும் அபிவிருத்தித் திட்டங்களும் பாதீட்டு அறிக்கையின்றியே வருடம் முழுவதற்குமான வரவு செலவு மாற்றங்களும், சண்டைகளும் திட்டல்களும் இத்தனைக்குள்ளும் தமது நோக்கத்தை நோக்கிய பெண்களின் உறவினைத் தேடும் பயணயத்தின் பதிவுகளை காலம் தன்னகத்தே பதித்து வைத்திருக்குமா? அல்லது பேசப்படுமா?

இன்று அரச, அரசசார்பற்ற அமைப்புகள் இப் பெண்களின் வாழ்வாதாரம், சுயதொழில் என எத்தனையோ செயற்பாடுகளை ஆரம்பிக்கக்கூடிய நிலையில் உள்ளது. எனினும். இவ்வாறான நடைமுறைகள் இவர்கள் உறவுகளைத் தேடும் பயணத்தின் விடைகளைத் தேடித் தருமா? தங்கள் உறவுகளுக்கு என்ன நடந்தது எனும் உண்மையை அறிவதற்கான இவர்கள் கேள்விகளுக்குத்தான் விடைகளைத் தேடித் தருமா? உண்மையை அறிவதற்கான வாசல்கள் எவை? அச் சூழலை எவ்வாறு உருவாக்குவது? என்றும் தூக்கி எறியமுடியாத கேள்வியாய் உள்ள இவர்களின் கேள்விகள், சிறிய ஆரம்பமாக இன்று உங்கள் முன்.

அன்புடன் ....

ஆசிரியை

## உள்ளே....


- உறவுடன் வாழ்க்கை உயிருடன் வாழ்க்கை ......................
- அன்புடன் உறவுகளும் நண்பர்களும் ................................
- யுத்தத்தில் காணாமல் போனோர் ..................................
- கடவுளுக்கோர் கடிதம் ....................................................
- மட்டுநகர் கண்ணகைகள் .............................................
- முத்தம் ..........................................................................
- எல்லோருக்கும் ஒரு கதை உண்டு ..................................
- ஆயிரம் பத்தாயிரம் பாம்புகளின் புற்றாக.......................
- ஒருதுளியேனும் உரிமை ................................................
- எத்தனை காலந்தான் ....................................................
- எனது நேரம் எனது வேலை ...........................................
- நானும் ஒரு சிறுமியாக ..................................................
- வளர்ந்துவரும் ஒரு மென்பயன்பாட்டு ............................
- புதிய சுவாசம் ...............................................................
- காணிநிலம் வேண்டும் ...................................................
- கண்ணம்மாவின் கனவுகள் ...........................................
- பேனையை வைத்துவிடாதே ..........................................
- அதிகாரத்திற்கெதிரான பெண் குரல் ..............................
- மத்தியஸ்த சபை உறுப்பினருடனான சந்திப்பு ...............
- பெண் சஞ்சிகை .............................................................
- சனநாயக மற்றும் சமாதானச் செயன்முறைகளில் ...........

# உறவுடன் வாழ்க்கை
# உயிருடன் வாழ்க்கை
# எங்களுக்கும் அனைவருக்கும் ....



எங்கள் உறவுகளைத் தேடும் பயணத்தில் உங்கள் ஆதரவை நாம் எதிர்பார்க்கின்றோம். மேலும் நாங்கள் யார் என்பதனை தங்களுக்கு சொல்லிக் கொள்ளவிரும்புகிறோம். ஏனெனில் உறவுகளைத் தேடும் எங்களை எப்படி அழைப்பது என்பது எங்களுக்கே தெரியாத ஒன்று.

நாம் வாழும் எமது சமூகத்திலிருந்துதான் எங்களது அன்பிற்குரியவர்கள் பிரிக்கப்பட்டனர். இவ்வாறு கடந்த பல ஆண்டுகளுக்கு மேலாக பிரிக்கப்பட்ட எங்கள் உறவுகளைத் தேடுவதற்காய் பல குடும்பங்களைச் சேர்ந்த நாங்கள் இன்று ஒரு குடும்பமாக இணைந்துள்ளோம். இன்று எங்கள் தேடல் பல இடங்களிலும். மற்றும் எங்கள் உறவுகளை எம்மிடம் சேர்த்து வைக்கும் படியான முறையீடுகள் அரச, அரசசார்பற்ற அமைப்புக்கள், சர்வதேசஅமைப்புக்கள்,ஆணைக்குழுக்கள் எனப் பலதரப்பிலும் சமர்ப்பித்துவிட்டோம். எனினும் எமதுவேதனையின் வலியைத் தணிக்கும் எந்தவித செய்தியும் எங்களுக்கு இன்னும் கிடைக்கவே யில்லை.

நாம் கொடுத்த மனுக்களுக்கெல்லாம் இன்று பதில்கள் தயாரிக்கப்பட்டுக்கொண்டிருக்கலாம். ஏனெனில் பதில்களுக்கேற்ற கேள்விகளை நாம் சந்தித்துக்கொண்டுள்ளோம். ஏனெனில் கோவை கள் மூட வேண்டிய கட்டாயத் தேவையை இன்று எல்லாத் தரப்பினரும் சந்தித்துக் கொண்டிருப்பதால் இவர்கள் அவசர அவசரமாய் உருவாக்கிய படிமுறை களுக்கெல்லாம் நாங்கள் சென்றுகொண்டுள்ளோம். பதில் சொல்லிக்கொண்டுள்ளோம். நிச்சயம் தொலைந்த உறவுகளுக்கான மரணப் பத்திரம் எங்கள் கைகளில் ஒப்படைக்கப்பட்டு கோவைகள் மூடப்படும். எனினும் உறவைத் தேடும் எங்கள் பயணம் முடியப் போவதில்லை.

இத் தேடலில் நாங்கள் தனித்தவர்கள் ஆகிவிடுவோமோ எனும் பயம் எங்களுக்குள்ளது. நாங்கள் எங்கள் துயரை அனைவருக்கும் சொல்ல விரும்புகிறோம். எனினும் நாம் அறிந்த ஆர்ப்பாட்டங்களும் ஆரவாரங்களும் வெறும் இரைச்சலாக காதுகளுடனே முடிந்துவிடும் நிகழ்வுகளாகி விட்டதை அனேக சந்தர்ப்பங்களில் கண்டுள்ளோம். எங்கள் வலியின் பாரம் மனங்களை அழுத்துகின்றது. இத்துயரை நாங்கள் வெளிப்படுத்த வேண்டும். எங்கள் கதைகள் அறியப்படவேண்டும். கேட்கப்பட வேண்டும். ஆழமான சிந்தனைகள் குழப்பத்திலிருந்து தெளிவைத் தரும். கோபங்களையும் ஆற்றாமையையும் கொண்டுள்ள வலியுள்ள எமது கதைகள் அச்சம் கொடுப்பவை அல்ல, கேட்கப்படவேண்டியவை. ஆகவே இன்று நாங்கள் புதுப்பாதை வழியே எம் கதைகள் சுமந்து செல்கின்றோம். பலருடன் இணைய விரும்புகின்றோம்.

கடந்த வருடம் மட்டுநகரில் ஆரம்பிக்கப்பட்டது எம் பயணத்தின் பிரார்த்தனைக்கான பாதயாத்திரை. கோயிலில் ஆரம்பித்து கோயிலில் முடிவடையும் அல்லது பொது இடத்தில் ஆரம்பித்து தேவாலயம், மசூதி, விகாரை என வணக்கத் ஸ்தலங்களில் முடிவடையும். எந்தவித சத்தங்களுமின்றி ஒருவர் பின் ஒருவராக நிதானமாக செல்லும் எமது யாத்திரையில் யாரும் கேட்டால் நாம் எழுதிச் செல்லும் எமது உறவின் பெயரைக் கொடுப்போம். அவர்களும் எமது உறவுக்காக வேண்டிக் கொள்ள. யாத்திரைகளின் போது கைகளில் எமது உறவுகளின் பெயர்களைப் பத்திரப்படுத்தியிருப்போம். யாத்திரை முடிவில் இறைவனிடம் பிரார்த்தனைக்காக ஒப்படைக்கப்படும் இப் பெயர்கள். பிரார்த்தனை முடிவில் ஆலயத்தின் வெளியே எங்கள் கலந்துரையாடல்கள் பகிர்வுகள் தொடரும்.

தற்போது எங்கள் இப்பிரார்த்தனைகளை கிராமங்களிலும் ஆரம்பித்துள்ளோம். ஏனெனில் நாம் வாழ்வதும் தொலைந்த எம் உறவுகள் வாழ்ந்ததும், அவர்கள் தொலைந்ததும் இங்குதான். இங்குதான் இவர்களுக்கான பதில்களும் உண்டு. எங்களது அமைதியும் பிரார்த்தனையுமே மூடிய ஊரைப் பேசவைக்கும் என்ற நம்பிக்கை எமக்குண்டு. இன்றுவரை செய்த தவறுக்காக வருந்துபவர்கள், சொல்லமுடியாது தவிப்பவர்கள், அச்சத்தில் உறைந்து கிடப்பவர்கள் என இதில் பொறுப்புள்ள அனைவருமே எம்மைச் சுற்றித்தான்.

இவ்வாறான சூழலில் இருந்து எமது சந்ததி வாழவேண்டிய சமூகம் விடுபடவேண்டும். எமது பிரார்த்தனை இதற்கு வழி வகுக்கும். பயமின்றி பேசுவதற்கான இடம், குற்றத்தை உணரும் சூழல், மன்னிக்கும் மனத் தைரியம் இத்தனையையும் ஒரு சமூகத்திற்குள் உருவாக்கும் சக்தி தொடர்ச்சியான பிரார்த்தனை மூலம் நிச்சயம் உருவாகும்.

எமது இப் பயணத்தில் உடனடியாய் எமக்கான பதில்கள் எம்மை வந்து சேராவிட்டாலும் பழிவாங்கல் இல்லாத சமூகத்தை உருவாக்கி அதற்குள் தம்மைத் தேடும் எமது பயணத்தின் வலிமையை எமது உறவுகள் நிச்சயம் உணர்வார்கள். இன்றைய எமது இப் பிரார்த்தனையே அவர்கள் சந்ததி வாழ சிறந்த சமூகத்தை உருவாக்கிக் கொடுக்கும் என்ற மனநிறைவு நிச்சயம் எமக்கும் எமது உறவுகளுக்குமுண்டு.



# அன்புடன் உறவுகளும் நண்பர்களும்

கண்கள் உருக – இன்னும்
நாம் உறைந்துபோயுள்ளோம்.

எங்கள் வாழ்வைச் சுமக்கும்
கதைகளைச் சுமந்தபடி
என்றும் எங்கள்
யாத்திரைகள்...

பிடுங்கப்பட்ட எங்கள் வீட்டு
அத்திவாரத்தின் கதையை...,
இதனால்
பலவீடுகளின் அடுப்பெரியாக்
கதையை.......,
எடுத்துச் சொல்ல

எங்களின் யாத்திரைகள்.......,
காத்திருப்பக்களுடன்,
இப்படியே.....

வினாடிகள் நிமிடங்களாய் மாறும்
நிமிடங்கள் நேரங்களாய் ஊரும்...
நீளும் எங்கள் காத்திருப்பின்
கடைசிநிமிடங்கள்...

எனினும் எங்கும்,

பதில் இல்லை
"நாளைவா"எனும் வசனமும்
இல்லை.
நெஞ்சம் தனலெனகாயும்
உள்ளேதீப்பொறிவெடிக்கும்
ஆத்திரத்தில் தலைசுழலும்.

எனினும்,
எங்கள் கதைகள்
எங்கள் குழந்தைகளின்
வாழ்வைச் சுமப்பதால்,
அழையாவிருந்தாளிகளாய்,
பணிவுடன் விடைபெறும்,

எங்கள் யாத்திரை,
நாளையும் நடக்கும்
இப்படியே.........
..........................

**விஜயலக்சுமி சேகர்**

# வெளிறிப் போன கிழக்கு

**கி**ழக்குவெழுத்தது
கீழ்வானம் சிவந்தது
பறவைகள் தம்
கூடுகளை விட்டு
வெளியே பறந்தது.
கிழக்கின் உதயம்
பல மலைகளை
உடைத்து நிகழ்ந்தது.

பூக்கள் மலர்ந்தன
பெண்கள் சிறுமிகள்
கைகளில்
மலர்த் தட்டுக்கள்
பூக்களைச் சுமந்த பெண்கள்
மலர்களை இழந்த
மரங்கள்

வீடுகள் தோறும்
புகைப்படங்கள்
புகையும் பத்திக்
குச்சிகளின் இடையே
சுவற்றில்
அறையப்பட்டிருக்கும்
சுவாமிகளின் படங்களை
மிஞ்சிய
இக் கிராமத்து
ஆண்களின் படங்கள்.

இக் கிராமங்களிடையே
கிழக்கின் உதயம்
பல மலைகளை
உடைத்து
இப்படித்தான் நிகழ்ந்தது.

■ **விஜயலட்சுமிசேகர்**

நன்றி
**"கவிதைகள் பேசட்டும்"**

# யுத்தத்தில் காணாமல் போனோர்



இலங்கையில் நடந்த 30 வருட யுத்தத்தினால் பலவாறான பாதிப்புக்கள் மக்களுக்கு ஏற்பட்டன. இவற்றுள் மிக அதிகளவான உளத் தாக்கத்தை ஏற்படுத்துபவற்றுள் ஒன்றாக இந்த யுத்தத்தால் காணாமல்போனோர் விடயம் அமைகின்றது. சர்வதேச செஞ்சிலுவை அமைப்பு (ICRC) 1990 ஆண்டிலிருந்து யுத்தத்தால் காணாமல் போனவர்கள் பற்றிய தரவுகளை சேர்த்து வருகிறது. இவர்களது கணக்கீட்டின்படி இதுவரை 15000 பேர் இவ்வாறு காணாமல் போனோர் பட்டியலில் உள்ளனர். உண்மையில் காணாமல் போனோர் எண்ணிக்கை இதைவிட அதிகமாக இருக்கலாம்.

ஒருவிதத்தில் ஒருவர் இறந்ததால் ஏற்படும் உளத்தாக்கத்தை விட அதிகமான உளத்தாக்கம் காணாமல் போனவர்களால் ஏற்படுகிறது. காணாமல் போனவர்களின் குடும்பங்களும் அவர்களது உறவுகளும் மிக அதிகமான உளத்தாக்கத்தால் பல வருடங்கள் பாதிக்கப்படுகிறார்கள். காணாமல் போனோர் இன்னமும் உயிருடன் இருக்கின்றாரா இல்லையா என்ற கேள்வி மிகப் பெரிய உளத் தாக்கத்துக்கு காரணம். இவர் எங்கே இருக்கிறார்? ஏன் இவர் காணாமல் போனார்? இவர் எப்போ வருவார்? போன்ற கேள்விகளும் மனக் கிலேசத்தை உண்டாக்குபவை. பல காணாமல் போனோரின் வீடுகளில் பல வருடங்களின் பின்னும் காணாமல் போனோருக்கும் சேர்த்து உணவு சமைக்கப்படுவது இந்த தாக்கத்தின் ஆழத்தைக் காட்டுகிறது.

காணாமல் போனவருக்கு என்ன நடந்திருக்கலாம் என அறிந்துகொள்ளும் நோக்கில் இவர்கள் அதிக காலத்தையும் பணத்தையும்



மரண சான்றிதழும் நட்ட ஈடும் எமக்கு வேண்டாம்
அன்பிற்குரியவர்கள் திரும்பி வர வேண்டும்

மூன்று வருடங்களில் மட்டக்களப்பில்
130 பேரை காணவில்லையென முறைப்பாடு

மட்டக்களப்பு மாவட்டத்தில் இரு
பெண்கள் உட்பட 95 பேரை காணவில்லை

பொன். செல்வராசா எம்.பி.

காணாமல் போனோரின் விடயம் தொடர்பில்
பேசுவதற்கு நிகழ்ச்சி நிரலில் நேரம் ஒதுக்க கோரிக்கை

மண்டூர்,

மட்டக்களப்பு மாவட்டத்தில் காணாமல் போனோர் விடயம் தொடர்பாக எதிர்வரும் 28 ஆம் திகதி நடைபெறவுள்ள மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் பேசுவதற்கு நிகழ்ச்சி நிரலில் நேரம் ஒதுக்குமாறு மட்டக்களப்பு அரசாங்க அதிபரை கோரவுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் பா. அரியநேத்திரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் காணாமல் போனோரின் உறவினர்கள் தமிழ் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களான பா. அரியநேத்திரன், பொ. செல்வராசா, சீ. யோகேஸ்வரன் ஆகியோரை சந்தித்து கண்ணீர்மல்க காணாமல் போன உறவினர்களுக்கு என்ன நடந்தது என்பதை அறிய உதவுமாறு கேட்டுக் கொண்டனர். இச்சந்திப்பு அமெரிக்கன் இலங்கை மிசன் பெரிய ஊறணி பரியோவான் தேவாலய மண்டபத்தில் நடைபெற்றது.

தமது உறவினர்கள் காணாமல் போனோர் குறித்து ஜனாதிபதி, மனித உரிமைகள் ஆணைக்குழுவினர் மற்றும் அமைச்சர்களின் கவனத்துக்கு கொண்டு வந்த போதிலும் பதில் கிடைக்கவில்லை என்று தெரிவித்த உறவினர்கள் ஜனாதிபதியை அல்லது பசில் ராஜபக்ஷவை சந்தித்துப் பேச வாய்ப்பினை ஏற்படுத்தி தருமாறும் கேட்டுக் கொண்டனர்.

**தகவல்: "வீரகேசரி" பத்திரிகையிலிருந்து...**

விரயம் செய்கிறார்கள். இதனால் இவர்களுடைய மற்றப் பொறுப்புக்களை இந்தக் குடும்பத்தவர்களால் சரியாகச் செய்ய முடிவதில்லை. இந்தத் தேடல் பலவருடங்கள் தொடரலாம். இந்தக் காணாமல் போனோர் பட்டியலில் அனேகமாக இருப்பவர்கள் இளவயது ஆண்களே. இவர்கள் உழைக்கும் வயதினர். இவர்கள் காணாமல் போனதால் பல்லாயிரக்கணக்கான குடும்பங்கள் பொருளாதார அடிப்படையிலும் பாதிக்கப்பட்டுள்ளன. இறந்தவர்களுடைய குடும்பங்களுக்கு கிடைக்கும் கொடுப்பனவுகளை பெற்றுக்கொள்ள குடும்பத்தினர் மரணச் சான்றிதழைப் பெற வேண்டும். மரணச் சான்றிதழை பெறுவது காணாமல் போனோரின் குடும்பத்தினருக்கு மிகுந்த மனச் சங்கடத்தை ஏற்படுத்துவதால் பலர் சான்றிதழைப் பெற விரும்புவதில்லை.

காணாமல் போனோரின் குடும்பங்களுக்கு உதவுவது சமூகத்தின் தார்மீக கடமையாகும். யுத்தத்தின் பின்னாலான காலப்பகுதியில் பலரும் யுத்த கால நினைவுகளை மறந்து வாழ்க்கையை முன்னெடுக்க விரும்பும் நேரத்தில் இந்த குடும்பங்கள் யுத்த காலத்தில் காணாமல் போனவர்களை முன்னிலைப்படுத்துவதை சமூகம் சிலவேளைகளில் தவிர்க்க முற்படலாம். இது தவறானது. பலவந்தமாக குடும்பத்தவர்களை மரணச் சான்றிதழ்களைப் பெறும்படி நிர்ப்பந்திப்பது தவறாகும். அவர்களது கவலை கோபம் விரக்தி போன்றவற்றில் அமைதியாக பொறுமையுடன் அவர்களுடன் சேர்ந்து பங்கேற்பது நல்லது. காணாமல் போனோரின் குடும்ப அங்கத்தவர்களை மெல்ல அவர்களது நாளாந்த கடமைகளில் ஈடுபட உற்சாகப்படுத்தலாம். காணாமல் போனோர் பற்றிய தகவல் பெறுவதற்காக அவர்கள் பல்வேறு இடங்களுக்குப் போகும்போது நாங்களும் அவர்களுடன் உதவியாகச் செல்வது அவர்களுக்கு மிகவும் பயனளிக்கும். இவர்களைப் போன்று காணாமல் போனோரைத் தேடும் பிறருடன் இவர்களைக் கதைக்க ஒழுங்குபடுத்திக் கொடுப்பது அவர்களது மனதிற்கு ஆறுதல் அளிக்கும்.

இலங்கையைப் போன்று யுத்தம் நடைபெற்ற நாடுகளில் காணாமல் போனோர் பற்றிய உண்மையை அறிய 30-40 வருடங்கள் கூட சென்றுள்ளன. காணாமல் போனோர் பற்றிய உண்மையை அறிவதற்கான தேடல் இங்கும் எத்தனை வருடங்கள் தொடரவேண்டும்.

**- வைத்தியர் எம். கணேஸ்**

## கடவுளுக்கோர் கடிதம்

எங்கள் எதிர்பார்ப்புக்கள் நிறைவேற வேண்டும் என்ற நம்பிக்கையில். பிள்ளைகள், மனைவி, பெற்றோர் ஆகிய நாங்கள் எல்லோரும் சேர்ந்து கடத்தப்பட்டும், காணாமல் போயும் உள்ள எங்கள் பாசத்திற்குரியவர்கள் பற்றிய தகவல்களை உங்களிடம் தருகிறோம்.

பிறந்து விட்டோம். எனினும் பிறக்கும்போதே எங்களில் பலருக்கு அப்பா இல்லை. பலருக்கு பாதியில் அப்பாவைக் காணவில்லை. எனினும் எங்கள் அம்மாவிடம் அப்பாவைப் பற்றிக் கேட்கின்றோம். அப்பா என்றால் என்ன என்றும் திரும்பாத அப்பாவைப் பற்றியும் அம்மாவிடம் கேடடுக் கொண்டுள்ளோம்... எனினும் இதற்கான விடை கூற முயற்சிக்கையில் அம்மா மிகுந்த வலியுடன் காணப்படுவதை எங்களால் உணர முடிகிறது. பயத்துடன் எங்களுக்கு நம்பிக்கை தரவேண்டும் என்பதற்காய் “அப்பா வெளிநாடு சென்றுவிட்டார்” என்பது அம்மாவின் பதிலாய் வந்தாலும் அவளது தவிப்பிலும் சமாளிப்பிலும் எங்கள் உள்மனது சொல்லிக் கொள்கிறது” அம்மா பொய் சொல்கிறாள்” என்று. இன்று அம்மாவால் எங்கள் படிப்பிற்கு உதவிபண்ண முடியாத கஸ்டம். இதனால் பாதியில் நிறையப்பேர் படிப்பையும் நிறுத்திவிட்டோம்.

.........................................................................

மனைவியாக குடும்பத்தில் சந்தோசமாக வாழவேண்டிய எங்கள் வாழ்க்கை சுமை நிறைந்த வாழ்வாய் மாறிவிட்டது. மற்றவர் கணக்கெடுப்பின்படி குடும்பத்தில் நாங்கள் இழந்தது ஒருவரை. ஆனால் அவரைச் சுற்றிப் படர்ந்தகொடியாய் அறுபட்டுக் கிடக்கும் அவரது உறவுகளின் எண்ணிக்கைகளோ யார் கணக்கிலுமே இல்லை.

உழைப்பில், எங்கள் தீர்மானத்தில், கௌரவமாய் வாழ்ந்த நாங்கள் இன்று எங்கள் தன்மான உணர்வுகளை மூட்டையில் கட்டி மூலையில் வைத்துவிட்டோம். எப்பொழுது எங்கள் ஆதாரத்தை இழந்தோமோ அன்றிலிருந்து எங்கள் வாழ்வின் ஒவ்வொரு நிமிடமும் கழிவது அடுத்தவர் கையிலேயே அமைந்துவிட்டது. எனினும் எதிர்கால நம்பிக்கையுள்ள பிள்ளைகளை வளர்க்கவேண்டிய பொறுப்போ கூனிக் குறுகி வாழும் எங்கள் கைகளிலேயே ஒப்படைக் கப்பட்டுள்ளது.

.........................................................................

பெற்றோராகிய எங்களின் எதிர்காலப் பாதுகாப்பு எங்களின் பிள்ளைகளே. எங்கள் வாழ்வின் பயணத்தில் இறுதிவரை வந்து வழியனுப்பி வைக்கும் எங்கள் பிள்ளைகளை நாங்கள் பாதியில் தொலைத்துவிட்டு திக்கற்று நிற்கிறோம். ஆனாலும் எங்களை அனுப்பி வைக்க வேண்டிய எங்கள் பிள்ளை எங்களுக்கு முன்னர் செல்லமாட்டான். நிச்சயம் வழி காட்ட மீண்டும் எங்களிடமே வருவான் எனும் நம்பிக்கை எங்களுக்குண்டு. இன்று எங்கள் காலங்கள் கழிவதும் அந்த ஒரு நம்பிக்கையிலேயே.

கடத்துவதும் காணாமல் ஆக்குவதும் கணப்பொழுது நிகழ்வுகள் கடத்தியவர்களுக்கு. ஆனால் கடத்துப்பட்டும் காணாமல் போனதுமான உறவுகளோ எங்களுக்கு காலம் காலமான எங்கள் நீண்ட வாழ்க்கை.

அன்புடன்

**உறவுகள்,**



# மட்டுநகர் கண்ணகைகள்

## அறிமுகம்

"மட்டுநகர் கண்ணகைகள்" என்ற நாடகமானது பெண்ணிலைவாத அரங்கியலாளரான மங்கை என்பவரின் பயிற்சிப் பட்டறையில் இருந்து உருப் பெற்ற நாடக பாடமாகும். இந் நாடகமானது போர்க் காலகட்டத்தில் கணவனைப் பறிகொடுத்த பெண்களின் துயரினை எடுத்தியம்பியதோடு அவர்களது துயரமும் கோபமும் நியாயமானதே என்று வாதிட்டு இப் பெண்களை ஒதுக்கும் எமது கலாசார நியாயங்களினை கேள்விக்குட்படுத்து வதாகவும் இச் சோகத்தில் இருந்து மீண்டு இப் பெண்கள் தங்கள் வாழ்தலை தொடரக்கூடியதான நம்பிக்கையை ஏற்படுத்துவதாகவும் அமைந் துள்ளது.

## கருத்தியல் சார்ந்த விளக்கம்

எமது நாட்டில் குறிப்பாக மட்டக்களப்பு பிரதேசத்தில் யுத்தகாலச் சூழலில் ஆண் துணை இழந்த பெண்களின் நிலை என்பது கவலைக் கிடமான நிலையிலேயே இருந்தது. இக்காலப் பகுதியில் பல்வேறு இன்னல்களுக்கும் முகம் கொடுத்த ஆண் துணை இழந்த பெண்கள் தங்களது ஆத்திரத்தினையும் சோகத்தினையும் தமக்குள்ளேயே புதைத்துவிட்டு எதிர்காலம் பற்றி எந்தவித எதிர்பார்ப்புகளுமே இல்லாதவர்களாகவே வாழ்க்கையை நடாத்தி வந்தார்கள். ஒடுக்கு துறைச் சக்திகளுக்கு எதிராகக் குரலெழுப்ப முடியாத ஒரு சூழ்நிலையே அக்காலப்பகுதியில் நிலவியது.

போரினால் பாதிக்கப்பட்ட சமுதாயங்க ளில் வாழும் ஆயிரக்கணக்கான பெண்கள் குடும்பத்தின் அங்கத்தவர் ஒருவரின் இழப்பு காணா மல் போதல் சித்திரவதைக்குட்படுதல், காரணமின் றிக் கைது செய்யப்படல் வலுக்கட்டாயமாக போரிற்கு சேர்த்துகொள்ளப்படல் போன்ற காரணங்களினால் ஆண் துணை இழந்தவர்களாகவே காணப்படுகி றார்கள். ஆண் துணை இல்லாத காரணத்தினால் ஆதரவு எதுவும் இல்லாத நிலையில் சமுகத்தால் கலாசார ரீதியாகவும் ஒதுக்கப்பட்டவர்களாவே கருதுப்பட்டார்கள்.

பொட்டு வைத்த இப்பெண்கள் தெருவில் சென்றால் அவளை இச் சமுதாயம் நடத்தை கெட்டவள் என்றுதான் பட்டம் சூட்டியது. கணவனை இழந்த சோகத்தில் மனவேதனைக்கு உள்ளாகி யிருக்கும் இப்படியான பெண்களுக்கு ஆறுதலாக இருக்கவேண்டிய எமது சமூகமே இவர்களை ஒதுக்கி வைத்தால் இவர்களின் நிலை, கதி என்ன? இத்தகைய ஒரு நிலைப்பாட்டினை எடுத்து விளக்குவதாக "மட்டுநகர் கண்ணகைகள்" அமைந்துள்ளது.

நாடக பாடத்தில் இரண்டாவது பெண் போன கணவர் திரும்பி வந்துவிடுவார் என்ற நம்பிக்கையில் வாழ்ந்து வருகிறாள். இதனால் பொட்டுவைத்துச் செல்லும் அப்பெண்ணை சமூகம் பலவாறு பேசுகிறது.

**"பொட்டுமிட்டு நான் நடந்தால், ஏச்சு பேச்சு எத்தனையோ?**
**என் செவியை பொசுக்குதம்மா"**

இவ்வாறு மூன்றாவது பெண் பாடும் பாடலில் போன கணவன் திரும்பி வந்துவிடுவார் என்ற நம்பிக்கையில் மகள் வீதி ஓரத்தில் அழகாய் அலங்கரித்துக் கொண்டு கணவனை எதிர்பார்த்து நிற்பதைப் பார்த்து "ஊரே யாருக்காய் நீ போகிறாய் என்று கேட்டு பலவாறு பேசுவார்கள்" என்று தாய் சொல்லி புலம்புகிறாள்.

ஆண் துணை இழந்த பெண்கள் அழகாய் உடுத்தி பொட்டு வைத்து சந்தோசமாக வாழ்வதை இந்த சமூகம் மறுப்பது ஏன்? பண்பாடு, கலாசாரம் எல்லாம் பெண்களுக்குத்தான் ஒழுக்க விதிகள் ஆண்களுக்கு இல்லையா? மனைவி இறந்து விட்டால் கணவன் மறுமணம் முடிப்பதனை ஏற்றுக் கொள்வதும் கணவன் இறந்து விட்டால் மனைவி தனது சந்தோசங்கள் ஆசைகள் எல்லாவற்றையும் மூட்டைகட்டி வைத்துவிட்டு கவலையுடன் காலந் தோறும் கணவனை நினைத்து வாழவேண்டும் என்றும் சொல்லும் இச்சமூகத்தின் மனித நடத்தையின் வெளிப்பாடு என்பது ஒரு இரட்டை நிலைப்பாட்டைக் காட்டி நிற்கிறது.

யுத்தகாலத்தில் இராணுவத்தினரின் நடவடிக்கைகளினால் மக்கள் பெரிதும் பாதிக் கப்பட்டனர். இவ் அளிக்கையில் ஒரு பெண் இராணுவத்தினரின் பிடியில் சிக்குண்டு கணவன் இறந்து போனதைச் சொல்லி புலம்புகிறாள்.

**"பிடிபட்ட உன் கணவன் அடிபட்டு**
**நோகுறானோ அடிபட்டு, அடிபட்டு அவனுயிரை நீத்தானோ"**

என்ற வரிகள் இதனை எடுத்துக் காட்டுகிறது.

"மட்டுநகர் கண்ணகைகள்" துயருற்ற பெண்களுக்கு தைரியமூட்டி நம்பிக்கை கொடுப்ப தாக அமைந்தது. சமுதாய அடக்குமுறைக்கு எதிராகவும் வன்முறைக்குட்படுத்தும் வன்முறை யாளர்களுக்கு எதிராகவும் கேள்விகேட்க முடியாத சமூக அரசியல் சூழலில் இப் பெண்கள் கணவனை இழந்த பெண்ணின் மன உணர்வுகள், மன அழுத் தங்கள் என்பனவற்றை அளிக்கைக்கு ஊடாக தைரியமாக முன்வைத்தனர்.


கணவனை இழந்ததினால் கைம்பெண் எனக்கூறி இச் சமூகம் பெண்களை ஒதுக்குதல் மனித ஆசைகள் விருப்பங்கள் வெறுக்கப்பட்ட வர்களாய் வாழும் நிலை என்பன போன்ற அழுத் தங்கள் காலங்காலமாய் பெண்கள் மீது பிரயோகப் படுத்தப்படுகின்றமை பற்றியும் தெளிவுபடுத்தியி ருந்தது. அரங்கில் 3 பெண்களும் ஒவ்வொருவராக வந்து தமது உணர்வு நிலைகளையும் மன அழுத்தங்களையும் ஒடுக்குமுறை வெளிப்பாடுக ளையும் பாடல் மூலம் சொல்லி அழுவார்கள்.

**முதலாவது பெண்:** ஒரு நிமிடம் தரித்திருந் தால் உனதுயிர் தப்பியிருக்கும் மாய்ந்து மாய்ந்து வேகிறேனே மாளாத் துயரில் நானே இரண்டாவது பெண் கலிகாலத்து கோலமிது நான் கைம் பெண் ணெனக் கூறியே,

தான் வருவார் என்று நம்பியேதான் -
அம்மா பொட்டுமிட்டு நான் நடந்தால்
ஏச்சு பேச்சு எத்தனையோ
என் செவியை வந்து பொசுக்குதம்மா

**மூன்றாவது பெண்** : (மகளது நிலை கண்டு தாய் புலம்பியது.)

**மணம் முடித்த மறுமாதம்**
**மங்கை–நீயும்**
**கருத்தரித்தாய் பிறந்த மகனின்**
**முகம் காண**
**வந்து இன்னும் சேரல்லயோ**
**யார் வைத்த தீவினையோ தாய்**
**எந்தன்**
**வயிறெரிய தனியாய் நீயும்**
**அலைகிறாயே**



இவ்வாறு அழுது புலம்பும் பெண்களின் நிலையைக் கண்டு ஒருவர் எழுந்து இவர்களது கணவன் மாரின் உயிர்களைப் பறித்த கயவர்களுக்கு இவர்களது ஓலம் கேட்குமா? என்று சமூகத்தைப் பார்த்து வினா எழுப்புவர். அனைவரும் எழுந்து இவர்க ளது கவலை போக்கி ஆறுதல்படுத்தவும் ஒடுக்கு முறைகளை எதிர்த்துக் கேள்வி கேட்பதாகவும் குளிர்த்தி மெட்டில் பாடுவார்கள்.

**தந்தன தனாதன தானதன தனானா**
**விதவை எனும் பட்டமதை**
**சூட்டிடா தென்றும்**
**பெண்ணென்று**
**வாழ்ந்திடவே இடம் தாரும் தாரும்**

சமூக மனநிலையில் மாற்றம் ஏற்படாத வரை இப் பெண்கள் சாதாரண வாழ்க்கையைத் தொடர்வது கடினம் என்கின்ற நிலையில் இவர்க ளுக்கு நம்பிக்கை ஊட்டுவதாகக் குளிர்த்திப் பானைக்குள் கைவிட்டு நீரை எடுத்துப் புலம்பிய 3 பெண்களுக்கும் தெளிப்பது போல பாவனை செய்து குளிர்த்திமெட்டில் (வாழி) பாடுவர்

**"தீதறியா உன் கணவன் பிடிபட்ட கதை**
**கேட்டு**
**பிணை கேட்டு சென்றாயே பெண்ணே**
**குளிர்ந்திடுவாய்"**

என்று பாடி முதலாம் பெண்ணிற்கு நீரைத் தெளிப்பார்.

**"கொண்டு சென்ற துணைவனையே**
**காணவில்லை என்று நீயும் துயருற்று**
**அலைகிறாயே**
**தூயவளே குளிர்ந்திடுவாய்"**

என்று இரண்டாம் பெண்ணிற்கு நீரைத் தெளிப்பார்.

**"குத்தீட்டிப்போல சொல்லம்பு வந்தாலும்**
**தற்துணிவு கொண்டு தளராது வாழ்ந்திடுவாய்.**
**வஞ்சகர்கள் தலைகுனிய வாழ்வாங்கு**
**வாழ்ந்திடுவாய்.**
**மட்டுநகர் தன்னில் குறையாத தொழில்**
**உண்டு பெண்ணே நீ வாழ்ந்திடுவாய்"**

என்று பாடி புலம்பிய தாய்க்கும் மகளுக்கும் நீரைத் தெளிப்பர். இவ்வாறு அனைவரும் சேர்ந்து புலம்பிய மூன்று பெண்களையும் ஆறுதல் படுத்தி குளிரச் செய்கின்றார்கள். போரின் கொடுமையான சுமைகளைத் தாங்கும் பெண்களின் உணர்வுகளை வெளிப்படுத்தவும் இப் பெண்களை மன அழுத்தத்திற்கு உட்படுத்திய எமது கலாசார பண்பாட்டு நியாயங்களைக் கேள்விக்குட்படுத்தவும், இதனால் அவர்கள் அடைந்த அவல நிலைகள் பற்றி கடுமையாக விமர்சிக்கவும் இத்தகைய அவல நிலைகளை மறந்து இயல்பான வாழ்வு நிலைக்கு திரும்பும் வகையிலான மாற்று வழிமுறைகள் பற்றியும் முன்வைப்பதற்கான ஊடகமாக இவ் அரங்கு செயற்பட்டிருக்கிறது எனலாம்.

■ஆய்வாளர்: வி. தீபங்கா

**குறிப்பு :** நாடகமும் அரங்கியலும் சிறப்புக் கலைமாணிப் பட்டத்திற்கான ஒரு பகுதி தேவையினை நிறைவு செய்யும் பொருட்டு கிழக்குப் பல்கலைக்கழக கலை கலாசார பீடத்திற்கு ஆய்வாளர் அவர்களது பெண்களது விடயங்களைப் பேசும் சூரியாவின் "இது எமது படைப்பு" நூலான எட்டு நாடகங்களின் தொகுப்பு - ஓர் அரங்கியல் ஆய்வில் இருந்து பெறப்பட்டது.



# முத்தம்

மேலே பார்த்து
சிரித்து
குனிந்து
கீழிருந்த
என்
இறுமிய கன்னத்தில்
ரோஜா இதழைப் போல்
வண்ணாத்திப் பூச்சியின்
இறகைப்போல்
நிலாவின் ஒழியைப்
போல்

உன்
சிறிய உதடுகளினால்
பதித்தாய்
குஞ்சுவே

சிலுசிலு பையினுள்
சீனி ஐந்நூறும்
பால்மா இருநூற்றம்பதும்
மாரிநூறும்
பெறுவதற்கு
சோகம்

மகிழ்ச்சி
கோவம்
ஒன்றுமில்லை
எந்த உணர்வும்
வெளிப்படுத்தலும்
இன்றியே....
வரிசையில் வந்த அந்த
வாடிப்போன
ஆண் பெண்ணிடையே
நுழைந்து
எங்கிருந்தோ ஓடிவந்து
சோகையிழந்த கண்ணை
பெரிதாக்கி
பார்த்த பார்வையில்
ஆச்சரியம்........
நீண்ட என் கை விரலில்
ஒருகணமேனும்
தொங்கி....

மேலே பார்த்து சிரித்து
இறுகிய கன்னத்தில்
சிறிய உதடுகளைப் பதித்து
நீ தந்த
முத்தம்
குஞ்சுவே....

பாரிய நெருப்பு
எரிக்கின்றது என் இதயத்தை
கொழுந்துவிட்டு
கொழுந்துவிட்டு
மேலெழுந்த
தீச்சுவாலை
கருகியபுள்ளி
விதைத்ததைப் போல்
பற்றிப் பரவியது
படபடவென
பட்டென்று வெடித்தது

நுண் நரம்புகளையும்
பொசுக்கி சாம்பலாக்கி
கன்னம் மாத்திரம் அல்ல
என் முழு உடலும்
உன் சிறிய முத்தத்தின் மேல்
காலையானாலும்
மாலையானாலும்
இரவானாலும்
நித்திரையானாலும்
வாழ்க்கை ரசனையை
சிறிது சிறிது உறிஞ்சி
அனுபவிக்க
முடியாமல் செய்துவிட்டது

சுவாலை விட்டெரிய
சாம்பலுக்கு கீழ் ஒழிந்திருந்து
இருந்தாற்போல்
தீப்பிடிக்கும்.

தூரல் மழைபோல்
சின்னம் சிறிய மொட்டுப்போல்
உன் சிறிய உதடுகள்
குஞ்சுவே....
.............
.............

எங்கிருந்து
எப்படி
இவ்வளவு
நெருப்பு.....
.....
.....

■ - குமாரி குமாரகே -

# எல்லோருக்குள்ளும் ஒரு கதையுண்டு

"அந்தநேரம் யாரும் யாரையும் பார்க்க முடியாது. நாம குனிஞ்சு தூக்கினா நம்மளுக்கும் றவுன்ஸ் பட்டிடும். அதசொல்ல ஏலாது இப்ப நினச்சாலும் உடம்பெல்லாம் சவம் நாறும். நித்திரையிலெல்லாம் ஷெல் வரும் நாங்க இதப் பத்தி கதைக்கிறதில்ல. ரிவியில பாக்கக்குள்ள வீடிருந்த அடையாளமே இல்ல. அந்த வாழ்வு இனி இல்ல எண்டது உண்ம"



ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு கதைகள் வலிகளுடனும் வேதனைகளுடனும் சொல்வதற்கு முடியாமல் கேட்பதற்கு முடியாமலும்: ஆனா சொல்லச் சொல்ல நம்பிக்கை தரும் கதைகளும் உண்டு. எல்லாக் கதைகளையும் கற்பனைகளில் நின்று மட்டுமே சொல்வதில்ல. நடந்த சம்வங்கள் இழப்புக்கள் எல்லாாம் கதைகள் ஆகி, கதைகள் வரலாறாகியும் விடுகின்றன. இன்றுவரை அதிகாரங்களால் மறைக்கப்பட்ட பக்கங்கள் கதைகளாகவே இழந்தவற்றை ஞாபகப்படுத்தியும் தைரியமூட்டுபவைகளாகவும் இருந்து வருகின்றன. இந்தக் கதையும் நடந்து முடிந்தவற்றின் தொடர்ச்சியாய் வாழவேண்டும் என்னும் உந்துதலை தந்தவண்ணம் இருகின்றது.

போருக்குப் பின்னரான வாழ்தல் என்பது பல பெண்களை இரட்டைச் சுமைக்குரியவர்களாகவும் பாதுகாப்பற்றவர்களாகவும் மாற்றியுள்ளது. பெண்களை பொருளாதார ரீதியாக பலவீனப்படுத்தி உள்ளது. தங்கள் காணிகளை அடிப்படை வாழ்வாதாரங்களை

இழக்கச் செய்துள்ளது. தங்கள் சொந்த ஊர்களில் இருந்து வெளியேற்றியுள்ளது. தங்களின் அடுத்த தலைமுறைக்காக வாழவும் தங்களின் வரலாற்றினைப் பேசவும் உரிய சூழலினை பெண்கள் உணர்ந்துள்ளனர். "எப்படியம் நாங்கள் வாழத்தான் வேண்டும் நடந்து முடிஞ்சத எண்ணி அப்படியே இருக்கமுடியாது தானே" பெண்களுடனான இத்தகைய உரையாடல் முக்கியமானது. உறவுகளின் இழப்பு, தங்கி வாழ்பவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு, உடல் உறுப்புகளை இழந்தவர்கள், அனாதரவானவர்கள் என ஆரோக்கிய சமூக வளர்ச்சிக்கு சவாலாகவும் உள்ளது.

இந்நிலையில் வாழவேண்டும் என்னும் உந்துதலோடு போர் தந்த இழப்புகளோடு சரோஜா அவள் கணவரின் குடும்பத்தோடு தன் இரு குழந்தைகளோடும் வாழ்ந்து வருகின்றாள். அக் குடும்பத்தின் முழுப் பொறுப்பும் அவளுடையதாகிறது. இரு கண்களையும் ஒரு கையினையும் போர்க்காலத்தில் இழந்த அவள் கணவன் அவளுக்கு பக்கபலமாகவும் நம்பிக்கை அளிப்பவனாகவும் இருக்கின்றான். தெளிவான உரிய வேளையில் தகுந்த முடிவினை எடுக்கும் பெண்ணாக இருக்கிறாள். பாடசாலைக் காலங்களில் விளையாட்டாகவும் எப்போதும் சிரித்த வண்ணம் அலையும் வெகுளித்தனமான சரோவா என்று கேட்கலாம்.

சந்தோசமான காலங்களோடு வாழ்ந்தவள் தான் சரோ. வாழ்கை என்பது முன்பெல்லாம் அவளுக்கு சவாலாகத் தெரியவில்லை. போருக்கான ஆள்சேர்ப்பில் அவளும் சேர்க்கப்பட்டாள் சிறுவயதிலிருந்து இல்லத்தில் வாழ்ந்தவளை தேடவோ வெளியில் கொண்டு வரவோ எவரும் இருக்கவில்லை. மெல்ல மெல்ல போருக்குள் உள்வாங்கப் பட்டவள் போரினால் பாதிக்கப்பட்ட வரையே தன் வாழ்க்கைக் குரியவராக தெரிவு செய்தாள். யாழ்ப்பாணத் தில் வாழ்ந்த நிம்மதியான வாழ்வு இறுதிச் சண்டையில் இல்லாமல் செய்யப்பட்டது இறுதிப் போரில் தன் கணவனோடும் குழந்தையோடும் ஷெல்லில் இருந்தும் தோட்டக்களிலிருந்தும் தன் குடும்பத்தை பாதுகாத்து வந்து சேர்ந்திருக்கிறாள். "அந்தநேரம் யாரும் யாரையும் பார்க்க முடியாது. நாம குனிஞ்சு தூக்கினா நம்மளுக்கும் ரவுன்ஸ் பட்டிடும். அதசொல்ல ஏலாது இப்ப நினச்சாலும் உடம்பெல்லாம் சவம் நாறும். நித்திரையிலெல்லாம் ஷெல் வரும் நாங்க இதப் பத்தி கதைக்கிறதில்ல. ரிவியில பாக்கக்குள்ள வீடிருந்த அடையாளமே இல்ல. அந்த வாழ்வு இனி இல்ல எண்டது உண்ம. நாம வாழத்தானே வேணும். பொம்பிளப் பிள்ளைய ரவுன் ஸ்கூளில சேத்திருக்கம். அவள நல்லா படிப்பிக்கவேணும்" எனப் பேசும் சரோவில் தைரியத்தை மட்டுமே பார்க்க முடிகின்றது.






**காதல் என நான் நினைத்தது காமம் மட்டுமேயென ஆகி வயிற்றுள் முடங்கிற்று.**
**காதலைப் புரிந்துகொள்ள வயதில்லை, காமத்தை விளக்கும் பாடமுமில்லை, வயிற்றுள் வளர்வதை தடுக்க சட்டமுமில்லை.**

அன்பும் காதலும் அதன் பெருமிதமும் நெஞ்சை நிறைத்து, குருதி வழி சென்று, உடலின் கலமெங்கும் பரவி புளகாங்கிதத்தின் உச்சியில் அந்த வெண் நரம்புக்குட்டிகள் மிதப்பில் கிடந்தன.... கள்ளருந்தாக் குறைதான்,... ஒவ்வொன்றும் ஒரு சிறு பூனைக் குட்டி யாய் சுருண்டு நிம்மதியாய்த் தூங்க உடல் காற்றாய்ப் பறந்த காலம் அது. காதலாக்கும்.

காதல் என நான் நினைத்தது காமம் மட்டுமேயென ஆகி வயிற்றுள் முடங்கிற்று.

காதலைப் புரிந்துகொள்ள வயதில்லை, காமத்தை விளக்கும் பாடமுமில்லை, வயிற்றுள் வளர்வதை தடுக்க சட்டமுமில்லை.

சிறுமியும் இல்லாது பெண்ணும் இல்லாது ஆண்களால் துய்ப்பதற்கென்றே விடப்பட்ட இடைப் பருவம் எனச் சட்டத்தாலும் கைவிடப்பட்ட வயது.....

வீங்கும் வயிறும் தொடரும் பார்வைகளும். உளம் நெளிய, உடல் நெளிய, நெளியத் தொடங்கும் என் நரம்புகள் வெண்பாம்புக் குட்டிகளாய்

படமெடுத்தாடத் தொடங்கமுன் அவற்றைப் பிடித்துச் சுருட்டி பந்தாக உருட்டி விளையாட வந்தவன்தான் பரிபூரணன், என் மகன். என் சிறு மடியில் ஒரு சிறுமகன்.

காதலின் பெயரால் ஏமாந்து, சட்டங்களையும் சமூக நீதிகளையும் நம்பி




## குழந்தை கொலை வழக்கு;சந்தேக நபருக்கு விடுதலை

(மண்டூர் நிருபர்)

ஒன்றரை மாத குழந்தையை கொலை செய்ததாக குற்றம் சாட்டி தொடரப்பட்ட கொலை வழக்கில் எதிரியான பொலிஸ் உத்தியோகத்தர் [redacted] விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

புன்னைச்சோலை என்னும் இடத்தில் [redacted] ஆண்டு ஜூலை மாதம் 19ஆம் திகதி [redacted] என்ற தனது குழந்தையை கொலை செய்ததாக [redacted] என்பவர் பொலிசில் செய்த முறைப்பாட்டின் பேரில் பொலிசாரால் சந்தேக நபருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. இவ் வழக்கு விசாரணை மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்தினால் விசாரிக்கப்பட்டு வந்தது.

இக் கொலை வழக்கு மீதான தீர்ப்பு கடந்த செவ்வாய்க்கிழமை வழங்கப்பட்டது.

நியாயமான சந்தேகத்துக்கு அப்பால் அரச தரப்பினர் குற்றத்தை நிரூபிக்காததால் எதிரியை விடுதலை செய்வதாக இவ்வழக்கை விசாரணை செய்த மட்டக்களப்பு மேல் நீதிமன்ற நீதிபதி [redacted] தீர்ப்பு வழங்கினார்.

**தகவல் : 'வீரகேசரி'**

ஏமாந்ததில் போன நம்பிக்கையை மீட்டுக் கொடுக்க வந்தவன் - என் விளையாட்டுத் தோழனானான். என் அம்மா இருவருக்கும் தாயானாள்.

ஏமாற்றப்பட்டதுக்கு சாட்சியாக என் பிள்ளை, தந்தையைக் காட்டிக் கொடுக்கும் மரபணுக்களோடு பிறந்தவன்.

இந்த உலகினதும், வக்கிரம் கொண்ட அரக்கர்களான தன் தந்தை போன்றவர்களதும் ஆட்சியிலுள்ள இவ்வுலகத்தின் யதார்த்தம் புரியாது அயர்த்துறங்கிய என் மகன், எனக்கும் என் அம்மாவுக்கும் நடுவில் கிடந்த அவனது தொடுகையில், என் நரம்புகளும் அடங்கிக் கிடந்த ஒரு இரவில்....

நஞ்சு ஏற்றப்பட்டு கொல்லப்பட்டான்.

சாட்சியாவதற்கு முன்பே கொல்லப்பட்ட என் சிறு குழந்தை தன்னுடன் சேர்த்து தனக்கானதும் தன் தாய்க்கானதுமான நீதி கொல்லப்பட்டதை அறியான்... பத்து வருடம் காத்திருந்தும் ஏமாற்றப்பட்ட நீதி.

உலகின் சத்தியங்கள் அனைத்தும் செத்த தருணம் அது.

என்னுள் மீண்டும் ஒருநாகம் படமெடுத்து எழும்....

படபடவெனத் தெறிக்கும் நரம்புகள் - ஒவ்வொரு நுனியும் ஒரு வெள்ளைப் பாம்பாய் புழுவென நெளியும்.

பின்னர் ஒவ்வொன்றாக

**ஆயிரம் பத்தாயிரம் பாம்புகளின் புற்றாக உடல் கனக்கும்....**

■- கமலா வாசுகி

# ஒரு துளியேனும் உரிமை

“இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள்” “சிறுவர்கள் நம் நாட்டின் கண்கள்” என்றெல்லாம் வாயளவில் மாத்திரம் ஓதுகின்றோமே தவிர நம்மில் எத்தனை பேர் அந்தப் பிஞ்சு இதயங்களைப் புரிந்து நடந்திருக்கி றோம்? சிறுவர் உரிமைகள் சமவாயம் சிறுவர் தின நிகழ்வுகள் பற்றியெல்லாம் பேசுகின்ற நம்மவர் வாய்கள் அதே சிறுவர்களைக் கடிந்து வைதலைக் காண்கிறோம். நவ நாகரிகங்களாலும் நவீன தொழிநுட்பங்களின் பிரதி கூலங்களினாலும் நகர்ப்புற சிறுவர்கள் சீரழிவது கண்கூடு. பண்பாடுகளும் சிறந்த பழக்க வழக்கங்களும் சீராக இருப்பது கிராமங்களில்தான் என்பது நமது மனக் கணக்கு. ஆனால், பல்வேறு காரணிகளால் கிராமங்கள் தோறும் சிறுவர் உரிமைகள் சீரழிந்து போகின்றமை துரதிஸ்டவசமானது. குடும்ப வறுமை அறியாமை, பெற்றோர் இழப்பு, பெற்றார் பிரிவு என பல்வேறு காரணங்களை அடுக்கிக்கொண்டே போகலாம். சிறுவர்களை வேலைக்கமர்த்தல், கல்வியில் இருந்து இடை விலக்கல், பாலியல் துஸ்பிரயோகம் செய்தல் என சிறுவர்களுக்கெதிரான வன்முறைகள் தொடர்ந்த வண்ணமே செல்கிறது. இதனால் அச்சிறுவர்களின் எதிர்காலம் பாழ்பட்டுப்போகும் என யாருமே எண்ணுவதில்லை. இந்தக் கணத்திற்கான தமது சுகத்தை வருமானத்தை மட்டுமே சிந்திக்கிறார்கள்.

சிறுவர்களின் வாழ்வியலை மலர்ச்சியாக்கக் கூடியவை பல. அதில் முதன்மையானது பெற்றோருடன் கூடி வாழ்வது. ஆனால், இன்று கிராமப் புறங்கள் தோறும் இந்நிலை மாறி வருகிறது. குடும்ப வறுமை காரணமாகத் தாய் வெளிநாடு, தந்தை வெளியூர் வேலை எனச் சென்றுவிட பிள்ளைகள் நிர்க்கதியாக்கப்படுகிறனர். எந்தப் பிள்ளைக்காக பெற்றோர் மாடுபோல உழைக்க முற்பட்டார்களோ... அவர்கள் திரும்பி வரும் போது அதே பிள்ளை பிள்ளையாக இருக்கமாட்டாள்/ இருக்கமாட்டான் என்பதுதான் உண்மை.



பொதுவாக பெற்றோரிடமிருந்து நிர்க்கதியான பிள்ளைகள் ஏதோ ஒரு வகையில் பாதிப்படைவதைப் பத்திரிகை வாயிலாகவும் செய்தி மடல்கள் மூலமும் வலையமைப்பு மூலமும் காணக் கிடைக்கின்றது.

சில சந்தர்ப்பங்களில் சிறு வயதில் திருமணம் செய்துகொண்ட பெற்றோர் குழந்தை பிறந்தவுடன் பிரிந்து செல்வது, வேறு திருமணம் செய்தல், வேறு ஒருவருடன் தகாத உறவு வைத்தல் எனப் பல்வேறு

கோலங்களை இனங்காண முடிகிறது. தாய் இன்னொருவரை மறுமணம் செய்த பின் சித்தப்பாவை ஒரு பெண் பிள்ளை தன் தந்தை என்றே ஏற்று நடக்கும். ஆனால்.... அந்த சித்தப்பா அக் குழந்தையை தன் மகளாக ஏற்று நடக்கிறாரா? என்பது கேள்விக்குறி. இது சகலரையும் குறித்து நிற்கும் கருத்து அல்ல. பொருத்தமான இடங்களில் இவ் விளைவை ஏற்றிப் பார்க்கலாம். நேரடியாகவே நாம் இவ்வாறான சம்பவங்களைச் சந்தித்திருக்கலாம். மனைவியின் மூத்ததாரத்தின் மகள் என்ற காரணத்திற்காக ஒரு சிறுமியை படுக்கைவரை அழைக்கும் கயவர்களை என்ன செய்யவேண்டும்? ஆனால் சில சந்தர்ப்பங்களில் அதற்கு பெற்றதாயே உடந்தையாகி விடுவதும் உண்டு. ஆரம்பத்தில் பாலியல் துஸ்பிரயோகத்திற்கு ஆளாகும் போது மறுப்புத் தெரிவித்த சிறுமி பின்பு நாளாக நாளாக பெரியவர்களின் ஆசை வார்த்தையாலும் விரும்பியது கிடைப்பதாலும் உடல் சுகத்தை அனுபவிக்க முற்படுவதாலும் தன் நிலையை வெளியே சொல்ல மறுத்து விடுகிறது. இவ்வாறான சிறுமிகளின் வாழ்வியல் எவ்வாறு போகும்?

பூப்பெய்திய சிறுமி எனில் கர்ப்பம் தரிக்கும் போது மற்றவர்களால் கண்டுபிடிக்கப்பட்டு... அவளது வாழ்வு திசைமாறிப் போகும். சிறுவர் மையம், பாதுகாப்பு பிரிவு என அவள் பாதுகாக்கப்பட்டாலும் இழந்துபோன அவளது சிறுபராயக் காலத்தை யாராவது கடன் கொடுக்க முடியுமா? குற்றம் புரிந்தவன் ஊர் விட்டு ஊர், நாடுவிட்டு நாடு தப்பித்துக் கொள்வான். அதே சிறுமி, அவளின் நிலை?...... பெரியவளாகும் வரை அந்தப் பிஞ்சு வதைக்கப்படும்..... பெற்றோரை இழந்த சிறுமிகள் மட்டும் பாலியல் துஸ்பிரயோகத்திற்கு ஆளாவதில்லை. கருவில்

> **"சிறுவர்களின் வாழ்வியலை மலர்ச்சியாக்கக் கூடியவை பல. அதில் முதன்மையானது பெற்றோருடன் கூடி வாழ்வது. ஆனால், இன்று கிராமப் புறங்கள் தோறும் இந்நிலை மாறி வருகிறது."**

இருந்து வெளிவரும் போது பெண் குழந்தை என பொறிக்கப்பட்டதுமே வன்முறைகள் ஆரம்பிக்கின்றன. குழந்தைகள் பொதுவாக பாலியல் துஸ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்படுவது அவரது உறவுகளால்தான் என்பது கண்கூடு. எமது சந்ததியினரை நல்ல வழியில் கட்டியெழுப்ப வேண்டும் எனக் கனாக் காண்கின்ற பெரியவர்களாக இருப்பின் சிறுவர்களை நல் வழிப்படுத்த வேண்டும்.

வறுமையின் நிமித்தம் தாய் வெளிநாடு சென்றால் தந்தை தன் இளைய குழந்தைகளைப் பராமரிக்க மூத்த பிள்ளையை கல்வியில் இருந்து இடைவிலக்கி விடுகிறார். கல்வி சிறுவர்களின் வாழ்வினை மலர்விக்கும் மற்றொரு அம்சம். கிராமங்களில் ஆண் பிள்ளைகளை ஆடு மாடு மேய்த்தல், மில் தொழில், கூலிவேலை, வியாபாரம் என தொழில்களில் ஈடுபடுத்தி விடுகின்றனர். பெண் பிள்ளைகள் குழந்தைப் பராமரிப்பு, வீட்டுவேலை என நிறுத்தப்படுகின்றனர். இந்நிலை தொடரின் கல்வி இழந்த ஒரு சமூகத்தையே நாம் கட்டியெழுப்ப முடியும்.

சிறுவயதில் பெற்றோருடன் இணைந்து வாழாமை, இழப்பு இவ்விரண்டுமே சிறுவர்களின் வாழ்வினை சூனியமாக்கக் கூடியவை. அன்பு, காப்பு, கணிப்பு, உணவுத் தேவைகள் பூர்த்தி

செய்யப்படாத சிறுவர்கள் இலகுவில் மற்றவர்களின் கையாள்கைக்கு உட்படக்கூடியவர்கள். சிறுவர்களின் இக்கட்டான சூழ் நிலையினை தமக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளும் பெரியவர்கள் அவர்களை பிழையான வழிக்கு திசை திருப்பி விடுகின்றனர்..

சிறு குடிசைகளில் வசிக்கும் குடும்பங்களில் சில சந்தர்ப்பங்களில் பெற்றோரின் நடத்தைக் கோலங்களை பிள்ளை தன் கண்களால் கண்டு வெளியில் விமர்சிக்க கூடிய சந்தர்ப்பங்களும் உண்டு. நகர்ப் புறங்களில் CDக்கள், வலையமைப்புகள் மூலம் பாலியல் தொடர்பான காட்சிகளைக் கண்டு பிள்ளைகள் கெடுகிறார்கள் எனத் திட்டுகிறோம். கிராமங்களில்?.... சில மௌனங்களும் கேள்விகளும் உங்கள் சிந்தனைக்காகவே விட்டுச் செல்லப்படுகிறது. மனதினாலும் உடலினாலும் பாதிப்படையும் சிறுவர்களின் எதிர்காலம் குறித்து என்ன ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன?.. ஒரு சம்பவம் நடந்து விட்டால் மூன்று மாதம் ... ஆகக்கூடியது





ஆறு மாதம் ...... அதுபற்றி விமர்சனங்களும், விசாரிப்புக்களும், அக்கறைகளும், உதவிகளும், வழங்கப்படும். அதன் பின் அந்தச் சிறுவர்களின் நிலை குறித்து யாரும் சிந்தித்துப் பார்ப்பதில்லை.

சிறுவர்கள் தாமாகக் குற்றச் செயல்களை புரிபவர்கள் அல்ல. குற்றச் செயல்களுக்கு தூண்டப்படுபவர்கள். சாதாரண திருட்டாக இருந்தாலும் ஏதோ ஒருவகையில் அவர்கள் தூண்டப்பட்டே அக்காரியத்தில் இறங்கியுள்ளனர் என்பதை நாம் கருத்தில் கொள்ளவேண்டும்.

சிறுவர்களை எப்போதும் நாம் நமக்குச் சமனானவர்கள் போல நடத்தக்கூடாது. அவர்களின் இதயங்களில் இருக்கும் ஆசைகளை, தேவைகளை, நியாயங்களை அறிந்து... உணர்ந்து நாம் நடந்து கொள்ள வேண்டும். ஒவ்வொரு பெற்றோரும் பொறுப்புள்ள பெற்றோராய் நடந்து கொண்டாலே போதும். சிறுவர்களுக்கெதிரான வன்முறைகள் 95% குறைந்துவிடும். நாமும் சிறுவர்களாக இருந்தே வளர்ந்தவர்கள் என்பதை நினைவில் கொண்டு நாம் சிறார்களை நல்வழிப்படுத்தும் எண்ணங்களை நம்முள் விதைப்போம்.

■ சுதாகினி டெஸ்மன்




(புஸ்பா வீட்டுக்குள் நுழைகிறாள். பிள்ளைகள் படித்துக்கொண்டும் விளையாடிக் கொண்டும் உள்ளார்கள்)

**புஸ்பா:** தம்பி அப்பா வந்துத்தாரா..... (மகன் நிமிர்ந்து பார்த்துவிட்டு) பதில் பேசாமல் தலை குனிகிறான். மகள் இல்லையென்று தலை அசைக்கிறாள்

(பையை பக்கத்தில் கொழுவி விட்டு தையல் மெசினில் இருந்தபடி அதில் குவித்து வைத்திருந்த உடைகளை மணந்து மணந்து பார்க்கிறாள்.)

**மகள்:-** நானும் மணந்து பாத்தன் இப்ப உடுப்பில லாம்பெண்ண மணக்கல்ல

**மகன்:** இன்டைக்கும் அப்பா பத்திற விளக்கால எறிவாரா அம்மா உங்களுக்கு?

பாடல் ஒலிக்கிறது. (பெண் வெறித்துப் பார்த்தபடி இருக்கிறாள்)

**எத்தனை காலம்தான்**
**இழுபட்ட போலிவாழ்வு**
**வறட்டுத்தனங்களும்**
**வக்கிர எண்ணங்களும்**
**எத்தனை காலந்தான்....**

(வாசலில் சத்தம் ...... பிள்ளைகள் எட்டிப் பார்க்கின்றனர். அப்பா வருகிறார்.)

**மகள்:** டேய் அண்ணா ..... அப்பா வாறார் வாடா நாம பெரியம்மாட்ட போவம். நேற்று மாதிரி விளக்கால அம்மாவுக்கு அப்பா எறிஞ்சாலும் எறிவார்.
**மகள்:** (தாயிடம் ஓடுகிறாள்) "அம்மா இன்றைக்கு கரன்ட் போனா விளக்கு கொழுத்தாதீங்கம்மா"

(பயத்தில் பிள்ளைகள் முழிக்க அப்பா வீட்டிற்குள் நுழைகிறார். அம்மா தையல் மெசினில்)

**அப்பா:** என்ன வாத்தியாரம்மா..... இன்றைக்கு நான் வரமுந்தி தந்திரமா வந்தாச்சிபோல..

(காலால் கதிரையை உதைக்கின்றான். மகள் வெளியே ஓடுகின்றாள். பெண் கணவனை பார்த்து விட்டு தைக்கின்றாள்.)

**பாடல்:**
**விடியல் இன்னும் உனக்கில்லையா .....**

**வேதனை தீயில் உன் வாழ்வா.**

(ஜன்னல் ஊடாக அயலவர்கள் இவ் வீட்டைப் பார்க்கின்றனர். அவர்கள் குரல்கள் ஒலிக்கின்றன.)

**குரல்:** ரீச்சர் வேலையில இருந்த பிள்ளைய சந்தேகப்பட்டு வேலையில் இருந்து நிப்பாட்டி விட்டு இன்னும் வாத்தி யம்மா என்ற நக்கல் இவனுக்கு.

**குரல்:** தையல் மெசின் ஒன்று வாங்கி அந்தப் பிள்ள வீட்டோட இருந்து உழைக்கிது அதையும் விடுறான் இல்லையே?

(வீட்டிற்குள்)

**கணவன்:** என்னடி நான் கதைக்கிறன் நீ பேசாம இருக்கிறா...ம்..ஊர் மேஞ்ச களைப்போ....

(வெளியில்)

**குரல்:** பொம்பிள உழைக்கப் போனா ஊர் மேயிர என்று பெயர் தானே...

**மனைவி:** அப்ப நீங்க....

**கணவன்**: பொத்து வாய..... நான் ஊரெல்லாம் மேயல்ல எனக்கு பிடிச்ச பொம்பிள இருந்தா நான் போவன் வருவன் .....
தைக்கிற என்ட கொழுப்பாடி உனக்கு. எந்தக் கடக்காரண் தந்த தைரியம்... நாக்கு நீளுது .

(பெண்ணிற்கு அடித்தல் பெண் கீழே விழுதல்)

**குரல்:** பாழாய்ப் போவான் ... தொலைஞ்சு போவான்... தைச்சாவதுஅந்தப் பிள்ள பிள்ளைகளை வளக் குது, படிக்க வைக்குது. அதையும் கெடுக்கான் பாவி.

**குரல்:** என்னன்ணன் சரியாப் போட்டு கணபதி புஸ்பாவிற்கு அடிச்சுப் போட்டான் போல பாத்திட்டு இருக்கிறீங்களே போய் விலக்கக் கூடாதா.

**குரல்:** ம்... புருசன் பொஞ்சாதி சண்டைக்குள்ள நாம எப்படி போற....

**குரல்:** எத்தனை தடவை அந்தப் பிள்ளை பொலிசுக்குப் போச்சு, குடும்பச் சண்டை எண்டு அவங்க சேத்துத்தான் வைச்சாங்க.

**மேடையில்....**

**பெண் -1:** இன்னும்...பொலிசா...ஐயோ... பொலிசா

**பெண்-2:** ஏன் என்னதான் நடக்குது அங்க...

**பெண் - 3:** அங்க பொம்பிளயளுக்கெண்டு ஒரு பொம்பிள டெஸ்க்கும் இருக்காமே

**பெண்-1:** பொம்பிள டெஸ்கா ஆம்பிள டெஸ்கா....

**பெண்- 2:** டெஸ்கா அது என்ன...?

**பெண்- 4:** அது பெண்கள் சிறுவர்கள் சொல்லுகின்ற பிரச்சனைய கேட்கிறத் துக்காகவும், கதைக்கிறத்துக்காகவும் பொலிசுக்குள்ள புதுசா ஒரு மேசையும் ஒரு பிரிவுமாம்....

**பெண் - 2:** எல்லாம் போடுறது காக்கிச் சட்டையத்தான். அத பார்த்தாலே பயம் தான்....

**பெண் - 2:** புருஸனுக்கு சந்தேகம் வந்தா அவங்களும் சந்தேகமாகத்தான் பொம்பிளய பாக்காங்க

**பெண்-1:** புஸ்பாக்கும் அதுதான் நடந்ததோ...

**பெண் -2:** ஓம்...ஓம்.....

**பெண் -3:** அந்த மேசைக்கு கிழாலயும் ஏதாவது சம்திங் குடுக்காங்கலோ...

**பெண் -2:** பாவம் புஸ்பாக்கும் அதுதான் நடந்ததோ...

**பெண்-4:** எண்டாலும் எல்லாப் பொலிசை யும் மோசம் என்று சொல்லேலா தானே...

**பெண் -2:** ஓம்... ஓம்...

**பெண்-2:** கூடவே இருந்து உதவி செய்யிற எத்தனையோ பொலிச நானும் பாத்திருக்கன்....

**பெண்-111:** "அது சரி பொம்பிளயல பொங்கி எழு பொங்கி எழு எண்டு ஆம்பிளயளும் கூட்டத்தில கதைக் காங்களே..,

**பெண்-11:** அது புருசனுக்கு பொங்கி போடச் சொல்றாங்களோ....

**பெண்-111:** .......இல்லாட்டி புருசனுக்குப் பொங்கிப் போட்டுத்துப் போய் பொங்கி எழச் சொல்றாங்களோ...

(வீட்டிற்குள் இருந்து சத்தம் கூக்குரல் வருகிறது...... பெண் சிவப்பு சீலையால் மூடப் பட்டிருக்கிறாள் கணவன் சுற்றி சுற்றி வருகிறான்) மகள் வெளியே ஓடுகிறாள்.

**மனைவி:** ஐய்யய்யோ.....

**மகன்:** அம்மாவ பத்தவைச்சுப் போடா தீங்க அப்பா... நானும் அம்மாவும் வீட்ட விட்டுப் போறம். அம்மா வாம்மா....

**கணவன்:** இனிமேல் இந்த வீட்டில இருந்தியெண்டா உயிரோடயே உன னக் கொழுத்திடுவன். நீதான் பத்திச் செத்தா எண்டு கதை சொல்லுவன். போடி வெளியே.

**குரல்:** பொலிசுக்கு போய் இவன வீட்ட விட்டு துரத்தலாம் தானே.

**குரல்:** அதெப்படி முடியும் இந்த வீடு வளவெல்லாம் கணபதிர பேரிலதானே இருக்கு ... இவள் தான் வெளியில போகனும் ......

(வீட்டில் இருந்த கணவன் மனைவியை இழுத்து வந்து வெளியே எறிகிறான்)

**கணபதி:** இவள் என்ட பொஞ்சாதி அடிப் பன் கொல்லுவன் கேட்க ஆருக்கும் உரிமையில்ல.

பாடல்:-

**வட்டங்கள் போட்டெம்மை -**
**வளைத்திட்டார்**
**எழுந்து நிற்க முடியாமல்**
**வளைந்து விட்டோம் நாமம்மா .......**
**வளைந்து விட்டோம் நாம்மம்மா**
**விழிக்க எழுப்பும் குரலாலே**
**கேள்விகள் கேட்க**
**எழுந்திடுவோம்.**

**விழித்துக் கொள்வோம்**
**விழித்துக் கொள்வோம்**
**வேதனை எங்கள் காலடியில்**
**நம்மை உணர்ந்தவர் நாம்**
**தானே...............**
**நம்மை உணர்ந்தவர் நாம் தானே**
**நெருப்பாய் நாமும் மாறிவிட்டால் -**
**நம்மை**
**எரிக்க யார் துணிவார்.**

**மனைவி:** சே.... விடு என்ன..... மனுசனா நீ... மிருகம்.... கேக்க ஆரும் வரமாட் டாங்க என்ர தைரியம் உனக்கு...

(பாடல்)

**நெருப்பாய் நாமும் மாறிவிட்டால் -**
**நம்மை**
**எரிக்க யார் துணிவார்.**

**பெண்:** எனக்கு உரிமை இல்லையா , என்னைப் பத்தி கேக்க எனக்கு உரிமை இல்லையா...

**கணபதி:** பொத்து வாய

(வீட்டிற்குள் இருந்து குரல்)

**குரல்-I:** கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருசன்

**கணபதி:** தெருவில நின்று கதைக்கிறீயே நீ ஒரு பொம்பிளயா... வாடி உள்ள (உள்ளே இழுக்கிறான்)

**பெண்:** (தள்ளி விடுகிறாள்)
உன்ன இந்த வீட்ட விட்டு வெளியே அனுப்பி விட்டுத்தான் நான் உள்ள வருவன் ...... போகிறாள்.

கவிதை:
**பெண்ணே**
**"உன் பாதங்கள்**
**பூமியில் அல்ல**
**பூக்களில் நடக்க வேண்டும்"**
**என்ற**
**புளித்துப் போன வார்த்தைகளில்**
**இன்னும் ஏன் மயக்கம்**
**கற்பனையில் கண்களை**
**மிதக்கவிட்டு**
**பாதங்களை முட்களில் ஏன் பதிக்கின்றாய்**
**கற்பனையில் கண்களை**
**மிதக்கவிட்டு**
**பாதங்களை முட்களில் ஏன் பதிக்கின்றாய்**
**(பெண் வீட்டை விட்டு வெளியேறுகிறாள்)**
**தெருவில்.....**

**வயதான பெண்:**
(பெண்ணை நிறுத்துகிறாள்)
எங்க மனே புள்ள புஸ்பா போறா...

**பெண்:** பொலிசுக்குத்தான் ஆச்சி

**ஆச்சி:** நீ பொலிசுக்குப் போனாலும் உன்னால அவன வீட்ட விட்டு வெளியே அனுப்ப முடியாதே...

பாடல்:
**தயக்கம் வேணாண்டி – பெண்ணே**
**கலக்கம் வேணாண்டி**
**எழுந்து நில்லேன்டி – பெண்ணே**
**துணிந்து நில்லேண்டி**

**ஆச்சி:** என்ன செய்ர நீதான் அடங்கிப் போகனும்....

**பெண்:** இல்ல ஆச்சி

**வயதான பெண்:** பொம்பிலயால ஒன்றும் செய்ய ஏலாதடி

**குரல்:** எங்களால ஒன்றும் செய்ய ஏலாம இல்ல பாட்டி எங்களாலயும் முடியும்

**மனைவி:** அவங்கட மனசுக்கு மதிப்பு கொடுத்தம். ஆனா அவங்க எங்கட மனச மிதிக்காங்க...

**கிழவி:** திரும்பவும் உன்ன பொலிஸ் சேத்து வைச்சா என்ன செய்வ.... மனே...

**பெண்:** பழைய சட்டம் மாதிரி இல்ல ஆச்சி... இப்ப... இனி நாங்க பொலிசுக்குப் போகத்தேவல்ல.

**ஆச்சி:** பின்ன எங்கடி போகப் போறா...

**பெண்:** கோட்டுக்கு ஆச்சி...

**ஆச்சி:** அப்புக்காத்து இல்லாமலாடி...

**குரல்:** எங்கட பிரச்சனய நாங்க நேரடியாக நீதவான் நீதிமன்றத்துல முறையிடலாம்.

**ஆச்சி:** என்றாலும் திரும்பி வந்து எங்கடி மனே இருப்பா?

**பெண்:** என்ட வீட்டதான் ஆச்சி...

**குரல்:** குற்றம் செய்தவர்தான் இப்ப வீட்ட விட்டு வெளியேறனும். இது..... புதுச்சட்டம்.

**ஆச்சி:** இன்றைக்கு அடிக்கல்லியேடி அவன். காயத்தையும் காணல்ல என்னென்று காயத்த காட்டப்போறா ....

**குரல்:** அவன் அடிக்கத் தேவல்ல ஆச்சி கொலை பயமுறுத்தல் பண்ணினாலும் குற்றம்தான்.

**பெண்:** கொஞ்ச நாளா என்ர மனசு, மூள எதுவுமே சரியில்ல... யோசிச்சு யோசிச்சு பைத்தியமா இருக்கன்.

**குரல்:** இது கூட காணும். இதுவும் குற்றம் தான். குற்றம் செய்த ஆக்கள் வீட்டிற் குள்ளும், அடிபட்ட பொஞ்சாதி, பிள்ளைகள் தெருவில அலைகிற கதை இனி இல்ல ....

**(கூட்டம் கூடுகிறது)**

**ஒருவர்:** ஓம் பிள்ள புதுசா வந்த சட்டம் எல்லாம் எல்லோருக்கும் தெரியனும்.

**குரல்:** இனி பதிவு இல்ல, சாட்சி இல்ல, காயம் இல்ல என்று எந்த ஆம்பிள யும் பொம்பிளையோட வாழ்ந்து புள்ளயப் கொடுத்திட்டு கை கழுவித் துப் போகேலா ....

**ஆச்சி:** ம்... இனி பொம்பிளயல் எல்லாம் கோட்டுலதான் நிற்பாளுகளாக்கும் .... குடும்பம் நல்லாத்தான் உருப்படும்.

**மனைவி:** அப்படி இல்ல ஆச்சி. நாங்க குடும்பத்த மதிச்சம்..... புருசன்ர கருத்த மதிச்சம்.

**குரல்:** ஆனா இத விளங்காம எங்கள கட்டினவனுகள் எங்கட கருத்த மதிக் காததால நாங்க கோட்டு வாசல மிதிக்கம்.

(வெளியில் இருந்த பெண் முன்னிற்கு வந்து கவிதை சொல்ல மனைவி,பின் அனைவரும் ஒருவர் பின் ஒருவராய் வெளியே சென்று கூட்டத்துடன் கலத்தல்.

**கவிதை:-** வா தோழி வாழி வா.
சூரியனை நோக்கும் மலர் போல
ஒளியை நோக்கி நீ வா
உன் ஒரு கை ஓசைக்கு
ஓசை தர
மறுகையாய்
நான் இங்குள்ளேன்
நாம் எழுப்பும் ஓசைகளால்
உலகம் விழித்தெழும்
காலம் ஒன்று வரும்
காலம் ஒன்று வரும்

**கலாசாரக் குழுவினர்**

- கல்யாணி
- சசிரேகா
- விவேகா
- பிறேமானந்தி
- நர்மதா
- தமிழினி
- சுபாங்கி
- நிலக்சினி
- துஸ்யந்தினி

*நாடகப் பிரதி, எழுத்துரு – விஜயலட்சுமி சேகர்*

**குறிப்பு** – பெண்கள் சிறுமிகள் எதிர் கொள்ளும் வன்முறைகளுக்கெதிராக செயற்பட வேண்டுமெனில் பெண்கள் வாழும் சமூகத்துடன் நாம் பேசத் தொடங்க வேண்டும். அந்த வகையில் சமூகத்துடன் ஓர் தொடர்பாடலை ஏற்படுத்தும் முகமாக தயாரிக்கப்பட்டதே இவ் வீதி நாடகம்.

# எனது நேரம்! எனது வேலை! எனது பெறுமதி!

**பராமரிப்பு, முறை சாராப் பொருளாதாரங்களில் பெண்களின் பங்கை அங்கீகரித்தல்**




பெண்கள் ஈடுபடும், பராமரிப்பு வேலைகள் முறை சாரா தொழில்கள் ஆகியவை உலகம் முழுவதுமுள்ள வளர்முக நாடுகளின் பொருளாதாரத்தில் மிக முக்கிய பங்கு வகிக்கின்றன. உதாரணமாக இலங்கையில் உழைப்பாளர் தொகையில் அதிக எண்ணிக்கையானோர் முறைசாராத் தொழிலாளர்களாக உள்ளனர். 2010 ஆம் ஆண்டு புள்ளி விபரத்தின்படி முறை சாராத் தொழிலாளர்களர்கள் 62.6% ஆகும். இதில் 86.5% விவசாயத்துறையைச் சேர்ந்தவர்களாகும். இருந்த போதிலும் இவை அங்கிகரிக்கப்படுவதோ அவற்றின் பெறுமதிகள் கணிக்கப்படுவதோ இல்லை.

"எனது பிள்ளைகள் குழந்தைகளாயிருந்தபோது நான் அவர்களை வயலுக்கு கொண்டு போய் ஏணையில் கிடத்திவிட்டு வேலை செய்வேன் நான் வேலை செய்யாவிடில் எல்லோரும் பட்டினிதான்" என மட்டக்களப்பில் வயலில் வேலைசெய்யும் குணலெட்சுமி எனும் பெண் கூறினார்.

முறைசாராப், பராமரிப்பு பொருளாதாரங்களில் பெண்களின் பங்கை அங்கீகரிக்க வேண்டும் என்ற பிரசாரம் ஒன்றை மேற்கொண்டு வரும் சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையத்தினர் குணலெட்சுமியைப் போன்று விவசாயம், மீன்பிடி, வீட்டுத்தோட்டம், வீட்டு வேலைகள் போன்ற கடினமான தொழில்களில் ஈடுபடும் பெண்களை நேரடியாகச் சந்தித்தபோது அவர்களிற் பலர் மேற்கண்டவாறே தெரிவித்தனர். முறைசாராப் பொருளாதாரம் என்பது முறைசார் பொருளாதாரத்திற்குச் சமாந்தரமாகத் தொழிற்படுவதாகவும் அதற்குப் பலவகைகளில் பங்களிப்பதாகவும் உள்ளது. இதில் ஈடுபடுவோர் தொழிலாளர் நல உரிமைகளும், சமூகப் பாதுகாப்பும் அற்றவர்களாக உள்ளனர்.

பராமரிப்புப் பொருளாதாரம் என்பது மறு உற்பத்தி உணவு அளித்தல் குடும்ப அங்கத்தவர்களதும், குடும்பத்தைச் சுற்றியிருப்போருக்கும் உணவளித்து பராமரித்து நல்வாழ்வை உறுதிப்படுத்துவதாகும். அத்துடன் ஆரோக்கியமும் ஆக்கத்திறனும் கொண்ட உழைப்பாளர் படையை உற்பத்தி செய்வதன் மூலம் முறைசார் பொருளாதாரத்திற்கு பங்களிப்பதுடன் குடும்பங்கள் அதிகளவான வறுமைக்குள் அமிழ்ந்து விடாமல் பாதுகாக்கிறது. ஆனால் இது தேசிய புள்ளி விபரங்களில் சேர்க்கப்படுவதோ கொள்கை உருவாக்கங்களில் அங்கீகரிக்கப்படுவதோ இல்லை.

எனவே முறைசாரா, பராமரிப்பு பொருளாதாரங்களில் ஈடுபடும் பெண்களது உழைப்பை அங்கீகரித்து நல உரிமைகளையும், சமூகப் பாதுகாப்பையும் உறுதிப்படுத்துமாறு கொள்கை வகுப்போரையும் அரசையும் கோரும் வகையிலானதொரு பிச்சாரமானது மட்டக்களப்பு மாவட்டத்தில் சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையத்தினரால் இவ்வாண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ■

# பராமரிப்பு, முறைசாரா பொருளாதாரத் திட்டம் தொடர்பான

## முக்கிய குறிப்புகள்

**இ**ன்று உலகில் எல்லா நாடுகளிலும் குறிப்பாக வளர்ச்சியடைந்து வரும் நாடுகளில் முறைசாரா தொழிலாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

பழைய பொருளாதார அணுகுமுறை - அலுவலகம், கடைகள், தொழிற்சாலைகள் என்பவை வேலை நடைபெறும் இடங்களாய் இருந்தன என முன்பு காட்டியது. ஆனால் வீதி யோரங்கள், வீடு கொல்லைப்புறம் ஆகியவை யும் தற்போது வேலை இடங்களாய் மாறி விட்டதை புதிய யதார்த்தம் எடுத்துக் காட்டு கின்றது.

வேலை செய்யும் மக்கள் தொகையில் பிலிப்பைன் நாட்டில் 50% ஆகவும், இந்தோனேசியா வில் 70% ஆகவும், இந்தியாவில் 90% இற்கும் மேலான முறைசாரா தொழிலாளர்கள் உள்ளனர். சர்வதேச தொழில் நிறுவனத்தின் 2008 (ILO 2008) அறிக்கையின்படி, ஒவ்வொரு 10 பேருக் கும் 7 பேர்தொழில் உரிமை அற்றவராகவும், பொருளாதார நெருக்கடிகளின் போது எத்தகைய பாதுகாப்பற்றோராகவும் உள்ளனர்.

**முறைசாரா பொருளாதாரத்தில் பெண்கள்:**

(ILO 2008) தெற்காசியாவில் 15.5 % பெண்கள் மட்டுமே சம்பளம் பெறுகின்ற வேலை யாட்களாக உள்ளனர்.

இலங்கையில் முறைசாரா தொழிலாளர் கள்: 61% பெண்களும் 69% ஆண்களும் முறைசாரா தொழிலாளர்களாக உள்ளனர்.

முறைசாரா தொழில்களில் ஆண்களுக் கும் பெண்களுக்கும் வேறுபட்ட சம்பளங்கள் வழங்கப்படுகின்றன. ஆண்கள் பெண்களைவிட 1.45 தடவை அதிகளவான சம்பளம் பெறுகின்ற னர்.

**பராமரிப்பு பொருளாதாரத்தில் பெண்கள்**

பராமரிப்பு பொருளாதாரம், மீள் உற்பத்தி பொருளாதாரம் பற்றிய எண்ணக்கரு பத்து வருடங்களுக்கு முன்னர் பெண்ணிய பொருளா தார வல்லுனர்களால் அறிமுகப்படுத்தப்பட்டது. தற்போது பெண்களின் பொருளாதார அபிவிருத்தி, வறுமையை குறைத்தல் ஆகியவை பற்றி விளங் கிக் கொள்வதற்கு உதவும் ஒரு எண்ணக் கரு வாக இது ஐக்கிய நாடுகள் சபையாலும் உலக தொழிலாளர் நிறுவனத்தினாலும் கருதப்ப டுகின்றது.

பராமரிப்பு வேலையானது முக்கியமான தொன்றாக உலகளவில் அங்கீகரிக்கப்பட் டுள்ளது. உதாரணமாக எயிட்ஸ் உருவாக்கும் சுகாதார பிரச்சினைகள் பராமரிப்பு பொருளாதாரத் தின் முக்கியத்துவத்தை மேலும் அதிகரித் துள்ளன. உலகிலே 66% ஆன பெண்களின் வேலை ஊதியமில்லாத மீள் உற்பத்தி வேலை யாக உள்ளதாக UNDP மதிப்பிட்டுள்ளது.

**மட்டக்களப்பு மாவட்டத்தில் வறுமை**

- இலங்கையின் ஏனைய பகுதிகளுடன் ஒப்பிடும் போது வடக்கிலும், கிழக்கிலும் தனிநபர் வருமானம், சுகாதாரம், கல்வி ஆகியவை தொடர்ந்து குறைவாகவே உள்ளன. (Sarvananthan, 2007; UNOPS ARU, 2010).

- 2012ம் ஆண்டு மனித அபிவிருத்தி அறிக்கையின் படி[1], மனித அபிவிருத்திச் சுட்டி, பால்நிலை அசமத்துவச் சுட்டி ஆகியவை குறைவாக உள்ள இலங்கை யின் முதல் மூன்று மாவட்டங்களில் மட்டக்களப்பு மாவட்டமும் ஒன்றாக உள்ளது.

- மட்டக்களப்பில் 2006/2007 இல் 10.7% ஆக இருந்த வறுமைநிலை 2009/2010 இல் 20.3% ஆக அதிகரித்துள்ளது.

- தனிநபரின் வாழ்க்கை நிலை, கல்வி, சுகாதாரம் ஆகியவை உள்ளடங்கியதான பல் பரிமாண வறுமை(MDPH) கணக்கீட்டின் படி, யாழ்ப்பாண மாவட்டம் அதிகூடியதான 11.5% பல் பரிமாண வறுமையையும் (MDP) அதற்கு அடுத்த படியாக மட்டக்களப்பு மாவட்டம் 11.5% பல் பரிமாண வறுமையையும் கொண்டுள்ளதாக 2012ம் ஆண்டு மனித அபிவிருத்தி அறிக்கையில் ஆராயப்பட்டுள்ளது.


- 5 வயதுக்குட்பட்ட நிறை குறைந்த சிறுவர்களைக் கொண்ட மாவட்டங்களில் மட்டக்களப்பு மாவட்டம், முதல் 4 மாவட்டங்களுக்குள் ஒன்றாக உள்ளது.

- சிசு மரணமானது 2003 ஆம் ஆண்டு 21.1 (1000 குழந்தை பிறப்பில் ) ஆக இருந்தது 2007 ஆம் ஆண்டு 25.1 ஆக அதிகரித்துள்ளது.

- பிரசவத்தின் போது தாய் மரணம் ஏற்படுவதில் (100,000 உயிருடன் பிறக்கும் குழந்தைக்கு 77.4 தாய் இறப்பு) மட்டக்களப்பு மாவட்டத்தில் இரண்டாம் இடத்தில் உள்ளது. கிளிநொச்சி மாவட்டம் முதலிடத்தில் உள்ளது.

- பால்நிலை அசமத்துவச் சுட்டியின்படி, அசமத்துவமானது மட்டக்களப்பு மாவட்டத்திலேயே மிக உயர்வானதாகக் (0.807) காணப்படுகின்றது. பாராளுமன்றத்தில் பெண்களின் பிரதிநிதித்துவம் முற்றிலும் இல்லாமை, உழைப்பாளர் படையில் குறைந்தவீதம் (24.4%) ஆகியவை இதற்குக் காரணமாகும். பிரசவத்தின் போதுதாய் மரணம் (100,000 உயிருடன் பிறக்கும் குழந்தைக்கு 77.4 தாய் இறப்பு) இளவயது கருவளம் (15-19) வயதுக்குட்பட்ட ஒவ்வொரு 1000 பெண்ணுக்கு 34.4) ஆகியவை ஏனைய மாவட்டங்களை விட மட்டக்களப்பில் அதிகமாகும்.

- மட்டக்களப்பு மாவட்டத்தில் 25,727 பெண் தலைமை தாங்கும் குடும்பங்கள் உள்ளன. அவர்களில் அதிகமானோர் சமுர்த்தி, PAMA (PMA) போன்ற சமூக நலன்புரி சேவைகளையே பிரதானமான வருமானமாகக் கொண்டுள்ளார்கள். (CARE 2008).



**(Footnotes)**

[1]http://hdr.undp.org/en/reports/national/asiathepacific/srilanka/Sri%20Lanka%20Human% 20 Development % 20 Report%202012.pdf

# நானும் ஒரு சிறுமியாக.....



**நா**ன் பிறந்த சில நாளிலே
காதினில் தோடுகள் இடப்படுகின்றன
என் முடி வளர்க்கப்படுகின்றது –தெரிகிறது
நான் அண்ணாவிலிருந்து வேறுபட்டவளாக

அம்மாவினால் வீட்டுவேலைகள் செய்யச் சொல்லி
அடிகளை வாங்கியவளாக
அண்ணாவைப் போன்று சுற்றித் திரிய
சுதந்திரங்கள் மறுக்கப்பட்டவளாக

அன்னையும் தந்தையும் அனுமதிக்கின்றனர் –நான்
மரமேறி மகிழ்வாய் விளையாட

அவையும் ஓரிரு ஆண்டில் –என்னிடமிருந்து
பறிக்கப்படும் என்று தெரியவில்லை

அண்ணாவின் நண்பர்களுடன் –எப்பொழுதும்
நானும் சிறு நண்பியாக
விளையாடித் தீர்க்கிறேன்
இவையும் சில வருடங்களுக்கே

விளையாட்டுப் பொருட்கள் என்று கூறி
சமையல் பொருட்களை தந்தபோதெல்லாம்
நான் நினைக்கவில்லை
சமைப்பதற்காக வளர்க்கப்படுகிறேன் என்று

■ சி. ஜெயப்பிரதாப்



# வளர்ந்துவரும் ஓர் பெண் மென் பயன்பாட்டு உருவாக்குனர் தொழில் முனைவாளரின் கதை

## *Ideamart – Digit Awards 2013* விருதினை வென்றJ. F. பஸ்னாவுடனான நேர்காணல்

Digit IT சஞ்சிகை டயலொக் ***Ideamart*** உடன் இணைந்து நடாத்திய சிறந்த அலைபேசி மென் பயன்பாட்டு உருவாக்குனர் மற்றும் தொழில் முனைவாளர்க்கான அங்கிகார நிகழ்வு 12 ஆம் திகதி ஒக்டோபர் மாதம் டயலொக் Future World அரங்கத்தில் நடை பெற்றது. குறிப்பாக அங்கிருந்த ஒருவரால் மட்டுமே குழுமியிருந் தோரை அசத்த முடிந்தது. அவராலேயே மிக அதிகமான மென் பயன்பாடுகள் சமர்ப்பிக் கப்பட்டிருந்தது. மிகக் குறுகிய காலத்திற்குள் அவரால் 16 மென் பயன்பாடுகள் ***Ideamart*** இற்காக உருவாக்கியிருந்தார்.

நாம் ஜிப்றி பாத்திமா பஸ்னாவிடம் அவருடைய வெற்றிக்குப் பின்னாலுள்ள கதையினை அறிந்துகொள்ள அவரோடு நேர்காணல் மேற்கொள்கின்றோம்.

கே: **வணக்கம் பஸ்னா! உங்களுக்கு** Ideamart – **Digit Awards 2013 விருதினைப் பெற்றமைக்கு வாழ்த்துக்கள். எங்களுக்கு உங்களைப் பற்றிக் கூறுங்கள்.**

**ப:** நான் இலங்கையின் கிழக்குப் பகுதியைச் சேர்ந்த ஒருவர். எனது சொந்த இடம் மட்டக்களப்பு ஓட்டமாவடி. நான் எனது பாடசாலை வாழ்க்கையை மட் /பாத்திமா பாலிகா மகா வித்தியாலயத்தில் ஆரம்பித்து உயர் தரத்தினை மட் /ஓட்டமாவடி மத்திய கல்லூரியில் நிறைவு செய்தேன். தற்போது நான் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் கணிப் பொறியியல் (Computer Engineering) துறையில் இரண்டாம் வருடத்தில் கல்வி கற்று வருகின்றேன். எனது குடும்பத்தைப் பற்றிக் கூறினால், எனது தந்தை ஓர் மின்னியல்

தொழிநுட்பவியலாளர். எனது தாயார் இல்லத்தரசி எனக்கு மூன்று சகோதரிக ளும் ஒரு சகோதரனும் இருக்கின்றார்கள்.

**கே: Idea Mart இற்கான உங்களது வெளிப்பாடு பற்றிச் சுருக்கமாகக் குறிப்பிடுங்கள்**

ப: Idea Mart குழுவினர் எமது பல்கலைக் கழகத்திற்கு வந்து Idea Mart பற்றியும் அதன் செயற்பாடு பற்றியும் விளக்குவதற் கான அமர்வொன்றினை நடாத்த முன்னரே Idea Mart பற்றிய விபரங்களை எனது நண்பரிடமிருந்து கேட்டறிந்து கொண்டேன். பின்னர் நான் அதை எனக்கான தளமாக்கிக் கொண்டு மென் பயன்பாடுகளை உருவாக்க உத்தேசித் தேன். தற்போது Idea Mart இற்காக 16 பயன்பாடுகள் என்னால் தயாரிக்கப்பட் டுள்ளன. அவற்றில் சில சேவை வகை யானது சில தொடர்பாடல் வகையா னது. சேவை சார்ந்த பயன்பாட்டில் சில வாடிக்கையாளர் மையப்படுத்தியது, குறிப்பாகப் பெண்கள் சார் உண்மை களை அடிப்படையாகக் கொண்டது (பெண்கள் பற்றிய இறுதி உண்மைகள்), சுகாதாரத் துணுக்குகள், விளையாட்டு சம்பந்தமான மேற்கோள்கள் (விளையாட் டில் ஈடுபட்ட விளையாட்டு வீரர்களது பிரபலமான மேற்கோள்கள்) போன்றவை அவற்றில் சில. தொடர்புப் பயன்பாட்டி னைப் பொறுத்தவரை பல்வேறு வகை யான பயன்பாடுகள் உருவாக்கப்பட் டுள்ளன. அவை உயிர் லயம் (Bio-rhythm), உறங்கு கணிப்பான் (Sleep Calculator) இரத்ததானம், உங்களது இரத்தப் பிரிவை அறிந்து கொள்ளல், எதிர்கால தொழில், மின்சாரப் பட்டியல் கணிப்பான். உயிர் லயம் மற்றும் எதிர் கால தொழில் அத்தோடு பாவனையா ளருடைய பிறந்ததினம் போன்றவற்றை அறிந்துகொள்ள தரவுகளை உள்ளீடு செய்வதன் மூலம் பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்ளமுடியும்.

**கே: 16 மென் பயன்பாடுகள்! மிகவும் ஆச்ச ரியமான ஓர் முயற்சி! Idea Mart இற்கு இப் பயன்பாடுகளை உருவாக்குவதற்கு எது உங்களை ஊக்குவித்தது?**

ப: கணணித் திட்டச் செயலாக்கம் செய்வ தில் எனக்கு பிரியம் அதிகம். மென் பயன்பாடு ஒன்றை உருவாக்க வேண்டும் என எண்ணம் தோன்றினால் நான் அதனை உடனேயே முடிப்பேன். அப்போதுதான் DIGIT-Idea mart போட்டி பற்றிக் கேள்வியுற்றேன், முன்னமே என்னால் 16 பயன்பாடுகள் முடிக்கப்பட் டிருந்தது. அவை அனைத்தையும் நான் போட்டிக்காக விண்ணப்பித்திருந்தேன். ஆம் எனக்கு எனது நண்பன் பௌசான் என்பவர் ஊக்கமளித்திருந்தார். அவர் ஏற்கனவே இவ்வாறான வேலைகளில் மிகவும் பரீட்சயமானவர் மேலும் அண்மையில் இடம்பெற்ற விருது வழங்கும் விழாவிலும் சில விருதுகள் பெற்றுள்ளார். இது என்னை வெகுவாகக் கவர்ந்திருந்தது. எனவே நான் அவர் பாதையைப் பின்தொடர முடிவெடுத்து இம் மென் பயன்பாடுகளை உருவாக்கி னேன்.

**கே: எவ்வாறு நீங்கள் வாடிக்கையாளர்களை அணுகுவீர்கள்? எவ்வாறான சந்தைப் படுத்தல் ஊடகங்களை நீங்கள் கையாள்கி றீர்கள்?**

ப: எனது இலக்கானது முதலில் எனது பல்கலைக்கழக சமூகத்தையே சார்ந்தி ருந்தது. நான் சுவரொட்டிகளைத் தயா ரித்து அவற்றை ஒவ்வொரு பீடத்தினதும் மாணவர் அறிவித்தற் பலகையில் போட்டேன். அதுமட்டுமன்றி பத்திரிகை களிலும் சில விளம்பரங்களை பிரசுரிக்க உத்தேசித்துள்ளேன். தற்போது, முகநூற் பக்கத்தினை ஆரம்பித்து அதில் எனது அனைத்து பயன்பாடுகளையும் மக்களி டம் சென்றடைவதற்காகச் பதிவேற்றியுள் ளேன். ஏனென்றால் முகநூலே தற்போது அனைவராலும் வெகுவாகக் கையாளப் படுகின்ற ஊடகமாக உள்ளது.

**கே: ஒரு உருவாக்குனராக நீங்கள் என்ன சவால்களை எதிர்நோக்குகின்றீர்கள்?**

ப: சவால்கள்? ம்ம்.... உருவாக்குனராக இருப்பதை நான் ஓர் சவாலாக எண்ண வில்லை. உருவாக்குனராக இருப்பதை நான் மிகவும் விரும்புவதால் அவ்வாறி ருக்கக் கூடும். ஆனால் எனது குடும்பத் தினர் என்னைக் குறித்துக் கவலைய டைவதுண்டு. குறிப்பாக எனது பெற்றோர். ஏனென்றால், நான் ஒவ்வொரு நாளை யும் காலைத் தேனீருடன் எனது மடிக் கணணியின் முன்னாலேயே ஆரம்பித்து இரவு உணவு உண்ணும் போதும் மடிக் கணணியின் முன்னாலேயே இருந்து அந்த நாளை முடித்து வைப்பேன். அதனால் அவர்கள் நான் வேறு இடங்க ளுக்குச் செல்லவேண்டும் என்றும் வெவ்வேறு வேலைகளையும் செய்ய வேண்டும் என நினைப்பார்கள்.

**கே: உங்களுக்கென்று யாராவது முன்மாதிரி நபர்கள் உள்ளார்களா? யார் உங்க ளுக்கு ஊக்குவிப்பாக இருந்தார்கள்?**

ப: ஆம், நான் முன்னர் குறிப்பிட்டதைப் போன்று எனது நண்பர் பௌசான் தான் நான் ஒரு உருவாக்குனராவதற்கு ஊக்குவிப்பாக இருந்தவர். அவர் வலை பின்னலுருவாக்கம் மற்றும் பயன்பாட்டு உருவாக்கம் போன்றவற்றில் பல செயற் பாடுகளை உருவாக்கி வருகின்றார். அவரேதான் இச்செயற்பாடுகளை நான் மேற்கொள்ள எனக்கு வழிகாட்டியாக இருந்தவர். நான் அவருடைய வலைப் பின்னலானTip4theday.com மற்றும் ezmodem.com ஆகியவற்றில் ஒரு குறுகிய படைப்பாளியாகத் தான் எனது செயற்பாட்டினை ஆரம்பித்தேன். அது தற்போது இவ்வாறானதொரு இடத்தை எட்டச் செய்துள்ளது. நான் இன்று இந் நிலையில் உள்ளமைக்கு அவருக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளேன்.

**கே: 10 வருடங்களுக்குப் பின்னர் உங்களை எவ்வாறு பார்க்க ஆசைப்படுகின்றீர்கள்? உங்களுடைய எதிர்காலத் திட்டங்கள் பற்றிக் குறிப்பிடுங்கள்.**

ப: நான் என்னை ஒரு கணணி மென் பொறியியலாளராகக் காண விரும்புகின் றேன். நான் சுதந்திரமாகத் தொழில் புரியப் போகின்றேனா அல்லது ஏதாயினும் ஒரு நிறுவனத்தின் கீழ் வேலை செய்யப் போகின்றேனா என்று தெரியவில்லை. ஆனால் எதைச் செய்தாலும், என்னாலான சிறந்ததையே கொடுப்பேன். இருப்பினும் சுதந்திரமான ஓர் கணணி மென்பொறியியலாளராவதே சிறப்பாக இருக்குமென்று நினைக்கிறேன். எனவே என்னால் எனக்குப் பிடித்த வேலைகளை எவ்வித அழுத்தமுமின்றி செய்யமுடியும். வேலை என்பதற்கு அப்பால், எனக்கு மென் பயன்பாட்டுத் துறையிலும் வலைப்பின்னலிலும் பல உருவாக்கங்களை செய்யவேண்டும்.

**கே: இலங்கையில் ஓர் பெண் மென் பயன்பாட்டு உருவாக்குனர் /தொழில் முனைவாளர் ஒருவரை எம்மால் காண முடியாதுள்ளது. ஆற்றல் வாய்ந்த பெண் மென் பயன்பாட்டு உருவாக்குனர் / தொழில் முனைவாளர்க ளுக்கு உங்களது செய்தி என்ன?**

ப: தற்காலத்தில் பெண் சாதனையாளர்கள் அனைத்துத் துறையிலும் காணப்படுகின் றார்கள். பெண்களால் ஒரு உருவாக் குனராக, தொழில் முனைவாளராக சிறந்த இடத்தை எட்டமுடியும். ஏனென் றால் நாங்கள் ஆக்கபூர்வமானவர்கள் மற்றும் புதுமையானவர்கள். இவ்விரண்டு தகுதிகளுமே எம்மை உருவாக்குன ராகவும் தொழில்முனைவாளராகவும் மின்னுவதற்கு உதவும். தொழில்முனை வாளராவது பெண்களுக்கு மிகச் சிறந்த தொரு தொழில் என்பதே எனது கருத்தா கும். இத் தொழில் மட்டுமல்ல எந்தவொரு தொழிலையும் மனம் விரும்பிச் செய்யும் போதே அதைச் சிறப்பாகச் செய்யமுடியும் என்பதே எனது கருத்தாகும்.

---

தமிழாக்கம் : மின்னொழி, நன்றி.
digit.lk/story-of-an-upcoming-female-app-developerentreneur/Accessed oct 2013




**வா**சலில் பைசிக்கிள் மணிச் சத்தம் கேட்கிறது. ஆய்ந்து பிரித்துக்கொண்டிருந்த முருங்கை இலைத் தண்டை அப்படியே விட்டுவிட்டு வாசலுக்கு வருகிறாா் ஹிதாயா. முன் பின் அறிமுக மில்லாத நபா் ஒருவா்,

'யாரத் தேடுறீங்க காக்கா?'

'இஞ்ச ஹிதாயா என்கிறது?'

'நான் தான் காக்கா என்ன விளக்கம்'

காஜியாா் உங்கள ஒடன வரட்டாம். ஒங்கட ஊட்டுக்காராிற்கு தாபாிப்பு காசி கட்டியிருக் கிறாராம். வந்து வேங்கிட்டுப் போகட்டாம்.

தகவல் சொன்னவா் பறந்து போகிறாா். சந்தோசத்தில் ஹிதாயாவுக்கு காலும் ஓடவில்லை கையும் ஓடவில்லை என்கிற நிலை. உள்ளம் புளகாங்கிதத்தில் மிதந்தது. வானிலிருந்து யாரோ அவள் தலையில் பூக்கள் தூவுவதான பிரம்மை; விடியலொன்று மனதில் புலரவாரம்பித்தது.

நீண்டகாலமாக அவள் கணவன் தாபாிப் புப் பணம் கட்டாமல் ஒரு லட்சத்திற்குமேல் நிலுவையாகக் கிடந்தது, ஆனால் கடந்த மாதம் அவன் புதிய ஹீரோ கொண்டா ஒன்று வாங்கி புது மனைவியை ஏற்றிக் கொண்டு திாிகிறான். ஹிதாயாவிற்கு ஏழு வயதில் இரண்டாம் தரம் படிக்கும் ஒரு பையனும் மூன்று வயதுப் பெண் குழந்தையும் இருக்கின்றனா். இளையவள் கருவிலி ருந்தபோது அவனுடன் வெளிநாட்டில் வேலை வாய்ப்பிலிருந்த ஒருபெண் மேல் ஆசைப்பட்டு ஹிதாயாவை கை விட்டான். பத்தொன்பது வயதே யான ஹிதாயா சிறுவயதிலேயே தாயை இழந்தவள். வாப்பா வேறுமணம் செய்யாத அவளுக்காக வாழ்ந்து இவளது கையறு நிலையில் படுத்த படுக்கையாகிப் போனாா்.. இப்படி ஒரு உத்தமத் தந்தை வாழ்ந்த பூமியில் அவளது கணவன் போன்றவா்களும் வாழ்வது தான் சங்கடம்.

காதிக் கோட்டிற்கும் வீட்டிற்குமிடையில் அலைவதே அவளுக்குத் தொழிலாயிற்று. சில மாதங்கள் தாபாிப்புப் பணம் கட்டுவதும். பலமாதங் கள் இழுத்தடிப்பதும் வழக்கமாயிற்று. சிலவேளை அவன் கட்டும் பணத்தை காஜியாா் தன் தேவைக்கு வைத்துக்கொண்டு அவன் கட்டவில்லை என்று காரணம் காட்டிப் பிந்தியும் கொடுப்பாா். காஜியாா் வீட்டிற்கு நடப்பதே நாளாந்த கடமையாயிற்று காஜியாாின் மனைவிக்கு துணி துவைப்பது, இறால் அவிப்பது வீடுவாசல் பெருக்குவது, சமையலில் உதவுவது என வீட்டு வேலைகள் செய்வதில் அவளது பொழுதுகள் வீணாகக் கரைந்தன. காஜியாா் வீட்டிற்கு நடந்துபோக சுமாா் ஐம்பது நிமடங்கள் தேவை. அதுவும் வேகமாக நடந்தால் தான். ஆட்டோவில் போவதுமில்லை அதற்கு வசதியுமில்லை.

அக்கம் பக்கத்தில் கடன்பட்டு வயிற்றுப் பாட்டை நகா்த்தியும் ஒரு கட்டத்தில் நகராமல் நின்றுவிட்டது. பெரும்பாலும் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்ந்த அக்கம் பக்கத்தாருக்கும் உதவ வழியில்லை. பெற்ற கடன்களைத் திருப்பிக் கொடுக்க முடியாத சூழ் நிலை நிலவிற்று. பக்கத்தி லுள்ள நெல்குற்றும் ஆலையொன்றிற்குபோய் தவிடு புடைத்து அதிலிருந்து வரும் குருணல் அாிசியை ஜீவனோபாயமாக்கிக் கொண்டாள். வெட்கம் காரண மாக இரவு வேளைகளில் போய் புடைப்பாள். வீட்டிலே அந்தக் குறுணல் அாிசி கொஞ்சம் இருந்தது. பொங்கி முருங்கை இலைச் சொதியும்

வைக்கத் தயாராகிக் கொண்டிருந்தாள். அந்தப் பணியை அப்படியே நிறுத்திவிட்டு வாப்பாவிடம் சொல்லிக் கொண்டு புறப்படத் தயாரானாள்.

'புள்ள பசியோட வருவான் சமச்சிட்டுப் போவன்'

'இல்ல வாப்பா எவ்வளவோ காலத்துக்குப் பிறகு எம் புள்ளயள் இண்டைக்கு புரியாணி சாப்பிடட்டுமே வழியிலே சாப்பாட்டு கடையில வாங்கிட்டுவாறன்.'

'காசு கெடைக்கும் எண்டு நம்பிப் போறது புள்ள எனக்கென்னமோ நல்லதா படல்ல'

'இல்ல வாப்பா அவன் காசு கட்டியிருக்கிறானாம் கெடைக்கும் தானே'

"சரி புள்ள அல்லாஹ்ட காவலாய் போய் வா"

"சரி வாப்பா வந்து முதல் வேலையா எல்லாக் கடனையும் அடச்சிரணும். மகன் வருவான் பாத்துக் கொங்க"

"எல்லாம் பாத்துக்குவன் போய் வாபுள்ள"

வேகா வெயிலில் நடந்து காஜியார் வீட்டை அடைந்தாள். மதியம் ஒரு மணியை அண்மித்துக் கொண்டிருந்தது. மனைவிதான் வரவேற்றாள்.

"வா ஹிதாயா வந்திட்டியா? நல்லவேளை பச்சரிசி இளகப் போட்டன், இடிக்க வாறண்ட பொம்பிள வரல்ல ஒழுப்பம் இடிச்சித் தந்திரு" திட்டமிட்டுகாய் நகர்த்தினாள் காஜியாரின் மனைவி. அவள் இடிக்க ஆரம்பிக்கும்போது காஜியார் வெளியே கிளம்ப ஆயத்தமாகிக் கொண்டிருந்தார்.

"ஆ ... ஹிதாயாவா.... இன்னா கொஞ்சம் இவடத்த பொய்த்து வாரன். இருந்துக்க புள்ள" என்றவாறு வெளியிறங்கினார். அவள் மாவிடித்து முடிக்கும் தறுவாயில் வந்துசேர்ந்தார்.

"ஹிதாயா ஒருமிக்க மாவ வறுப்பமா?" மிஸிஸ் காஜியார் அடுத்த காயை நகர்த்த ஆயத்தமானாள்.

"இல்ல ராத்தா ரெண்டர மணியாப் போகுது எம் புள்ளகள் பசியோட இருக்கும். காஜியார்கிட்ட காசு வாங்கி புரியாணி வாங்கிட்டுப் போகப்போறன்"

"அல்லாவே ஒன்ன வெறுங் கையோட அனுப்ப வேண்டியிருக்கே! வங்கிக்குத்தான் போய் வாரன் என்ட செக் மாறிவரல்ல... நாளைக்கு எடுப்பம் என்ன... நாளக்கி கட்டாயம் தருவன்"

அவளுக்குத் தலை சுழன்றது. பசியால் துடிக்கும் குழந்தைகளின் அழுகுரல் காதில் கேட்டது. கண்கள் நீர் வார்க்கத் தயாராகின.

"ஒண்டும் நெனச்சிக்காத புள்ள பத்தாயிரம் கட்டி யிருக்காரு நாளைக்கி வா..."

இன்னொருமுறை தலை சுழன்றது.

"என்ன காஜியார் லட்சத்துக்கு மேல கிடக்கல்லவா? பத்தாயிரம்..."

"அவனால அவ்வளவுதான் ஏலுமாம் ஆம்புளல்லவா? குளப்பினா அதுவும் தரமாட்டான். நான் இனி மாசா மாசம் வாங்கித் தாரன். பயப்புடாத போய் வா" எழும்போது மிஸிஸ் காஜியார் வேண்டுகோள் விடுத்தாள்,

"ஹிதாயா நாளக்கி நேரத்தோட வா மாவ பிறிஜ்ஜில வைக்கன். நாளக்கி வறுப்பம். இப்பபோய் புள்ளகள்ட அலுவலப் பாரு நீயும் பாவம்"

கேற்றைத் தாண்டி வீதிக்கு வந்தவள் அதிலிருந்து அவள் தலையில் யாரோ நெருப்புக ளைத் தூவினார்கள். அடக்கமாட்டாமல் விசும்பி னாள். தன் வீட்டுக் கேற்றடியில் நின்ற பக்கத்து வீட்டுக்காறி கையைப்பிடித்து அழைத்துக் கொண்டு போனாள். குடிக்க குளிர் நீர் கொடுத்தாள். அவளை ஆசுவாசப்படுத்தினாள். அவள் கேட்காமலேயே தன் சோகக் கதையை கொட்டி அழுதாள் ஹிதாயா. அவளை வற்புறுத்தி சாப்பிடக் குடுத்தாள்.

புறப்பட்டவளிடம் மூடப்பட்ட பிளாத்திக்கு வாக் ஒன்றைக் கொடுத்தாள்.

"ஹிதாயா இதில சாப்பாடு இரிக்கி புள்ளயளுக்கு கொண்டு குடுங்க. பசியா இரிக்கிங்கள்"

"இல்ல கிளி வேணா உங்களுக்கு கஸ்டம்"

"கனக்க கதைக்காத ஹிதாயா உனக்கு காசி கெடச்சி இருந்தாலும் சாப்பாட்டு கடையில சாப்பாடு கெடைக்காது. இதுக்குப் பொறகு என்னேரம் சமச்சி என்னேரம் சாப்பிடுங்கள். நான் இரவைக்கும் சேத்துத்தான் சமச்சன். அவரு பகல் சாப்பாட்டுக்கு வரல்ல. எனக்கிட்ட இப்ப ஒரு 500 ரூபாதான் இரிக்கி இத வச்சிக்க..."

"சாப்பாட்ட எடுக்கன் காசு வேணாகிளி. எனக்கி இரந்து பழக்கம் இல்லகிளி"


"ஏன் அப்பிடி நெனக்காய்? இத கடனா எடுத்துக்க. கெடைக்கக்க திருப்பித்தா"

வற்புறுத்தி அவள் கைகளில் திணித்து வழியில் வந்த ஆட்டோவிலும் ஏற்றிவிட்டாள். ஹிதாயாவுக்கு இது தான் முதல் ஆட்டோ பயணம். அவள் மனதில் காஜியாரும் அவள் மனைவியும் அடுத்த வீட்டுப் பெண்ணும் மாறிமாறி வந்தனர். அவள் தந்தையும் கைவிட்டுப் போன கணவனும் மனத் தராசில் நின்றனர். தந்தையின் கதையால் தந்தை இருந்த தட்டு தடாலெனப் பூமியில் தட்டி யது. இப்போதுதான் ஹிதாயாவுக்கு உலகம் புரிய ஆரம்பித்தது. நாளைக்கு மா வறுப்பதற்காக இன்று காசு தர மறுத்த சுயநலத்தை எண்ணி மனதில் சபித்துக் கொண்டாள். இன்றுதான் புதிதாக ஆட்டோவில் பயணிக்கிறாள் என்றாலும் இனி அவளது வாழ்க்கைப் பயணத்தை வகுத்துக் கொள்வதற்கு இச் சிறுபயணம் சந்தர்ப்பமளித்தி ருக்கிறது. காஜியாரின் பக்கத்துவீட்டுப் பெண் ஆரம்பித்து வைத்திருக்கிறாள்.

**■ சம்மாந்துறை மஷூரா**

# காணி நிலம் வேண்டும்

## சமயத் தலங்களும் நில ஆக்கிரமிப்பும்



ஆலயங்கள் மனிதனை பண்படுத்தவே அமைக்கப்படுகின்றன. அது சமூகத்தை புண்படுத்த வல்ல. இன்று பல தமிழ் முஸ்லீம் கிராமங்களில் பௌத்த மக்கள் வாழாத இங்களில் கூட பௌத்த ஆலயங்கள் அமைக்கப்படுவதும் அரச நிலங்கள் ஆயிரக்கணக்கில் ஆக்கிரமிக்கப்படுவதும் அந்த நிலங்களின் சட்டரீதியான நில உரிமைகளை ஆராய்ந்து பார்க்காமல் சட்டத்துக்கு மாறாக ஏனைய சமயத்தவர்களின் மனங்களை புண்படுத்தும் வகையில் சமயத்தலங்கள் அமைக்கப்படுவதும், சில மதத் தலைவர்கள் தன்னிச்சையாக நடந்து சட்டத்தின் வழி உரிமையுள்ளவர்களிடம் அனுமதி பெறாமல் ஏற்கனவே அரசு பகிர்ந்தளிக்கப்பட்ட நிலங்களை ஆக்கிரமித்து சமயத்தலங்கள் அமைத்தல் சர்வசாதாரணமான விடயமாகியுள்ளது.

இது நிறுவன மயமாக்கப்பட்ட பேரினவாதமாக (Ethnocratic sate) மாற்றப்பட்ட நிலைக்கு கொண்டு செல்கிறது. சட்டமும் ஒழுங்கும் நிலை குலைந்த நிலையில் நசுக்கப்படும் சிவில் சமூகமாக தமிழ், முஸ்லீம் மக்களின் நிலையும் அவர்களின் நிலமும் ஆக்கிரமிக்கப்படுகிறது. இதற்கு நிலம் சம்பந்தமாக எந்த சட்ட அந்தஸ்தும் இல்லாத உயர் அதிகாரிகளும் படையணிகளும் ஆலய அத்து மீறலுக்கு துணைநிற்கின்றமை வேதனை அளிக்கின்றது. இதற்கு அவர்கள் கூறும் குறுட்டு நியாயம் இந்த நிலங்கள் எல்லாம் பழைமை வாய்ந்த புனித இடங்கள்.

காணி ஆணையாளர் விதப்புரை காணி அமைச்சர் அங்கீகாரம் வர்த்தமானி விளம்பரம்

மூலம் வெளியிடப்பட்டு பொதுமக்கள் எதிர்ப்பு இல்லாமை மூலமே பௌத்த ஆலயத்திற்கு காணி பெற முடியும்.

ஒரு அரச நிலத்தை சட்ட ரீதியாக அரசிடம் இருந்து பௌத்த ஆலயத்திற்கு புதிதாக பெறுவதாயின் பின்வரும் ஆவணங்கள் அவசியம்.

1. பௌத்த அலுவலர்கள் ஆணையாளர் நாயகம் அவர்களால் வழங்கப்பட்ட சான்றிதழின் பிரதி அப்பிரதியில் இப் பௌத்த விகாராதிபதி ஒருவர் நியமிக்கப் பட்டுள்ளார் என அவர் சிபார்சு செய்யப்பட்டிருக்க வேண்டும். அது இதுவரை வழங்கப் படவில்லையாயின் அந்த ஆலயம் எந்த நிக்காயாக்குள் வருகிறதோ அந்த நிக்காய மகாநாயக்க தேரரால் வழங்கப்பட்ட அதிகாரப்பத்திரம் இருக்கவேண்டும்.

2. இவ் ஆலய விகாராதிபதி எந்த நிக்காய வைச் சேர்ந்தவர் என்றும் அந்த நிக்காய வின் மகாநாயக்க தேரரின் பெயரும் வழங்கவேண்டும்.

பிரதேச செயலாளர் அல்லது பிரதி ஆணையாளர் (மாவட்டம்) அல்லது உதவிகாணி ஆணையாளர் (மாகாணங்களுக்கு இடைப்பட்ட நிலப்பரப்பாக இருந்தால் அதாவது மாகாண அதிகாரத்திற்குள் வராத காணிக்கு) சிபார்சு இக்காணியை வழங்க அவசியம். இவை இல்லாமல் காணி ஆணையாளர் தனது சிபார்சை காணி அமைச்சருக்கு அனுப்பமாட்டார். காணி ஆணையாளர் அனுமதியின்றி அரச காணிக்குள் உட்புக முடியாது.

**ஒதுக்குகக் காணிகள்:**

ஒரு காணி வனவிலங்கு மற்றும் வன திணைக்களகத்திற்கோ தொல் பொருள் இடமாகவோ இருந்தால் அதற்கு ஒரு (Dimakation Boundary) நில அளவை வரைப்படமும், வர்த்தமானியில் எல்லைகள் பரப்பளவு குறித்த நிபந்தனையுடன் கூடிய வெளிப்படுத்தல் விளம்பரப்படுத்தப் பட்டிருத்தல் வேண்டும். வனச்சட்டம் பிரிவு மூன்றின் கீழ் அமைச்சரானவர் வர்த்தமானி அறிவித்தல் ஒன்றின் மூலம் ஒரு பகுதிக் காணியையோ முழுக்காணியையுமோ (Reserved Forest) "வன ஒதுக்கு" என வெளிப்படுத்தியிருக்க வேண்டும். வன ஒதுக்காக வரும் காணி (Lands Resumption Ord.) - விட்டதை மீண்டும் கைக்கொள்ளல் சட்டத்தின் கீழோ (Land settlement ord) காணி நிர்ணய சட்டத்தின் கீழோ அல்லது Waste LandOrd புரண் காணிச்சட்டத்தின் கீழோ அல்லது Land Acquisition Ord or Act காணி சுவீகரிப்பபுச்சட்டத்தின் கீழோ அரச சொத்தாக கொண்டுவரப்பட்டிருத்தல் வேண்டும்.

வனச்சட்டத்தின் 78 வது பிரிவு முக்கிய மானது இப்பரிவின் கீழ் வனச்சட்டத்தின் பொருள்கோடல் (Interpretation) இதில் வன ஒதுக்கு Reserved forest என்ன அர்த்தத்தில் உள்ளது என்பதை பார்க்க லாம். வன ஒதுக்கு என குறிக்கப்படும் இடத்தில் உப பிரிவு (b) மர நடுகை plantation செய்யப்பட்ட இடங்களும் உதாரணமாக தேக்கம் மர நடுகை செய்த சோலைகளும் வன ஒதுக்காக கருதப்படும்.

Fauna and Flora Protection Ord No 2 of 1937 வனக்காணியை தீர்மானிக்கும் அமைச்சரின் வர்த்தமான அறிவித்தலின் கீழும், வனக்காணி உருவாகும்.

வனமும் வன பாதுகாப்பு அமைச்சு சுற்று நிரூபம் இலக்கம் 05/2001 திகதி 10.08.2001 உம் இதில் செய்யப்பட்ட திருத்த சுற்று நிரூபமான சுற்றாடல்

அமைச்சு சுற்று நிருபமான இல 02/2006 திகதி 17.05.2006 இனையும் இங்கு கவனத்தில் கொள்ளவேண்டி உள்ளது. இச் சுற்று நிருபப்படி மாவட்டச் செயலாளர் (GA) பிரதேச செயலாளரால் நிர்வகிக்கப் பட்ட **"சகல காடுகளும்"** தேசிய வனக் கொள்கைக்கு அமைய நிர்வகித்தல் மேலும் முன்னேற்றம் செய்தல் பாதுகாத்தல் என்பவற்றிற்காக வன பரிபாலன திணைக்களகத்திற்கு வழங்கப்படும் என கூறப்பட்டுள்ளது. பொதுத்தேவைக்கு இக் காணிகளில் காணி தேவைப்படும் போது சுற்றாடல் அமைச்சில் இருந்து விடுவித்துக் கொள்ளலாம். குறிப்பிட்ட தேவையான அளவுக்காணியை மட்டும் இதற்காக காணி பயன்பாட்டுக்குழு மூலம் அதாவது பிரதேச செயலக காணிப் பயன் பாட்டுக்குழுத் தீர்மானம் மாவட்ட அரச அதிபர் தலைமையிலான மாவட்ட காணிப் பயன்பாட்டுக் குழுக்கு சமர்ப்பிக்கப்பட்டு அக் குழுவும் தீர்மானித்து சுற்றாடல் அமைச்சு மூலமாக குறிப்பிட்ட தேவைக்காணியை விடுவித்துக் கொள்ளலாம். ஆனால் இச்சுற்று நிருபப்படி **"சகல காடுகளும்"** என்னும்போது ஏற்கனவே ஒருவருக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட காணிகள் இவற்றுள் உள்வாங்கப்படாது. காரணம் பகிர்ந்தளிப்பு முறையாக இரத்து செய்யப்படாமல் அதன் உரிமை வனத் திணைக்களகத்திற்கு வராது அத்துடன் 30 வருட இனப்பிரச்சினை காரணமாக ஏற்கனவே 1935ம் ஆண்டில் LDO சட்டம் வந்தது முதல் காணிகள் பகிர்ந்தளிக்கப் பட்டு மக்கள் குடியிருந்து அபிவிருத்தி செய்த காணிகள் இடம் பெயர்வினால் கைவிடப் பட்டு காணிகள் காடாக கிடக்க மீண்டும் யுத்தம் முடிந்த பிற்பாடு மக்கள் தங்கள் காணிகளை அபிவிருத்தி செய்ய சென்ற போது வன திணைக்களம், வன ஜீவராசிகள் திணைக்களம் மேற்படி இல 05/2001 சுற்று நிருபத்தைக்காட்டி சகல காடுகளும் தமக்கு சொந்தம் எனக் கூற முடியாது.

ஆகவே இன்று எழுந்துள்ள நிலை பிரதேச செலக மாவட்ட செயலக மட்டத்தில் வன, வன ஜீவராசிகள் ஆகிய இரு திணைக்களங்களுடன் கலந்துரையாடி விசாரனை செய்யப்பட்டு ஏற்கனவே ஆவணம் மூலம் பகிர்ந்தளிக்கப்பட்டு சட்டரீதியாக உரிமை உள்ளவர்களின் காணி அவர்களுக்கே வழங்கப்படவேண்டியது கண்டிப்பானதாகும்.

எது எப்படி இருந்தாலும் 1981 ஆம் ஆண்டுக்கு முன் அரசாங்க அதிபர்களுக்கு அரச காணியை பிரித்து வழங்கும் அதிகாரம் இருந்தது. சகல திணைக்களகத்திற்கும் தலைவராக மாவட்டத்தில் காணப்பட்டுளார் Lands Resumption ord No 4 of 1887 இலும் கூட அரச அதிபரே முக்கியமானவராக காணப்படுகிறார். இச்சட்டமும் அனேக அரச காணிகளை வனத்திணைக்களக காணிகளாக மாறுவதற்கு துணை நின்ற சட்டங்களில் ஒன்று.

"பொது மக்களுக்கு அரச உத்தியோகத்தர்கள் சட்டரீதியான எதிர்பார்ப்பை வழங்கிவிட்டு அதனை பொருட்படுத்தாது முன்னுக்குப்பின் முரணாக நடக்கக் கூடாது" என மேன்முறையீட்டு நீதிமன்ற வழக்கான CA120/98 சித்திரை 28ம் திகதி 2001 ஆண்டு வழக்கில் குணவர்த்தன நீதியரசர் (P/CA) கூறினார். இது ஒரு காணிச் சுவீகரிப்பு வழக்கு.

ஆகவே பொது மக்களுக்கு உத்தரவுப் பத்திரம் மூலம் வழங்கப்பட்ட காணி களை யுத்த சூழலில் அவர்கள் இடம் பெயர்ந்து வாழ்ந்து மீண்டும் அக்காணிகளை அபிவிருத்தி செய்ய சென்றபோது அது வனத்திணைக்களக காணி, ஏற்கனவே வனக் காணியாக பிரகடனப்படுத்தப்பட்டது எனக் கூறுவது பிழை. பொதுமக்களுக்கு

உத்தரவுப்பத்திரத்தை வழங்கியது அரச அதிகாரிகளே.

ஆகவே வன, வன ஜீவராசிகள் திணைக் களமும், மாவட்ட செயலாளர்களும், பிரதேச செயலாளர்களும் தீர்க்கமாக விசாரித்து பொது மக்களிடம் உள்ள ஆவணங்களின் உண்மைத்தன்மை அடிப்படையில் அக்காணிகளை விடுவித்து பொதுமக்கள் தங்கள் காணியை அபிவிருத்தி செய்ய வழங்குவதே சாலச் சிறந்தது.

திரியாய் இக்கிராமம் பெயர்மாற்றம் பெற்ற "திரிகண்டுசாய" என இக்கிராமம் தற்போது அழைக்கப்படுவதோடு பெயர்ப்பலகை இடப்பட்டுள்ளது. கிட்டத்தட்ட 3000 ஏக்கர் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. இதுவும் தமிழ் மக்கள் வாழ்ந்து பயிர் செய்த நிலங்கள். திரியாய் விகாரையை சூழ உள்ள நிலப்பரப்பு இது. இன் நிலம் நில அளவை செய்யப்பட்டு படமும் தயாராக உள்ளது.

இலந்தக்குளம் இக்கிராமம் தற்போது "மசங்கவேவ" என பெயர் மாற்றப்பட் டுள்ளது.

சலப்பையாறு, புடவைக்கட்டில் வாழ்ந்த சிங்கள மக்கள் இனப்பிரச்சினையால் தாம் அங்கு வாழ முடியாது என அரசை கோரி அப்போதே அவர்களுக்கு அரசாங்கம் மாற்றுக்காணி சீனன்குடா, கொட்பே என்ற திருமலை பட்டணமும் சூழலும் பிரதேச செயலகப்பிரிவில் வழங்கப்பட்டது. ஆனால் அவர்களும் அவர்களின் வாரிசுகளும் மீள தமது பழைய காணியை தருமாறு ஆக்கிரமிக்கின்றனர்.

குச்சவெளி பிரதேச செயலகத்திற்கு பின் பக்கமாக கடற்கரையில் சிறிய கல்மலை யில் இருந்த பிள்ளையார் சிலை அகற்றப் பட்டு பௌத்த சிலை வைக்கப்பட்டுள்ளது. இதனை "சமுத்திரிகிரி" என பெயர் வைத் துள்ளனர். இது தொல் பொருள் திணைக் களகத்திற்குரிய இடமாக பிரகடனப்படுத்தப் பட்டுள்ளது.

குச்சவெளிப்பிரதேசத்தில் கும்புறுப்பிட்டி கிராமத்தில் Rigam Salt Privet Ltd றகு 1805 ஏக்கர் நிலத்தை நீண்டகால குத்தகை யில் வழங்கப்பட்டுள்ளது. இதற்காக பெறப்பட்ட காணி கடல் நீர் வாவி ஆகும். இந்த நீர்ப்பரப்பு நீண்டகாலமாக தமிழ் மக்களால் அதுவும் ஏழை மீன்பிடியாட்க ளால் மீன்பிடிப்பதற்காக தங்கள் ஜீவனோ பாயத்திற்காக பாவிக்கப்பட்டு தொழில் செய்யப்பட்ட இடத்தின் பெரும் பகுதி பறிக்கப் பட்டுள்ளது. இதனால் உள்ளூர் மீனவ ஏழைச்சமூகம் பாதிக்கப்பட்டுள்ளது.

**காணி ஆணையாளரின் சுற்று நிருபம் இல 04/ 2003 திகதி 20.3.2003 இச்சுற்று நிருபத்தில் கூறப்பட்ட முக்கிய விடயங்கள் பின்வருமாறு.**

- சட்ட விரோதமான முறையில் அரசுக்கு சொந்தமான காணிகள் குடியிருப்புக் காகவும் பல்வேறு கட்டிடங்கள் எழுப்பு வதற்காகவும் தொல்பொருள் முக்கியத்துவ இடங்களும் சரித்திர முக்கியத்துவ இடங்களும் அத்துமீறப்படுவதுடன் சட்டத்திற்கு விரோதமாக சமயத்தலங் களை சமயத்தின் பெயரில் நிர்மானித்து மேலும் விரிவுபடுத்துவதன் ஊடாக பிற மதங்களைச் சார்ந்த பொதுமக்கள் பெரும் சிரமங்களுக்கு உட்படுத்துவதை பற்றியும் பாதுகாப்பு அமைச்சின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

**சட்டத்தின் முறையான படிமுறை அல்லது தகுந்த சட்டச் செயற்பாடு (Due process of Law):**

சட்டத்தின் நிலையான நன்கறிந்த நடவடிக்கை முறைகளைப் பின்பற்றாமல் அரச

காணி ஒன்றை பெறமுடியாது. அதேபோல் நீதிமன்றத்தில் கூட சட்டத்தின் முறையான படிமுறை இன்றி குற்றத் தீர்ப்பளிக்கவோ, அவருக்கு எதிராகக் கட்டளை எதுவும் ஆக்கப்படவோ முடியாது.

எல்லா சமயவழிபாட்டுத் தலங்களுக்கும் அரச காணி வழங்கப்படுவது அரச காணிச் சட்டமான இல 08 இன் 1947 இன்படியும் இதில் செய்யப்பட்ட திருத்தங்களின்படியும் அதன் ஒழுங்கு விதிகள், காணிக் கட்டளைப்படியுமாகும். இலங்கை அரசியலமைப்புச் சட்டம் உறுப்புரை 9 இன்படி புத்தமதம் அரச மதம் என குறிப்பிடப்படுகிறது. அதனால் சட்டமுறையான படிமுறைக்கு மாறாக அரச காணியை பெறமுடியாது. அரச காணிச்சட்ட ஒழுங்கு விதி பிரிவு 21(2) இன்படியான வர்த்தமான விளம்பரம் ஒன்றின் மூலம் குறிப்பிட்ட இடத்தில் ஆலயமொன்றிற்காக வழங்கப்படும் காணிக்கு பொதுமக்களின் அபிப்பிராயம் அல்லது எதிர்ப்பிருந்தால் அதை அறிவதற்கே வர்த்தமானியில் விளம்பரப் படுத்தப்படுகிறது. எவ்வித எதிர்ப்பும் இல்லை என்றால் காணி ஆணையாளர் நாயகம் அமைச்சின் கட்டளைப்படி அரச காணியை ஆலயத்திற்கு பாரமளிக்க முதலில் கட்டளை பிறப்பிப்பார். இது எல்லா வழிபாட்டுத் தலங்களுக்கும் பொருந்தும்.

**ஒதுக்குகள்:**

அரச காணிகள் வனத்திணைக்களத்திற்கோ அல்லது தொல்பொருள் சரித்திர உண்டியல் சார் இடமாகவோ, வனவிலங்கு திணைக்கள ஒதுக்கு இடமாக வருவதனால் வர்த்தமானி அறிவித்தல் மூலம் அந்த இடம் எல்லைகள் குறிப்பிடப்பட்டு அவற்றுக்குரிய ஒதுக்காக பிரகடனப்பட்டிருத்தல் வேண்டும். அத்துடன் Demakation Boundary எல்லை குறித்த நில அளவைப்படங்களும் மேற்படி ஒதுக்கு என அதனை வெளிப்படுத்தி இருக்கவேண்டும். இது இரண்டும் இல்லை என்றால் அது அவற்றுக்கான ஒதுக்கு என கூற முடியாது. ஏற்கனவே சட்டப்படி மக்களுக்கு வழங்கப்பட்ட காணிகளை சுவீகரிப்புச் சட்டத்தின் கீழ் சுபீகரிப்புச் செய்யாமல் அவர்கள் காணிகளை புதிதாக தொல்பொருள் இடமாகவோ, வன ஒதுக்காகவோ, வனவிலங்கு ஒதுக்காகவோ பிரகடனப்படுத்த முயல்வது வலுவிழந்ததாகும். (Altra Virus). இது அடிப்படை மனித உரிமை மீறலாகும். அரசியலமைப்புச்சட்டம் உறுப்புரை 17 இன்கீழ் அடிப்படை உரிமை மீறலுக்கு எதிராக அரச அதிகாரிகளுக்கு எதிராக உயர் நீதிமன்றில் வழக்குத் தொடுத்து உறுப்புரை 126 இக்கீழ் உயர் நீதிமன்றம் அரச அதிகாரிகளை மக்களின் அடிப்படை உரிமை மீறலுக்காக கேள்விக்குட்படுத்தப்படலாம்.



பொது நிர்வாக அமைச்சின் சுற்றுநிருபம் இல 82/2, காணி கட்டளைப்பிரிவு 180 இன்கீழ் ஒரு மாவட்டத்தில் அரச காணி அடாத்து செய்யப்படும் போது அதனை தடுப்பதும் சட்ட நடவடிக்கை எடுப்பதும் அதுபற்றிய முன்னேற்ற அறிக்கையை 02 கிழமைக்கு ஒருதடவை பிரதேச செயலாளர், கிராம சேவை உத்தியோகத்தரிடம் பெறுவதும் மாதம் ஒருமுறை அரசாங்க அதிபர் பிரதேச செயலாளர்களின் அடாத்து அறிக்கையை மேற்பார்வை செய்வதும் சட்ட நடவடிக்கைக்கு உள்ளாக்குவதும் அரச அதிபரின், பிரதேச செயலாளர்களின் கடமையாகும்.

■ K. **குருநாதன்**
ஓய்வு பெற்ற உதவி காணி ஆணையாளரும் சட்ட ஆலோசகரும்

**கண்ணம்மாக்களின்
கனவுகளுக்கு
வளரும்
வாரிசுகள் புது
விதி
சமைப்பார்களா?**



மொழிவரதன்

குளிர் நிலவு
பனிபடர் மலையைத்
தழுவும்
இளந் தென்றல்
பசுந்தேயிலையைத்
தாலாட்டும்
உயர் சவுக்கு
உல்லாசமாய் ஆடும்
கருவேல மரமும்
முருங்கையும்
இதமான ஒலி எழுப்பும்
அரசமர இலைகள்
அழகிய இளங்குமரி
தோலாய் பள பளக்கும்
பாடும் மீனா குருவி
கரிச்சான் கானாங்கோழி
கருங்காகம் கொண்டலத்தி
தேன் சிட்டுக்வீட்டுக் குருவி
சுதந்திரமாய்
எங்கெங்கோபடுத்து
உறங்கும்
தொங்கலயத்தில்
தூங்காத கண்ணம்மா
பல்கலை
தேர்வுக்காய்
தனது உயிர்த்துவ
வாரிசு படிக்கும் அழகை
பூரிப்புடன் பாப்பாள்

வரும் "நாளை"யைப் பற்றி
இன்றே சிந்தித்திருப்பாள்
பின்னர்
உழைப்பின் அலுப்பில்
உறங்கியும் விடுவாள்
அரிதான கடமை தவறா
சில மனிதர் போல
எங்கோ ஒரு சேவல்
கடமை நேரம் தவறாதே
குரல் கொடுக்க
அதன் சுவட்டில்
ஊரின் சேவல்களெல்லாம்
உரத்துக் குரலெழுப்பும்
குதித்தே எழும் கண்ணம்மா


சோம்பல் விட்டு
தனது உறவுகளுக்காய்
அடுப்பை மூட்டுவாள்
மூடு பனிவாட்டும் குளிர்
வாடைக் காற்று
கிராதி வழியே நுழைந்தே
அவள் முந்தானையை
இழுத்தே
"சில் மிஷம்"செய்யும்
சமையல் முடிய
கைப்பேசி காலணியுடன்
கொழுந்து மலை நோக்கி
கூடையுடன் நடப்பாள்
நாளைய தனது
வாரிசுகளின் வாழ்வுக்காய்
இன்றவள்
உழைப்பை விற்கிறாள்
கண்ணம்மாக்களின்
கனவுகளுக்கு வளரும்
வாரிசுகள் புது
விதி சமைப்பார்களா?

# பேனையை வைத்துவிடாதே

மொழிவரதன்



மலாலா... மலாலா......
மலாலா யூசுவ் சாய்......
பதினொரு வயதிலேயே
இணையத்தில் பெண் கல்விபற்றி
பதிவு செய்தவள்
மதத் தீவிரவாதிகளுக்கும்
ஆண் மேலாதிக்கவாதிகளுக்கும்
நீ ஒரு சிம்மசொப்பனம்
பெண்ணுரிமைபோராளிகளுக்கு
நீ ஒரு நம்பிக்கை
நட்சத்திரம்
விடியலுக்காய் பேனை
தூக்கிய உனக்கு
பேனை" ஓர் ஆயுதம்"
வெறும் குண்டுகளால்
கொள்கைகளை
குழி தோண்டிட
இயலாது என்பதற்கு
நீ ஒரு சாட்சி
ஓ! என் மலாலா
என்னருமைமகளே......!
உன் அழகான கண்களுக்குள்
தீட்சயண்யமிக்க
ஒளி உள்ளது
பால் மணம் மாறா
அந்த உன் அழகு வதனம்
ஒருதரம் பார்த்தோர்
எப்படி சும்மா
குண்டு எறிந்து எரிப்பர்?
இனம் மொழி மதம்
சாதி பிரிவுகள்
இவைகளைக் கடந்து
மலாலாவுக்காக
உலகம் எழுந்து
நிற்கிறது
லங்காவிலிருந்து
சின்னச் சிறுமி உனக்காக
ஒரு கவிதை புனையப்படுகிறது
மானிட நேயம், பரிவு, பாசம்
உண்மையின் பரிமாணங்கள்
இப்படித்தான் ஊற்றெடுக்கின்றன
காலம் ஒன்று வரும்வேளை
மலாலா பெண்கள் எல்லாம்
கல்வியால் மகிழ்ந்திருப்பர்
ஆனால்
அதுவரை
உனது பேனையை
மறந்தும் கீழே
வைத்துவிடாதே!



# அதிகாரத்திற்கெதிரான பெண் குரல்......

ஸர்மிளா ஸெய்யித்

தமிழ் இலக்கியத் துறையில் குறுகிய காலத்திற்குள் அதிக கவனத்தைப் பெற்ற கவிஞரும் எழுத்தாளருமாக ஸர்மிளா ஸெய்யித் அடையாளம் காணப்படுகின்றார். "சிறகு முளைத்த பெண்" என்ற இவரது கவிதைத் தொகுதி காலச்சுவடு வெளியீடாக 2012 இல் வெளியானது.

இக்கவிதைத் தொகுதிக்கான மதிப்புரையை 2013 ஜனவரி காலச்சுவடு இதழில் கவிஞர் சமயவேல் எழுதியிருந்தார்.
"இத்தொகுப்பின் எல்லாக் கவிதைகளையுமே அரசியல் கவிதைகள் என்றே சொல்லலாம். யுத்தத்தின் கோர அனுபவங்களைக் கூறும் கவிதைகளைப்

புற அரசியல் கவிதைகள் என்றால், அகவாழ்வில் புத்துரிமை கோரும் காதலையும், காமத்தையும் கொண்டாடும் பெண்ணரசியல் கவிதைகளை, அக அரசியல் கவிதைகள் எனலாம். இந்த இருவகைக் கவிதைகளைத் தவிரக் கவி தன்னடையாளங்களை வெளிப்படுத்தும் சில அருமையான கவிதைகளும், தன்னில் தடுமாறுகிற புள்ளிகளைக் கவித்துவக் கோடுகளால் இணைக்க முயலும் கவிதைகளும் இந்தத் தொகுப்பில் இருக்கின்றன"என்று எழுதியிருந்தார்.

தமிழ் ஆழி இதழில் "இளம் இலக்கிய முகங்கள்" என்ற பகுதியில் ஸர்மிளா ஸெய்யித் பற்றி குட்டி ரேவதி இப்படி எழுதியிருந்தார். –"நீ இல்லாத இரவு என் கழுத்தை நெரிக்கிறது" என்று தனது காமத்தைப் பேசுவதிலாகட்டும்", குளம்புகள் கற்களில் மோத அதோ எம் கலவியைக் களவில் பார்த்த புரவிகள் தேரை இழுத்துக்கொண்டு விரைந்தோடி வருவதைப் பார்", எனப் பெண் மீதான சமூகக் கண்காணித்தலைப் பேசுவதிலாகட்டும் "நான் மழை. ஆட்டுத் தொழுவத்திலும் வீழ்வேன். அரச மாளிகையிலும் வீழ்வேன். என்னைக் கண்டு ஒதுங்கியேயாகணும். ஆளுநர் அரசாங்கத் தலைவர் அனைவரும் குடை பிடித்தாகனும் எனக்கு. நான் மழை. வேறுபாடின்றி நனைப்பேன்" என எளிமையான முறையில் தன் உரிமைப் போரை நிகழ்த்துவதிலாகட்டும் ஸர்மிளா ஸெய்யித்தின் கவிதைகள் சமூகப் பார்வையின் வெளிச்சம் பெறுகின்றன.

சிந்தனையின் நெடுஞ்சாலையில் சீரான வேகத்தில் ஓடும் குதிரையில் பயணிக்கும் பெண்ணின் தனி முழக்கம்போல, தனிசாட்சியங்கள் போல ஸர்மிளா ஸெய்யித்தின் கவிதைகள் இத்தொகுப்பு முழுக்க உருக்கொண்டிருக்கின்றன.

பெண்கள் இதுவரையிலும் பேசாததும் உணர்வுகளை நேர்மையைப் பேசுமிடத்து ஸர்மிளா மிகுந்த கவனம் கொள்ளத் துணிந்திருக்கிறார். தமிழ்ப் பெண்ணிலக்கிய வரலாற்றின் அரசியலை முற்றும் அறிந்த கவிஞரின் மன எழுச்சிதான் கவிதைக் காலகட்டத்தின் அடுத்த நிலைக்கு அழைத்துச் செல்லும். ஸர்மிளா ஸெய்யித்தின் கவிதை மொழியும் குரலும் அத்தகையதோர் எழுச்சியைத் தம்முள் கொள்வதன் வழியாகப் பெண் கவிதையின் அரசியலைக் கூர்மைப் படுத்த முடியும் என்று நம்புகிறேன்".

தமிழ் இலக்கியப் பரப்பில் தவிர்க்க முடியாத இடத்தைப் பிடித்திருக்கும் ஸர்மிளா ஸெய்யித் இந்தியத் தமிழ் எழுத்தாளர்களின் கவனத்தைப் பெரிதும் ஈர்த்துள்ளார். இவருக்கு தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கம் "செல்வன் கார்க்கி விருது" வழங்கிக் கௌரவித்துள்ளது. எழுத்தாளர் ஊக்குவிப்பு மன்றம் "தமிழியல்" விருது வழங்கிக் கௌரவித்துள்ளது.

விரைவில் இவரது "உம்மத்" என்ற நாவல் வெளிவரவிருக்கிறது. இவரது "சிறகு முளைத்த பெண்" என்ற கவிதையிலிருந்து......

■ யுனித்தா

**நே**ற்றுவரை நானும்
ஜன்னல் கம்பிகளின் பின்னிருந்துதான்
ஓடும் மேகங்களைப் பார்த்தேன்
நிலாவையும் வெள்ளியையும் ரசித்தேன்

ஒரு துண்டு மேகத்தையும்
அள்ளியெறிந்தாற்போல
சில வெள்ளிகளையும்
எத்தனை நாளைக்கென்று
ஜன்னல் வழியே ரசிப்பது

அக்கினிக் குண்டத்திலிருந்து
தப்பித்தாற்போலதான்
இந்த வெளியேற்றமும்

ஆரம்பத்தில்
நாட்படாத கோழிக்குஞ்சின் அளவுதான்
சிறகிருந்தது

சிறந்ததையே எண்ணினேன்
சிந்தித்தேன்
சிறந்தவற்றிற்காக உழைத்தேன்
எப்போதும் இன்புற்றிருந்தேன்
பிறரும் இன்புற்றிருக்க விரும்பினேன்
குற்றம் காண முனைவதல்ல என் மனது
எல்லாவற்றிலுமிருக்கும்
நல்ல பக்கங்களை ஏற்று நடந்தேன்

அக்கம் பக்கத்தார்
அண்டியிருந்தோரெலாம்
எனை உற்றுக் கவனிக்கக் கண்டேன்
யாருக்கும் நெஞ்சு பொறுக்கவில்லை
எனக்கு சிறகு முளைத்தது கண்டு

இது எம் குலத்திற்காகாத
குணமென்று எச்சரிக்கப்பட்டேன்
கண்டுகொள்ளாது நடப்பதும்
மௌனமாயிருப்பதுமே
எம் குலப்பெருமையென
அறிவுறுத்தப்பட்டேன்
நேரிய என் விழிகள்
இருட்டை நோக்கியதாயிருக்க
பணிக்கப்பட்டேன்
நிமிர்ந்த என் நெஞ்சுக்கும்
தாழ்ப்பாழிட கோரப்பட்டேன்

இத்தனை எல்லைகளைத்
தாங்காத என் நெஞ்சு குமுறியது
இடமா இல்லை அண்டத்தில்
வேலி தாண்டிய என் வேர்களை
இழுத்துக் கொண்டு பறந்தேன்...

குலத்தையும்
கூடயிருந்தவர்களையும்
விட்டுபறப்பதொன்றும்
சுகமான அனுபவம் கிடையாது
அது சிலுவையை சுமப்பது போன்றது

என் சிறகுகளை வெட்டியெறிய
என் கால்களுக்கு விலங்கிட
எண்ணற்ற முயற்சிகள்

எல்லாம் எதிர்கொண்டேன்
என் பயணத்தில் உலகையறிந்தேன்
மனங்களின் பாஷையைக் கற்றேன்
வாழ்வின் போக்கையும்,
அதுபுகட்டும் போதனைகளையுமறிந்தேன்

இவை கொஞ்சம்தான்
கைம்மண்ணளவு!

இன்னும் நெடுந்தூரம்
பறப்பேன்
அண்டத்தின்
ஐஸ்வரியங்களை அறிவேன்

நதியோரப் பள்ளத்தாக்கில்
பெரும் விருட்சமொன்றின் கிளையில்
தரித்து நிற்கின்றேன்...
களைத்துப்போன என்னைத் தேற்றவும்,
காயம்பட்ட என் சிறகுகளைஆற்றவும்.

வெளிச்சத்தை நோக்கிய
எனது பயணத்தில்
ஒருநாள்
என் குலத்தை
எனைக் குற்றம் கண்டோரைச் சந்திப்பேன்
எங்கள் குலத்தின் பொக்கிஷமென
அந்நாளில் அவர்கள்
எனைப் போற்றவும் கூடும்! ■



பெண் தவிசாளர் துளசிமணி

**1. தங்களைப் பற்றிய ஒரு சிறிய அறிமுகத்தை செய்ய முடியுமா?**

நான் ஆலையடிவேம்பு பிரதேசத்தைச் சேர்ந்தவர் திருமணமாகி 02 பிள்ளைகள் இருக்கிறார்கள். கடந்த 21 வருடங்களாக 2500 பெண்களை அங்கத்தவராகக் கொண்ட மகாசக்தி அமைப்பில் நிருவாக அதிகாரியாகக் கடமையாற்றுகின்றேன். அத்தோடு அம்பாறை மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தில் உபசெயலாளர் ஆகவும், கடந்த ஒன்றரை வருடங்களாக ஆலையடிவேம்பு மத்தியஸ்த சபையின் தவிசாளர் ஆகவும் கடமையாற்றி வருகின்றேன்.

**2. பெண்கள் மத்தியஸ்த சபையில் தவிசாளராக இருப்பதால் பெண் முறைப்பாட்டாளர்களுக்கு ஏற்படக்கூடிய நன்மைகள் எவை ?**

பெண்கள் மத்தியஸ்த சபையில் காதிகளாக இருப்பதால் பெண்கள் தொடர்பான பிணக்குகள் சமூகப் பிரச்சினைகள் குடும்ப வன்முறைகள் போன்றவை பெண்களால் சபையில் ஆற்றுப்படுத்தப்பட்டு விசாரணை மேற்கொள்ளும் பொழுது பிணக்காளர்கள் தயக்கமின்றி தங்கள் உள்ளார்ந்த பிரச்சினைகளை கூறுவதற்கும், கூறி ஆறுதல் பெறுவதற்கும், நம்பிக்கையுடன் முன் வருகிறார்கள். அதேவேளையில் பெண் காதிகளும் பிணக்காளர்களின் உள்ளக் குமுறல்களை வெளியில் கூறி விமர்ச்சிக்காது பிணக்கை இரு கட்சிக்காரரதும் இணக்கப்பாட்டுடன் முடிவுக்கு கொண்டுவந்து ஒரு சுமுகமான நிலையை ஏற்படுத்த வேண்டும். பெண்கள் பற்றிய பிரச்சினைகள் இவ்வாறு வெளிக்கொணரப் படும்போது மீண்டும் இவ்வாறான குடும்ப வன்முறைகள் ஏற்படுவது குறைவடையும்.

- பெண்கள் முன்னேற்றப் பாதையில் இன்று இருக்கிறார்கள் என்றால் நிச்சயம் அவர்கள் பயணம் பல சவால்களைக் கடந்து நடந்திருக்கும் எனினும் சவால்கள், தயக்கங்கள் சமூகத்தின் பார்வைகள் இத்தனைக்கும் மத்தியிலும் பெண்களுக்கு உந்து சக்தியாக அவர்களது சொந்த ஆழுமைகளுடன் பலரது ஆதரவுகளும் இருந்திருக்கும் என்பது மறுக்க முடியாத உண்மை.

**3. அந்தவகையில் தங்கள் நீண்ட பயணம் பற்றிய (சந்தர்ப்பங்கள் சவால்கள் மைல்கற்கள் முன்மாதிரிகள் ஆதரவாளர்கள் அடங்கலான தங்களது அனுபவத்தினை எங்களுடன் பகிரமுடியுமா?**

நான் ஆரம்ப காலங்களில் சமூக சேவைகளுக்கு செல்வதற்கு முன் வரவில்லை தயக்க சுபாவத்துடன் இருந்தேன். திருமணமான பின்பு சமூக சேவையில் ஈடுபடுவதற்கு எனது கணவர் ஊக்கம் அளித்தார். அவரின் உந்துதலின் பெயரில் சமூகசேவை செய்வதற்கு முன் வந்தேன் மகாசக்திஅமைப்பு இதற்கு களம் அமைத்துத் தந்தது. மகாசக்தி அமைப்பின் அனுசரணையுடன் பெண்கள் வலுவூட்டல் தொடர்பான பல்வேறுபட்ட பயிற்சிகள் பெறும் சந்தர்ப்பம் எனக்கு கிடைத்தமை எனது முன்னேற்றத்திற்கு வழிவகுத்தது. எம்மை வழிநடத்திய தலைமைகள் ஆண்களாக இருந்தாலும் பெண்கள் முன்னேற்றம் அபிவிருத்தி

தொடர்பான அக்கறை அவர்களுக்கும் இருந்தது. மத்தியஸ்த சபைக்கு உறுப்பினராகச் சேர்வதற்கும் எமது முன்னாள் நிறுவனத் தலைவராக இருந்த என். மணிவாசகன் ஐயா அவர்கள் என்னை சிபாரிசு செய்தார். எனக்கு பல்வேறுபட்ட ஆலோசனைகள் வழிகாட்டல்களைச் செய்தவரும் அவரே.

மத்தியஸ்த சபை எனக்குப் புதியது. இது தொடர்பாக அனுபவமில்லை. ஆனால் மத்தியஸ்த சபைகள் ஆணைக் குழுவினால் நடாத்தப்பட்ட பரீட்சையில் தோற்றி நான் தவிசாளராக தெரிவு செய்யப்பட்டேன். எனக்கு ஆரம்பத்தில் தயக்கமாக இருந்தது. சிலர் இப்பணியை பெண்ணாக இருக்கும் உங்களால் செய்வது மிகவும் கஷ்டம் என்று அதைரியப்படுத்தினார்கள் எனது சக அலுவலர்கள் மற்றும் மத்தியஸ்த சபைகள் ஆணைக் குழுவிலுள்ள ஒரு முஸ்லிம் பெண் உத்தியோகஸ்தர் ஆகியோர் இச் சேவையை நீங்கள் சிறப்பாகச் செய்வீர்கள் தயங்காமல் பொறுப்பேற்றுக்கொள்ளுங்கள் என உற்சாகப்படுத்தினார்கள் நானும் இதை ஒரு சவாலாக ஏற்று கடமை புரிந்து வருகின்றேன். அன்று "உங்களால் செய்ய முடியாது" எனக் கூறியவர்கள் ஒன்றரை வருடங்கள் கடந்த நிலையில் நான் சிறப்பாக பணியாற்றுவதாக பாராட்டுகிறார்கள். இது எனது முயற்சிக்கும் ஆதரவாளர்களின் ஒத்துழைப்புக்கும் கிடைத்த சன்மானம் என்று கருதுகிறேன்.

**4. மத்தியஸ்த சபை மக்கள் சமூகங்களுக்கிடையே எவ்வாறான நெருக்கத்தைக் கொண்டுள்ளது?**

எமது பிரதேசத்தில் நீதி நியாய சபைகள் பல உண்டு அதில் மத்தியஸ்த சபையும் ஒன்று அதிலும் மக்கள் மிக இலகுவாக அணுகக்கூடியதும், குறைந்த காலத் தவணையில் தங்கள் பிணக்குகளை முடிக்க கூடியதும் பண விரையம் இல்லாததும் WIN WIN SOLUTION ஏற்படுத்தக் கூடியதுமானது மத்தியஸ்த சபையே. இச்சபையில் வெற்றி தோல்வி என்னும் மனோபாவம் ஏற்படுவதற்கு இடமில்லாமல் ஒரு சமாதான சக வாழ்வை நோக்கிய முடிவு கிடைக்க வாய்ப்பு உண்டு. எனவே, சமூகத்தில் ஒரு நெருக்கமான உறவை மத்தியஸ்த சபைகள் கொண்டுள்ளன.

**5. தங்கள் மறக்கமுடியாத அனுபவம் ஒன்றினைப் பகிரமுடியுமா?**

ஒரு பிணக்கு விசாரிப்பின் போது முதலாவது தவணையில் எதிரும் புதிருமாக பகையாளிகள் போல் சமூகமளித்த பிணக்காளர் இருவர் மூன்றாவது தவணையின்போது மிகவும் அந்நியோன்னியமாக சமாதானமாக சென்றமை எனக்கு மறக்கமுடியாத ஓர் அனுபவமாகும்.

**6. வீட்டிற்குள்ளே பிரச்சினைகளை பொத்தி வைக்கும் பெண்களுக்கும் பெண்ணை ஒடுக்கும் சமூகத்திற்கும் பெண் தவிசாளர் என்ற வகையில் தாங்கள் கூறும் கருத்துக்கள் எவை?**

பிரச்சினைகளை மூடி மறைத்து பொய்மை வாழ்க்கை வாழ்ந்து இறுதியில் அது ஒரு பூகம்பமாக மாறி வாழ்க்கையே சீரழிந்து போகும் நிலை எவருக்குமே ஏற்படக் கூடாது. எந்த விடயமாயினும் முளையிலேயே கிள்ளிவிட வேண்டும். எனவே எமது பிரச்சினைகள் எதுவாயினும் அதற்கான தீர்வுக்காக இவை வெளிக்கொணரப்படவேண்டும். நாம் எல்லோரும் மனிதர்கள் எல்லோருக்கும் சமமான உரிமை உண்டு. பெண்கள் உரிமைகளும், மனித உரிமைகளே. பிரச்சினைகளை வெளிக்கொணரும் போதுதான் பாதிக்கப்பட்டவர் பாதிப்பை ஏற்படுத்தியவர் பற்றிய உண்மை நிலை சமூகத்திற்கு புலப்படும். ஆண் ஆளப் பிறந்தவன் பெண் அடிமைப்பட்டவள் என்னும் நிலைமாறி ஆணுக்கும், பெண்ணுக்கும் சமமானநீதி, சமமான உரிமைகள் உண்டு என்ற கோட்பாட்டை சமூகம் மதித்து பெண்ணின் அந்தஸ்து இம்மி அளவும் குறையாது பேணவேண்டும்.

அப்போது நாம் எதிர்பார்க்கும் பால் நிலை வேறுபாடு நீங்கி அனைவரும் சமத்துவமாக வாழும் நிலை ஏற்படும்.

**7. மத்தியஸ்த சபையின் கட்டமைப்பினை விளக்குவீர்களா?**

எமது நாட்டில் 300க்கும் மேற்பட்ட மத்தியஸ்த சபைகள் இயங்கி வருகின்றன. கடந்த காலங்களைவிட தற்போது இச் சபைகளில் பெண்களின் அங்கத்துவம் கூடுதலாக உள்ளது. மத்தியஸ்த சபைகள் ஆணைக் குழுவினால் மத்தியஸ்த குழாத்துச் சபை தெரிவு செய்யப்படுகிறது. இக் குழாத்துச் சபை ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமைகளிலும் காலை 09.00 மணிதொடக்கம் பி.ப 01.00 மணி வரையிலும் அவ்வப் பிரதேச பாடசாலை மண்டபங்களில் ஒன்று கூடும். பிணக்குகளை விசாரிப்பதற்காக மூவர் கொண்ட சபைகள் உடன் நியமிக்கப்படும் அதில் பிரதான மத்தியஸ்தர் ஒருவர் இருப்பார். சில பிணக்குகள் ஒரே நாளில் முடிவுக்கு கொண்டுவரப்படும் சில பிணக்குகள் தவணையிடப்படும் முடிவுற்ற பிணக்குகள் பற்றிய அறிக்கையினை பிரதான மத்தியஸ்தர் தவிசாளரிடம் ஒப்படைப்பார்.

தவிசாளர் ம.ச. உறுப்பினர் வரவு கிடைக்கப் பெற்ற பிணக்குகள் பிணக்குகளின் வகைகள் இணங்கிய, இணங்காத பிணக்குகளின் எண்ணிக்கை முடிவுறாத நிலையிலுள்ள பிணக்குகள் பற்றிய விபரங்கள் தவிசாளரினால் ஒவ்வொரு வாரமும் மத்தியஸ்த சபைகள் ஆணைக் குழுவின் செயலாளருக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும் இக்கட்டமைப்பிலேதான் மத்தியஸ்த சபைகள் இயங்கி வருகின்றன.



## இணக்கசபை உறுப்பினர் வசந்தி

**தங்களைப் பற்றிய ஒரு சிறிய அறிமுகத்தைச் செய்ய முடியுமா?**

சாதாரன தரம் வரைக்கும் படித்து திறமையாக பாஸ் பண்ணியும் என்னால் படிப்பை தொடரமுடியவில்லை. பத்தொன்பதாவது வயதில் திருமணம் செய்து 20 வயதில் தாயாகி அதேவருடமே கணவனை இழந்தேன். எதிர்காலம் பற்றிய பயமோ சிந்தனையோ எதுவுமே இல்லாது சமுர்த்தி திட்டத்தில் உள்வாங்கப்பட்டேன். சங்கத்தேர்வில் முதலிடம் கிடைத்து ஜனாதிபதி அவார்ட் 2000ம் ஆண்டிற்காகக் கிடைத்தது. சுயதொழிலின் மூலம் முன்னேற வேண்டும் எனும் ஆர்வம் அப்போதுதான் ஏற்பட்டது. இதனால் பலசங்கங்களில் அங்கம் வகிக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது.

**தாங்கள் எவ்வாறு மத்திய குழு உறுப்பினராக அங்கத்துவம் பெற்றீர்கள்?**

சங்கங்களில் அங்கம் வகிப்பதால் நிறைய படித்தவர்களின் அறிமுகம் அதிகமாகவே இருந்தது. இதன் பலனாக மத்தியஸ்த சபைக்கு ஆட்கள் தேர்வு இடம் பெறுவது எனக்குத் தெரியாதபோதும் அப்போது பிரதேச செயலாளராகக் கடமை ஆற்றிய பிரதேச செயலாளர் என்னை அழைத்து ஒரு சிறிய நேர்முகப் பரீட்சை உள்ளது என்றார். நேர்முகத்தேர்வில் என்னைத்

தெரிவுசெய்வதற்கு முக்கியமாக சங்கங்களின் பங்களிப்பும் சிங்களமொழி தெரிந்திருந்ததும் சந்தர்ப்பமாக அமைந்திருந்தது.

என்னுடன் மத்திஸ்த சபையில் இருந்தவர்கள் எல்லோருமே நிறையப் படித்தவர்கள், அரச உத்தியோகத்தர்கள், இளைப்பாறியவர்கள், ஆனாலும் நான் பயப்படவில்லை இருந்துதான் பார்ப்போமே என்று நினைத்தேன். என் குடும்பத்தவர்களும் என்னுடன் பழகியவர்களும் என்னை ஊக்கப்படுத்தினார்கள். விசேடமாக தலைவர் திரு. இராமச்சந்திரன் ஐயாவும் உப தலைவர் திரு.ஜெயசுந்தரம் ஐயாவும் என்னை மிகவும் உற்சாகப் படுத்தினார்கள்.

**"பெண்" என்ற வகையில் மத்தியஸ்த குழு உறுப்பினராக அங்கத்துவம் வகிப்பதால் சமூகத்திற்கு கூடுதலாக பெண்களுக்கு செய்யக்கூடிய பணிகள் யாவை?**

பெண்களிற்கு ஏற்படும் பிரச்சினைகள் அனைத்தினையும் ஆண்களிடம் சொல்ல கூச்சப்படுவார்கள். பெண்கள் சபையில் இருப்பதனால் அவர்களின் தேவை அல்லது பிரச்சனை சரியாக தெரிந்து கொள்ளமுடியும்.

**பெண்கள் இணக்க சபையில் அங்கம் வகிப்பதன் அவசியம் என்ன?**

பெண்களின் பிரச்சனைகளை பெண்களிடமே கூற விரும்புவர்கள் சில அந்தரங்க விடயங்களை ஆண்களிடம் கூற மாட்டார்கள் . இதனால் அவர்களின் பிரச்சனைக்கு சரியான தீர்வு கிட்டாது அதேவேளை சரியான பிரச்சனையை பெண்களிடம் கூறுவதால் அவர்கட்கு சரியான தீர்வு கிடைக்கும்.

**இணக்க சபையில் உறுப்பினர் என்ற வகையில் சமூகத்தில் பால்நிலை சமத்துவத்தின் அவசியம் யாது?**

பால்நிலை சமத்துவம் கட்டாயம் வேண்டும். சமத்துவம் பேணாவிட்டால் அங்கு பக்கச்சார்பு நிகழ்ந்து விடும்.

**இணக்க சபையில் உறுப்பினர்களுக்கு பால் நிலை சமத்துவம் சார்ந்த பயிற்சிகள் வழங்கப்படுகின்றதாயின் அதன் முக்கியத்துவம் யாது?**

பயிற்சியின் மூலம் பார்வைகள் விரிவு பெறும். பிணக்குக்காரர்களை அனுகும் முறை சுலபமாக இருக்கும்.

**இணக்க சபைக் கட்டமைப்பு முறை யாது?**

மத்தியஸ்த சபை ஆணைக் குழுவானது 5 உறுப்பினர்களைக் கொண்டது. இதில் மூவர் மேன்முறையீட்டு நீதிபதிகள் (ஓய்வு பெற்றவர்கள்) இருவர் சேவையிலுள்ளவர்களாகும். இதன் தவிசாளர் ஜனாதிபதி நியமிப்பார். ஆணைக்குழு வர்த்தமானி மூலம் மத்தியஸ்த சபைக்கு ஆட்கள் நியமிப்பதற்கான அறிவித்தல் விடப்படும். இதில் தனிப்பட்ட ரீதியாக யாரும் விண்ணப்பிக்க முடியாது. கிராமசேவையாளர் பரிந்துரை அல்லது நிறுவனங்கள் சார்பான பரிந்துரைகள் அவசியமாகும்.

கிராம சேவையாளர் தெரிவுசெய்யும் போது மக்களின் நன்மதிப்பு பெற்றவர்களை தெரிவுசெய்வார். இப்படி தெரிவு செய்யப்படுபவர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள் நேர்முகப் பரீட்சையின் போது தெரிவுசெய்யப்படுபவர்களிற்கு 5 நாள் பயிற்சி நடைபெறும். அதன் பின் எழுத்துப் பரீட்சை நடைபெறும்.

ஒவ்வொரு குழாத்திலும் 35 பெண்கள் சேர்த்துக் கொள்வது மிக அவசியமாகும். ஒவ்வொரு சபையினதும் ஆயுட் காலம் 3 வருடங்களாகும். சபை கலைக்கப்பட்டு புதிதான சபை பதவிக்கு வரும் வரை பழைய சபை 'காபந்து' முறையில் இயங்கும். பழைய சபை உறுப்பினர்களும் தலைவர் பரிந்துரையில் விண்ணப்பிக்கலாம். நியாயமான காரணங்களுடன் இடைநிறுத்தும் அதிகாரம் ஆணைக் குழுவிற்கு உண்டு. இச்சபை பதவியில் இருக்கும் போது பதவி வழி சமாதான நீதிவான் பதவியும் கிடைக்கும். ■



# பெண் சஞ்சிகை பற்றி ....

தம்பிலுவில் ஜெகா

இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் உள்ள மட்டக்களப்பில் சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையத்தால் 'பெண்' சஞ்சிகை 1995ல் இருந்து இன்றுவரை வெளிவருகின்றது. "**தூக்கி எறியப்பட முடியாத கேள்வியாய் உங்கள் முன் பிரசன்னமாயுள்ளேன்**" என்னும் மகுட வாசகத்துடன் பெண்கள் அனுபவிக்கும் இன்னல்கள், வாழ்வை வளப்படுத்தும் வழிமுறைகள் பொதிந்த பல்வேறு ஆக்கங்களைத் தாங்கி பெண் பவனி வருகின்றாள். ஆரம்ப காலத்தில் 'சூரியா பெண்கள் அமைப்பே இதழாசிரியர் குழுவாகச் செயற்பட்டு வெளியீடு செய்தது. பின்பு திருமதி. விஜயலெட்சுமி சேகர், T. உருத்திரா, வாசுகி ஜெயசங்கர் ஆகியோர் இதழாசிரியர் பணியில் ஈடுபட்டனர். இருந்தும் இன்றுவரை வியலெட்சுமி பல்வேறு பொறுப்பு களைத் தாங்கி சஞ்சிகையை வெளியிடுகின்றமை பாராட்டுக்குரியது. 2010ன் பின்பு பிரசுரமாகும் பெண் சஞ்சிகையின் அமைப்பு நீளத்திலும் அகலத்திலும் பருமனாக இருப்பதுடன் அதன் உள்ளடக்கத்திலும் தரமான ஆக்கங்களை இனங்காட்டி இதழுக்கு கனதி சேர்த்துள்ளது.

பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை பல்வேறு கோணங்க ளில் வெளிப்படுத்தும் எழுத்தாளர்களை இனங்கண்டு கவிதை, கட்டுரை, சிறுகதை, நாடகம் போன்ற ஆக்கங்களைப் பெண் தாங்கி வருவதால் இன்றும், என்றும் விதந்து சிலாகித்துப் பேசும் சஞ்சிகைகளுள் பெண் தனித்துவம் காட்டப்படும் என்பது உறுதியான உரைப்பாகும்.

எடுத்துக்காட்டாக, 2010 - தொகுதி 15 இலக்கம் 02 பெண், பெண்கள் அனுபவிக்கும் இன்னல்களால் ஏற்பட்ட இதயச் சுமையை வெளிப்படுத்தும் கருத்தாளம் மிக்க சிலையின் உருவத்தை முன்னட்டையாகப் பிரசுரித்தமை இதழாசிரியரின் தேடலை வியக்க வைக்கின்றது. இதே போல், ஆசிரியர் உரையில் அவர்கள் வெளிப்படுத்தும் கருத்துகள் உள்ளத்தில் ஊடுருவி உணர்வுகளைத் தட்டியெழுப்புவதுடன் வாசகர்களைச் சிந்திக்கவும் தூண்டுகின்றது.

2010இல் பேராசிரியர் சித்திரலேகா மௌனகுரு அவர்களால் தொகுத்து வெளியிடப்பட்ட "கவிதைகள் பேசட்டும்" எனும் கவிதைத் தொகுதி முக்கியமானதோர் நூலாக இன்று உலகில் உயர்த்திப் பேசப்படுகின்றது. இதில் இடம்பெற்ற பதினெட்டுக் கவிதையாயினிகளும் பெண் சஞ்சிகையில் எழுதி இனங்காணப்பட்டோர் என்பதைக் கோடிட்டுக் காட்டலாம்.

பொதுவாக, ஓர் சஞ்சிகையின் அனைத்து அம்சங்களும் சிறப்புற அதன் ஆசிரியரின் திறமையும் தியாகமும் அவசியம் இதை உற்று நோக்கி சூரியா பெண்கள் அமைப்பு பெண் சஞ்சிகையின் ஆசிரியரை பொருத்தப்பாட்டுடன் பணியாற்றப் பணித்துள்ளது. இதுவரை வந்த இதழ்களின் முக்கியத்துவம் பற்றி 2006 (தொகுதி II)இல் கிழக்கிலங்கைப் பல்கலைக்கழக விரிவுரையாளர் திருமதி. றூபி வலன்ரீனா அவர்கள் "ஈழத்து இதழியலின் வரலாறும் மதிப்பீடும்" கட்டுரையும் 3-08-2013 வீரகேசரியில் திருமதி. ஜெகதீஸ்வரிநாதன் எழுதிய கிழக்கிலங்கை சஞ்சிகைகளில் பெண்களின் கவிதைப் பங்களிப்பு எனும் கட்டுரைகள் பயன் மிக்கவை.



போர் அரக்கனின்
வெறியாட்டம் முடிந்துபின்பு
இடிக்கப்பட்ட வீடுகள் கட்டப்படுவதும்
சாயம்போன சுவர்களுக்கு
வர்ணம் பூசப்படுவதும்
காவலற்ற காணிகளுக்கு
வேலியமைக்கப்படுவதும்
மனதுக்கு மகிழ்வைத் தருகின்றன

துப்பாக்கி ரவைகளாலும்
செல்லின் சிதறல்களாலும்
கணவனின் உயிரைப் பறிகொடுத்த
காரிகையர் எத்தனை?
அழிக்கப்பட்ட குங்குமமும்
பறிக்கப்பட்ட பூவும்
மீண்டும் கிடையாதா என ஏங்கும்
எழிலரசிகள் ஏக்கமுடன்......

# சனநாயக மற்றும் சமாதானச் செயன்முறைகளில் பெண்களின் பிரசன்னமும், பங்கேற்பும் - இலங்கை அநுபவங்களை மையப்படுத்திய ஒரு பால்நிலைப் பலகணி.



- ஓவியம் - ஹம்சத்பிரியா

**அறிமுகம்:**

சனநாயகம் என்பதும் அதன் பாற்பட்ட அநுகூலங்கள் சனநாயக நடை முறைகளில் பங்கேற்றல், சனநாயக எண்ணக் கருக்களை விளங்கிக் கொள்ளுதல், அவை பற்றிக் கலந்துரையாடுதல், சனநாயகம் தழுவிய போராட்டங்களில் பங்கேற்றல், சனநாயக உரிமைகளை வென்றெடுத்தல், தந்தையாதிக்க மயப்படுத்தப்பட்ட "சனநாயக வெளியினுள்" பெண்கள் தமக்கானதும், தமக்கு இயைபானதுமான எல்லைகளையும், இருப்பினையும் ஸ்தாபித்தல் - இவை எல்லாம் இந்த நூற்றாண்டிலும் சவால் நிறைந்தனவாகவே உள்ளன. ஒரு பெண் பிரதமர், பெண் சனாதிபதி, பெண் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இவை ஆழ்நிலைப் பட்ட இப் பிரச்சினைக்கு அல்லது சனநாயகத் துறையில் நிலவும் பால்நிலை சார் இடைவெளிக்கான நிலைபேறான தீர்வுகளை ஈட்டித் தர வில்லை என்றே கூற வேண்டும். எனவே, இவ் விடயம் தொடர்பில் பருமட்டாகச் சிந்திப்பதற்கு இக்கட்டுரை முற்படுகிறது.

**போருக்குப் பிந்திய காலகட்டம்:-**
**(Post – War Srilanka)**

மூன்று தசாப்பதங்களிற்கும் மேற்பட்ட யுத்தம் "ஓய்ந்து" விட்டதாகக் கூறப்படும் 2009 மே திங்கள் 19 ஆம் நாளிற்குப் பின் இலங்கைத் தீவு தொடர்பான உள்ளூர் மற்றும் சர்வதேச

நிலைப்பட்ட சொல்லாடல்களில் எல்லாம் போருக்குப் பிந்திய அபிவிருத்தி, மீள்கட்டுமானம், மீள் நல்லிணக்கம், நிலைபேறான சமாதானத்தை ஸ்தாபித்தல் என்பன பற்றி உரத்துப் பேசப் படுவதனை நாம் அறிவோம். எவ்வாறாயினும் நிகழ்வுப் போக்குகள் வேறு திக்கிலே பயணிக்கின்றன. உண்மையில், எந்தவொரு தேசத்திலும், சிவில் யுத்தத்தினால் வாழ்வியல், உணர்வுகள், வாழ்வாதாரம் என்பன சார்ந்தும் பெரும் நெருக்கடிக்கும் உள்ளாவோராகவும், அதிகளவில் இழப்புகளை எதிர் கொள்வோராகவும் சிறார்களும், பெண்களுமே காணப்படுகின்றமை யதார்த்தமாகும்.

இலங்கையின் இனமோதல் அநுபவங்களில் அரச கட்டமைப்பிலும் சரி, "விடுதலை இயக்கங்களாக" கூறிக் கொண்ட கட்டமைப்புகளிலும் சரி பெண்கள் பற்றிய பங்கேற்பும், அவர்களுக்கான முதன்மைப்படுத்தலும் திருப்தி கரமானதாக இருந்ததில்லை என்பதாகவே பால் நிலைக் கூருணர்வு (Gender Sensitiveness) மிக்க அரசியற் பகுப்பாய்வாளர்கள் மதிப்பீடுகின்றமை புறக்கணிக்கத்தக்க கருத்தன்று.

சனநாயக நடைமுறைகளில் பெண்களின் பிரசன்னத்தையும், உள்ளார்ந்த ஈடுபாட்டையும், அவர்களின் நேர்நிலையான தலையீட்டையும் ஐ.நா. அமையம் போன்ற உலகளாவிய அதி உச்சமான நிர்வாக அமையங்களும், சர்வதேசப் பொருத்தனைகளும், காலத்திற்குக் காலம் கொண்டுவரப்பட்ட சமவாயங்களும் வலியுறுத்தி நிற்பதனையும் நாம் அவதானிக்கலாம். இந்த இடத்தில் 1995 ஆம் வருடத்தின் செயல்வாதத் திற்கான 'பீஜிங்' அறிக்கையில் (Beijing Platform For Action,1995) இடம் பெறும் பின்வரும் வாசகத்தினை நாம் சுட்டிக்காட்டுவது பொருத்தம் உடையதாகும்.

"Egual access and full participation of women in power strdctures and theoir full involrement in all efforts for the prevention and resolution of conflict are essential for the maintenance of peace and security."

எவ்வாறாயினும் சனநாயகம், சனநாயக விழுமியங்கள் என்பனவும் கூட, ஆணாதிக்க நலன்களை முன்நிறுத்தியே கட்டமைக்கப்பட்டுள்ள இந்த யதார்த்த அரசியல் உலகில், பெண்களின் வகிபாகமும், அவர்களுக்கான தளங்களும் வரையறுக்கப்பட்டிருத்தல் ஒன்றும் ஆச்சரியத்திற்குரிய விடயமன்று.

மீள்நல்லிணக்கம் அல்லது போருக்குப் பின்பாக வாழ்வைக் கட்டியெழுப்புதல் தொடர்பான செயன்முறைகளிலும் கூட, பெண்கள் வெறும் பங்குபற்றுநர்களாக அல்லது செயற்றிட்ட அங்கங்களாக மாத்திரம் கையாளப்படுகின்றனர். எனினும் சமாதானம், சனநாயகத்தை உறுதிப் படுத்தல் என்பன சார்ந்து – வரலாற்று நிலையான காலகட்டங்களில் இருந்து பெண்களிற்கு உள்ள சிறப்பான அநுபவங்களும், ஆற்றலும் சிரத்தை கொள்ளப்படாத நிலைமை பற்றியும் பெண்நிலை ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டுகின்றார்கள். எவ்வாறாயினும், தமக்கான சன நாயக உரிமைகளை வென்றெடுப்பதில் பெண்கள் மனம் தளராமல் ஆணாதிக்கம் சூழ்ந்த சமூகக் கட்டு மானத்தினுள் தமது போராட்டங்களைத் தொடர்ந்து குறிபிடத்தக்க வெற்றிகளையும் ஈட்டியுள்ளளனர்.

கி.பி 1851 இல், ஸ்ரான்சன் (Stantion) என்பார் சமூகப்பணியாளரான சூசன் (Susan. B.Anthony) என்பவரைச் சந்தித்த நிலையில் இருவரும் இணைந்து பெண்களின் சனநாயக உரிமைப் பங்குபற்றலின் நீண்ட போராட்டத்தின் பொருட்டு உறுதி பூண்டனர். 1868 ஆம் வருடம், இங்கிலாந்தில் உள்ள அச்சகத்துறையிலும், ஆடைக் கைத்தொழிற்துறையிலும் ஈடுபட்டிருந்த பெண்களை அந்தனி (சூசன்) அணி திரட்டி, இவ்விடயத்தில் முனைப்போடு ஈடுபடுத்தினார். சனநாயக விழுமியங்களை வெறும் தேர்தல் பங்குபற்றலோடு குறுக்கி விடாமல் பெண் தொழிலாளர்களின் தொழிற் சங்கமாகக் கூடுவதற்கான உரிமை, ஆண்களிற்குச் சமமான வேதனம் பெறுவதற்கான உரிமை, ஆண்களுக்கு நிகராக தொழில் புரியும் உரிமை, ஆண்களைப்

போன்று சிந்திக்கும், செயற்படும், சமூகமாக ஒன்று சேர்வதற்கான உரிமை போன்ற பல்வேறு உரிமைகளினை உறுதிப்படுத்தவும் அவர் செயலூக்கம் வாய்ந்த பல்வேறு செயற்பாடுக ளையும் மேற்கொண்டார்.

இந்த இடத்தில் பெண்களின் கல்வி மற்றும் தொழில் ஆற்றும் உரிமை, சமூக இயக்கங்களில் பங்குபற்றும் உரிமை, ஒன்று கூடும் உரிமை முதலானவை பற்றிய பிரக் ஞையை ஏற்படுத்தியவராகப் பிரான்ஸ் தேசப் பெண்ணியவாதியான "மேரி வூல்ஸன்கிராப்ட அம்மையார்" வரலாற்றில் தடம் பதிப்பதனை நாம் இங்கு கிலாகித்துக் கூறலாம். அவரின் "The Vindication Of The Women Rights" என் னும் நூல், சமூகப்புலப்பதிவிலும், பெண்களின் சனநாயகரீதியிலான பங்குபற்றல் சார்ந்த பயனுள்ள கலந்துரையாடல்களிலும் கணிசமான செல்வாக்கைப் பதித்துள்ளது எனலாம். பெண்க ளின் பங்கேற்பு என்பது வரலாற்றுப் படிநிலை களில் எளிதாக எட்டிப் பறிக்கத் தக்க தங்கக் கனிகளாக இருக்கவில்லை என்பதும், ஒவ்வொரு உரிமைச் சுவட்டின் பின்னாலும் நிறையவே உழைப்பும், போராட்டமும் இருந்தது என்பதும் கூட மனங்கொள்ளத்தக்கதாகும்.

பெண்களின் வாக்குரிமை சார்ந்த போராட்டமானது அதற்கென்று வரலாற்றைக் கொண்டுள்ளது. பெண்களிற்கான வாக்குரி மையை வென்றெடுத்த சமூகமயப்பட்ட முதலாவது அமைப்பானது கி.பி 1780களில் தொடங்கி கி.பி 1790 கள் வரையிலும் பிரான்சில் முன்னெடுக்கப்பட்டதாகத் தகவல்கள் கூறு கின்றன.

ஸ்வீடன் நாட்டிலே கட்டுப்பாட்டுடன் (நிபந்தனை) கூடிய பெண்களிற்கான வாக்குரி மையானது "சுதந்திர யுகம்" (Age of Liberty) (1718 – 1771) என அழைக்கப்பட்ட யுகத்தில் வழங்கப்பட்டது. பெண்களிற்கு முதலில் வாக்கு ரிமை வழங்கிய "நாடு" என்ற அடிப்படையில் சிந்திக்கும் போது, Corsican Republic (1755), The Pitcairn Islands (1838), The Isle Of Man (1881), Franceville (1889) ஆகிய நாடுகள் வரலாற்றில் இடம் பெறுகின்றன. சான்றாதாரங்க ளின் பிரகாரம் லைடியா டா(f)வ்ட் (Lydia Taft) என்பார் காலணித்துவ அமெரிக்காவின் முதலா வது சட்ட பூர்வமான பெண் வாக்குரிமையாளராக பதிவு பெறுகிறார்.

கி.பி 1792 ஆம் வருடம், சியராலியோன் தேசத்தில் மூன்றில் ஒரு பங்களவு, குடும்பத் தலைவியரான ஆபிரிக்கப் பெண்கள் வாக்க ளித்திருந்தனர். இவையெல்லாம் பெண்களின் சனநாயகப் பயணத்தில் எட்டப்பட்ட பாரிய சாதனை, மைல்கற்களாகக் கருத முடியாது. ஏனெனில் பெயரளவில் எய்தப்பட்ட அல்லது வழங்கப்பட்ட சலுகைகளாகவே ஆய்வாளர்கள் குறித்துரைப்பர்.

**பெண்கள் உரிமைச் சாசனம்:**

வரலாற்று நிலையில் நின்று ஆய்வு செய்யும் போது அதற்கான விதை 1840 ஆம் ஆண்டளவில் இலண்டனில் இடம் பெற்ற அனைத்துலக அடிமைத்தனத்திற்கு எதிரான மகாநாடு இடம்பெற்றபோது முதலாவது பெண் கள் உரிமைச் சாசனத்தை முன்மொழிவதற்கும், அதனைப் பகிரங்கப்படுத்துவதற்குமான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

குறிப்பிட்ட அந்த மகாநாட்டில் எலிஸபெத் காடி (Elizabeth Cady Stantion), மொட் (Lucretic Mott) போன்ற பெண்களிற்கு அவர்களின் பால் அடையாளம் காரணமாகவே அவர்களின் பங்கேற்பு மறுக்கப்பட்டதனையும் நாம் சிந்தித்துப் பார்க்க என்று பிரகடனப்படுத்தினர். ராமன் றோய் (Raman Roy Ranade) ராஜாராம் மோகன்ராய் போன்றவர்கள் இக் கருத்தை ஒரு கோட்பாடாக முன்வைத்தனர். உடன் கட்டை ஏற்றி கணவனை இழந்த பெண்களை உயிரோடு எரித்துக் கொல்லும் சதி (SATI) போன்ற கொடூரமான சமூகச் சட்டங்கள் பெண்களுக்கு கல்வி கற்பிக்க மறுத்து, நடமாட மறுத்து, கலைகளில் ஈடுபட மறுத்து, அவர்களை வீட்டினுள் பூட்டி வைத்த

வைதீக நெறிகள் இவை எல்லாம் "சனநாயகத்தின் காவலர்கள்" "தேசிய உணர்ச்சி வீர புருஷர்கள்" என்று விபரிக்கப்பட்டவர்களின் கண்களில் ஏன் படவில்லை என்று நாம் நியாயமான கேள்வியை எழுப்பினால் அக்காலத் தேசியத் தலைவர்கள் பால் நிலைச் சமத்துவம் தொடர்பில் எத்தகைய "இரண்டக முரண்பாட்டு நிலையைக்" கொண்டிருந்தனர் என்பது புலனாகும்.

**இலங்கைப் பெண்களின் சனநாயகப் பங்கு பற்றலும், படிப்பினைகளும்:**

இந்து சமுத்திர நித்திலமாக வர்ணிக்கப்படுகின்ற இலங்கைத் தீவானது பெற்றுக் கொண்ட சுதந்திரம் என்பது தங்கத் தகட்டில் வைத்து நீட்டப்பட்ட மாதுளங்கனியாக விபரிக்கப்படுகின்றது. அதாவது பாரததேசம் போல இலங்கையில் பரவலானதும் தீவிரத்தன்மை வாய்ந்ததுமான மக்கள் மயப்பட்ட தேசிய வாதப் போராட்டங்கள் இங்கு பெருமளவில் இடம் பெறவில்லை.

இவ்வாறே இலங்கைத் தீவில் பெண்கள் சார்ந்த சனநாயக உறுதிப்படுத்தலிற்கான போராட்டம் கூட ஆழமான/வலுவான சமூக வடிவமான வியாபகம் பெறவில்லை என்பது சமகால அரசியற் பகுப்பாய்வாளர்களின் விமர்சனமாகும். இதனது அர்த்தம் இலங்கைப் பெண்கள் தமக்கான சனநாயகத்தளத்தில் பங்குபற்றவும், பேரம் பேசவும், ஆண்களோடு அதிகார வெளியைப் பகிர்ந்து கொள்ளவும் என எவ்விதத்திலும் போராடவே இல்லை என்பதன்று மாறாக பெண்களின் சமூகமயப்பட்ட போராட்டம், கனிந்து, சுவாலித்து, தீவிர வடிவம் எடுக்கும் முன்பாகவே அவர்கள் சனநாயகத் தளத்தில் கால் பதிப்பதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டுவிட்டது என்பதனை நாம் மனங்கொள்ள வேண்டும். எவ்வாறாயினும் பெண்களின் வாக்குரிமை தொடர்பான பொதுசன விவாதங்கள், இலங்கையில் சனநாயகத்தையும், பால்நிலையையும் இணைந்தவாறான கருத்துப் பரிமாற்றத்திலும் புதிய சிந்தனைப் பகிர்விலும் தாக்கம் செலுத்தியது என்பதை மறுப்பதற்கில்லை.

**சனநாயகத்தின் திறவுகோலான வாக்குரிமையும், பெண்களும்:**

சனநாயக உரிமை பற்றிப் பேசும் எவரும் பிரஜைகளின் வாக்குரிமை பற்றிப் பேசாதிருக்க இயலாது. தனிச் சொத்துரிமையின் பரிணாம வளர்ச்சியோடு தந்தையாதிக்கமானது, பெண்களின் வாழ்வியல் சார்ந்த பல விதமான கட்டுப்பாடுகளை விதிக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளானது. வரலாற்று நிலையில் பெண்ணின் கற்பு, தனிக்குடும்ப அமைப்பு முறை, சமூக நிறுவனங்களில் அவளுக்கு வழங்கப்பட்ட இரண்டாம் நிலை ஆகியனவெல்லாம் தந்தையாதிக்க நலன்களோடு பின்னிப் பிணைந்தனவாகவே அமைந்துள்ளன.

இந்த இடத்தில் நாம் பெண்ணின் இரண்டாம் தர நிலை தொடர்பில் பொதுவாக சமூகவியல் கோட்பாடுகளை வெவ்வேறு பார்வைகளின் நிலை நின்று முன் வைத்தவர்களின் சிந்தனைப் போக்குகளைப் பின்வருமாறு எடுத்துக் காட்டலாம்.

(1) "ஆண் வேட்டையாடுபவன் பெண் சேகரிப்பாளர்" (Man The Hunter and Women The gatherer) - இந்த எண்ணக்கருவானது Sherwood Washbum மற்றும் C.Lancaster ஆகிய இருவராலும் விருத்தி செய்யப்பட்டதாகும். அவர்கள் ஆண்கள் பங்கேற்ற வேட்டையாடலை வெறுமனே ஒரு பொருளாதார நடவடிக்கையாக மட்டுமன்றி ஒரு வாழ்க்கை வழிமுறையாகவே (Way Of Life) நோக்கினர். பெண்கள் குழந்தைகளைப் பராமரிக்க நேர்ந்ததனால் அவர்கள் வேட்டையாடும் துறையில் பயிற்சி பெற முடியாமல் இருந்தது அவர்கள் தமது வாழ்விடங்களில் தங்கி இருந்து உணவுப் பொருள்களைச் சேகரித்துப் பதனிடலில் ஈடுபட்டனர். இதற்குச் சமாந்தரமாக ஆண்கள் வேட்டையாடலில் புதிய நுட்பங்களைக் கண்டறிந்ததுடன் ஒழுங்கமைப்பு (organization) சார்ந்த இயக்கப்பாட்டுத் திறன்களையும் பெற்றுக் கொண்டனர். பெண்களுக்கும், பிள்ளைகளுக்கும் உணவாக விலங்குகளின் இறைச்சியைத் தேடிக் கொணர்ந்தனர். எனவே

மானுட, சமூக மற்றும் உணர்வெழுச்சிக் கணுக்களும் இழைகளும், பெண்களுக்கும், பிள்ளைகளுக்கும் உணவளித்து அவர்களின் உயிர் வாழ்தலை (Survival) உறுதிப்படுத்திய ஆண்களைச் சுற்றி மையப்படுத்தப்பட்டதாக இவர்கள் தெரிவிக்கின்றனர். மறுவிறைவாக உயிர் வாழ்தல், பாதுகாப்புத் தேவைகளின் பொருட்டில் ஆண்களைச் சார்ந்திருக்க வேண்டிய நிர்ப்பந்தத் திற்குள்ளான பெண்கள் வெளியுலகு தொடர்பான "கையாளல் திறன்களையும்" அதன் வழியே கட்டமைக்கப்பட்ட அதிகாரங்களையும் ஆண்களுக்கு இயல்பாகவே "கையளிக்க" வேண்டிய நிலைமைக்கு உள்ளாகின்றனர் Sherxy Orthert என்பார் பிரகடனப்படுத்துவது போல வேட்டையாடலின் செயற்பாட்டு மையமான கொலை புரிதல் என்பது இங்கு ஒரு பிரதான விடயமன்று. மாறாக அதனூடாக இயற்கையை மானுடத் தேவைகளுக்கேற்ப வடிவமைக்கும் ஆற்றலை ஆண்கள் பெற்றுக் கொண்டதும் பெண்கள் இச் செயன்முறையில் வெறும் பயன் பெறுநபர்களாக ஆக்கப்பட்டதுமே நாம் கருத்தில் கொள்ள வேண்டிய விடயம். இத்தகைய மனிதப் பரிணாம நிலைமைகளின் ஊடாகப் பெண்கள் தமது உடற்கூறு, உளக்கட்டமைப்பு, சமூகவெளி (Social Space) சார்ந்த சில குறிப்பிட்ட உளவாரியான உணர்ச்சி பூர்வமான சமூகச் சந்தர்ப்ப எல்லைகளினுள் மட்டும் அவளை இருத்திக் கொண்டது. மாறாக ஆண்கள் வீட்டுத் துறைக்கு அப்பாலான (Non.Domestic) உணர்ச்சி பூர்வமற்ற அதிகாரத் துறைகளைக் கையகப் படுத்திக் கொள்வதற்கு ஏதுவானது.

**விமர்சனம்:**

எவ்வாறாயினும் மேலே எடுத்துக்காட்டியது ஒரு கோட்பாட்டில் நிலை சார்ந்த விளக்கமாகவே பலராலும் கொள்ளப்பட்டு, விமர்சிக்கவும் படுகின்றது. குறிப்பாக Salley Slocum என்பார் இக் கோட்பாட்டின் மீது பல்வேறு ஆட்சேபணைகளை எழுப்புகின்றார். மனிதர் அல்லாத உயிரின அங்கிகளில் இருந்தே மனித இனம் பரிணாமம் உற்றது என்பதை ஒரு வாதத்திற்காக ஒப்புக் கொண்டாலும் கூட வேட்டையாடற் செயற்பாட்டிற்கு முக்கியத்துவம் அளிப்பது தவறாகவே அமையும் என்று Salley வாதிடுகின்றார். தம்மில் தங்கியிருக்கும் குழந்தைகளிற்கான உணவுத் தேவையைப் பூர்த்தி செய்யும் பொருட்டாக தாய்மார்கள் அதிகளவு உணவு சேகரிப்பில் ஈடுபட்டிருப்பர் என்ற ஊகம், தர்க்க ரீதியில் ஏற்புடையதாகும் என்கிறார். இதுவே சமூக உறவின் முதல் வீச்செல்லையாக (Scope Of Social Relation Ship) அமைந்தது எனவும். மாறாக அது வேட்டையாடல் அன்று எனவும் உணவு சேகரிப்பே மனித வாழ்வோட்டத்தின் மெய்யான ஆரம்பநிலையிலான இயற்கை வடிவமாக அமைந்திருந்தது என்றும் அவர் கூறுவது பெண்களின் சனநாயக அடிச்சுவடுகளைத் தேடும் எமக்குச் சுவாரஷ்யமான விவாதத்தின் தொடக்கப் புள்ளியாக அமையும்.

Sally முடிந்த கூறும் வாதம் "வேட்டையாடலின் மீது அளவிற்கு அதிகமாக அழுத்தம் செய்வதானது மானுடபரிணாம வளர்ச்சி பற்றிய உண்மையைத் திரிபு படுத்துதலாகவே அமையும்" என்பதே ஆகும். எனவே வேட்டையாடற் செயன்முறை மூலம் ஆண்கள் சமூகத்தலைமை தாங்குகிற ஆற்றலைப் பெற்றுக் கொண்டனர் என்பது இங்கே கேள்விக்கு உள்ளாக்கப்படுகின்றது.

(2) ஆண் பண்பாட்டினதும் பெண் இயற்கையினதும் பிரதிநிதி (man The Culture ,Women The Nature): பெண் எதிர்கொள்ளும் ஒடுக்குமுறை அநுபவங்கள் சர்வதேசம் அளாவியனவாக உள்ளன. இது தொடர்பான பெண்ணியவாதிகளின் விளக்க முயற்சிகள் இரண்டு பெரும் பிரிவுகளைச் சார்ந்து வெளிப்படுகின்றன.

1. மானுடவியல் நிலைப்பட்டது.
2. தீவிரப் பெண்ணியம் சார்பானது.

மானுடவியல் தளத்தில் Sherry Ortner இன் கலந்துரையாடல் இங்கு எடுத்தாளத்தக்கது: ஆண்களுக்கும், பெண்களுக்குமான வெவ்வேறுபட்ட ஊடாட்டமானது இயற்கையினின்றும் பண்பாட்டிற்கு மாறிச் செல்லும் ஒரு பயணத்தை,

பரிணாம நிலையைக் குறிப்பதாக எடுத்துக் கொள்ளப்படுகின்றது. Sherry எடுத்துக்காட்டுவது போல ஒவ்வொரு சமூகப் பண்பாட்டிலும் பெண், ஆனவள் மிகவும் தாழ் நிலையான இருப்புடன் (Lower Level Of Existence) தொடர்புபடுத்தப்படு கின்றாள். பெண் இயற்கைக்கும் ஆண் பண்பாட் டிற்குமாக குறியீட்டாக்கம் செய்யப்படுகின்றனர். ("Women Symbolizes nature and Mn Symbolizes Culture") இவ்வாறே ஒவ்வொரு பண் பாடுமே இயற்கையை குறை மதிப்பீடு செய்வது டன் வளர்ச்சியை அதாவது மனிதர் எய்திய பண்பாட்டு விருத்தி நிலையை இயற்கை மீதான மானுட வெற்றியாக நம்புகிறது. அதாவது மறுதலையாகக் கூறுவதாயின் பண்பாடு என்பது இயற்கைச் சக்தியை பண்படுத்துவதாக மானுட நிலைப்படுத்துவதாக மாத்திரமன்றி இயற் கையை விடவும் மேம்பட்டதாகவும் கருதப்படு கின்றது. எனவே இதன் உள்ளர்த்தம் யாதெனில் பெண் ஆனிற்கும் கீழ்ப்பட்டவள் என்பதே ஆகும்.

இந்த இடத்தில் Sherry Ortner , Simone De Bcauvoir இன் "இரண்டாம் பால்" (Second Sex) நூலில் இருந்து மேற்கோளாகக் காட்டும் பத்தியை நாமும் அவ்வாறே எடுத்தாளல் பொருத்தமாக அமையும்.

A Female To A Greater Extent Than The Male Is The Prey Of The Species, She is more Enslared to the Specios than the male, her animality is more manifest" பெண் இயற்கையுடன் மிக நெருங்கிய தொடர்பு பூணுபவளாகவும், இயற் கைப் பயிரிடல், விதையிடல், உணவு சேகரித்தல், தண்ணீர் வளத்தை அறிதல் முதலான கைங்காரி யங்களில் நீண்ட காலமாக ஈடுபடுபவளாகவும் இருக்கிறார். உற்பத்தி, மனு உற்பத்தி என்று இரு நிலைகளிலும் பெண் ஒரு பிரபஞ்ச சக்தியாக விளங்குகிறாள். எனினும் இயற்கையும், சக்தி நிலையும், வளங்களையும் கட்டுப்படுத்து பவனாக கையாள்பவனாகத் திகழ்பவன் ஆண். அடிப்படை இயல்பாக உட்பதிக்கப்பட்ட அசமத்து வமான இயக்காற்றல் திறன்களும், பௌதீகக் கட்டமைப்பும், உள நிலைக் குணாம்சங்களும் இணைந்து பெண்ணின் மீதான ஒடுக்கு முறைக் கும் ஆண் சார்ந்த அதிகார ஆளுகைக்கும் வழி வகுத்திருப்பதாக "S.Firestone" குறிப்பி டுவது பகுப்பாய்விற்கு உரியது.

**(3) சிக்மன் பிரைடின் உளப்பகுப்பாய்வுத் தத்துவம்:**

ஆண்களின் மேலாதிக்கம் அல்லது பிறரை அதிகாரம் செய்வதற்கான உள எழுச்சி என்பது உட்பதிக்கப்பட்ட ஒன்றாக பிராய்டியம் பேசும் மனித விலங்கு, மனித ஜீவியாக எவ்விதம் விருத்தி பெறுகிறது என்பதை உளப்பகுப்பாய்வின் அடிப்படையில் விளக்க முற்படும் பிரெய்ட் பெண்களின் ஆளுமைத்திறனைக் குறைத்தே மதிப்பிட்டுள்ளார். இதனால் பின்வந்த பெண் நிலைவாதிகளின் மிகுந்த கண்டனத்திற்கு அவர் ஆளாக நேரிட்டது.

பிராய்டின் ஆய்வுகளின் ஆண் ஆதிக்கப் பண்பு மேலோங்கி உள்ள தன்மையினைப் பின்வந்த உளப்பகுப்பு உளவியலாளர் ஆகிய "கோர்னி" என்னும் பெண் ஆய்வாளர் வெளிப் படுத்தி உள்ளார். ஆண்மையோடு ஒப்பிட்டவர்க ளாகத் தம்மில் ஏதோ ஒரு குறைபாடு கொண்ட வர்களாக, பெண்கள் தம்மைப் பற்றித் தாமே சுய தாழ்ச்சி சார்ந்த ஒரு படிமத்தைப் பெண்கள் உருவாக்கிக் கொண்டிருப்பதாக பிராய்ட் கூறுகின்றார். இந்த அபிப்பிராயம் அவரின் ஆணா திக்கச் சார்புடையதாக இனங்காணப்படுகின்றது. அதாவது ஒரு பெண் குழந்தை தனக்கு ஆண்குறி இல்லை என்பதான எதிர்மறைச் சிக்கலுக்கு உள்ளாவதாகவும் அதனையே அவர் "Penis Envy" என்று குறிப்பிடுகிறார்.

ஆனால் கோர்னி, பிரைய்டின் கருத்தை நிராகரித்து அதற்கு எதிரிடையாக "கருவறைப் பொறாமை" (Womb Envy) என்னும் எண்ணக் கருவினை முன்வைத்துள்ளார். அதாவது ஒரு குழந்தையை தம் உடலின் உள்ளே பொதிந்தி ருக்க முடியாத அல்லது இயற்கையினால் அந்த வாய்ப்பு நிராகரிக்கப்பட்டதனால் ஒரு வகையான தாழ்வுணர்ச்சி ஆண்களை வாட்டுவதாக அவர் குறிப்பிடுகின்றார்.

பெண்மை பற்றிய பிராய்டின் கோட்பாடு உயிரியல் அடிப்படையான பாரியல்புத் தளத்தினையே (Bio Sexuality) அடித்தளமாகக் கொண்டு கட்டியெழுப்பப்பட்டுள்ளமை அவதானிக் கற்பாலது. ஆண்மை (masculinity) பெண்மை (Feminity) என்பன பிராய்டைப் பொறுத்த வரையில் செயற்பாங்கானது (Active) அமைதியானது (Psaaivity) ஆகியவற்றிற்குச் சமனாகும். பிராய்டைப் பொறுத்த வரையில் உளவியல் சார் பகுப்பாய்வு (Psycho – Analysis) என்பது கலாசார மானது எந்த வழிகளில் கற்றறிந்து உள்வாங்கப் படுகின்றது. மற்றும் மாற்றம் செய்யப்படுகின்றது என்பது பற்றிய தேடலாகவே நாம் கருதிக் கொள்ள வேண்டும்.

எவ்வாறாயினும் துடிப்பான தலைமை தாங்குகிற அடக்கி ஆள்கிற இயல்பூக்கமும் கட்டமைப்பும் ஆண்களிடம் இயல்பாகவே படிந்திருப்பதாக பிராய்ட் கூறும் சித்தாந்தம் உண்மையில் மற்றொரு நிலையில் பெண்கள், அரசியல் சனநாயகம் முதலான பொதுத் தளங்களில் இருந்தும் புறமொதுக்கப்பட்டமைக்கான கோட்பாட்டியல் ரீதியிலான நியாயப்பாடாகவே நாம் கருதிக் கொள்ள வேண்டியுள்ளது.

(3) **லெவி ஸ்ராசின் (Len – Straues) பெண்ணின் பரிமாற்றம்:**

பால்நிலை சார்ந்த வகிபாகங்கள் பற்றிய பொதுநிலைப்பட்ட கோட்பாட்டுப் பார்வையை வழங்குவதற்குப் பல்வேறு மானுடவியலாளர்களும் முயன்றுள்ளனர். அந்த வகையில் Levi-Strcuss இன் உறவு முறையின் மூலக்கட்டமைப்பு வடிவங்கள்'' (Elementary Strutur Of Kinship) பற்றிய சிந்தனை முன்வைப்பும் பிரதானமானது.

மனித மனங்களின் ஆழப்பதிந்த கட்டமைப்பு நிலைகளை அவற்றின் உள்ளார்ந்த பொறி முறைகளை விளங்கிக் கொள்வதில் Levi-Strcuss எப்போதும் ஆர்வம் கொண்டவராகவே காணப்பட்டார். மனித மனத்தின் கட்டமைப்பினையும் அதன் இயக்கத்தையும் மொழிப் பயில்வையும் வடிவமைப்பதிலும், பரிட்சியமாக்குதலிலும் காட்டப்படும் ஆற்றலில் இருந்து பெற்றுக் கொள்ள முடியும் என்பது அவரின் அபிப்பிராயம் ஆகும்.

பெண்கள் ஏனைய பண்டங்களைப் போலவே வரலாற்று நிலைமைகளில் மாற்றீடு செய்யப்பட்டதாக Levi-Strcuss (லெவி ஸ்ரோஸ்) குறிப்பிடுகின்றார். இச் சூழ்நிலையில் தகாப் புணர்ச்சி (Incest Taboo) இடம் பெறுவதற்கான வாய்ப்பு உருவானதாகவும் அது பெண்களின் வாழ்வியலைப் பாதித்ததாகவும் இதனைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் புறம்பான விதிகள் (Rule Of Exogamy) ஏற்படுத்தப்பட்டதாகவும் லெவி தெரிவிக்கிறார். இதன் படி சமூக உறவுகளிலும் குடும்ப அமைப்பிலும் பெண்களின் முதன்மையான வகிபாகத்தை லெவி எடுத்துக் காட்டுகின்றமை குறிப்பிடற்பாலதாகும்.

**ஏங்கல்சின் (F.Engals) கருத்துக்கள்:**

"அரசு தனிச் சொத்துடைமை, குடும்பம் ஆகியவற்றின் தோற்றம்'' ("The Origins Of The Family, Private Property And State") என்னும் தலைப்பிலான ஏங்கல்சின் நூல் பெண்நிலைச் சிந்தனைகளுக்கு அத்திவாரமாக அமைகிறது. பெண் இனம் குடும்ப அமைப்பின் மூலமாக தனது சுயாதீனத் தன்மையினை இழந்து ஒடுக்கு முறைக்கு உள்ளானதாக எடுத்துரைக்கிறார் ஏங்கல்ஸ்.

பெண்கள் மீதான அடக்குமுறையானது உண்மையில் வர்க்க சமூகத்தின் விருத்தி நிலையுடன் தொடர்புபட்டதாகும் என்று ஏங்கல்ஸ் கூறுகின்றார். தொண்மைக்காலச் சமூகங்களில் எல்லா வேலையும் அது ஆண்களாலும் பெண்களாலும் மேற்கொள்ளப்பட்டாலும் சரி ஒரே வாறான சமூகப் பெறுமதியினையே கொண்டிருந்தது.

காலக்கிரமத்தில் விவசாய சமூக ஈட்டிக் கொண்ட விருத்தி நிலைமைகள் காரணமாக செல்வத்தின் அதிகரிப்பும் தனிச் சொத்துடைமையும் தோற்றம் பெற்றது. இந்தச் சமூக நிலைமையானது பெண்களிலும் பார்க்க ஆண்க

ளுக்கு முதன்மை வழங்கும் ஒரு மரபுக்கு வித்திட்டது. அத்துடன் பாரம்பரியமான சொத்துடைமை ஒழுங்கினைத் தூக்கியெறியவும் ஓர் உந்து சக்தியாக அமைந்தது. இதனால்தான் தாயின் உரிமை நிராகரிக்கப்பட்டமையே வரலாற்று ரீதியிலான பெண்பாலாரின் தோல்விக்கு முதற் காரணமாக ஏங்கல்சினால் குறித்துரைக்கப்படுகின்றது. இத்தகு ஒரு கட்டத்தில்தான் பெண், ஆண் இனத்தினால் வசப்படுத்தப்பட்டு இழிவு படுத்தப்பட்டு அவனின் காம இச்சைக்கு அடிமையாக்கப்பட்டு பிள்ளைகளைப் பெற்றுக் கொடுக்கின்ற வெறும் ஒரு கருவியாக்கப்பட்டதாக ஏங்கல்ஸ் சுட்டிக்காட்டுகிறார்.

ஏங்கல்சின் கருத்தில் இச் செயன்முறையானது ஈற்றிலே ஆண்வார்க்கம் சார் குடும்பக் கட்டமைப்பு வடிவம் ஒன்றினை முடிவுற்றது. அடுத்ததாக இது பால்நிலை சார் தொழிற் பிரிப்புக்கு வழிவகுத்தது. அதாவது (1) பாவனைக்கான உற்பத்தி (2) பரிமாற்றத்திற்கான உற்பத்தி ஆகிய நிலைமைகளைத் தோற்றுவித்தது. பெண்களினால் உற்பத்தி செய்யப்பட்ட அனைத்தும் வீட்டில் நுகரப்பட்டது. மிகையான வகையில் அவர்களால் உற்பத்தி செய்யப்படவில்லை. மறுபுறம் பரிமாற்றத்தின் பொருட்டு ஆண்கள் அதிகளவில் உற்பத்தி நடவடிக்கையில் ஈடுபடுவதற்கான வாய்ப்பு நிலவியது. அதனூடாக ஆண்கள் மிகையான செல்வத்தைத் திரட்டினர். அதன்வழி அவர்கள் அதிகளவானதும் உறுதிப்பாடானதுமான சமூக அதிகாரத்தை ஈட்டிக் கொள்வதற்கும் முடிந்ததாக ஏங்கல்ஸ் குறிப்பிடுகின்றார். இவ்விதமாய் ஈட்டப்பட்ட சமூக அதிகாரத்தின் பயனாக வர்க்க ரீதியில் சொத்துடைமையாளர்கள் சொத்து அற்றவர்கள் என்றவாறு இரு வர்க்கங்கள் உருவாகின.

இத்தகைய வர்க்க உருவாக்கத்துடன் குடும்ப மட்டத்திலும் சமூகக் கட்டமைப்பிலும் பெண் தாழ்த்தப்பட்டதோடு சட்டபூர்வமான அடிமைத்தளையும் அவளின் மீது திணிக்கப்பட்டது எனவும் ஏங்கல்ஸ் விளக்குவார். பொருள் முதல் வாதம் சார்ந்த உலகின் பங்களிப்பு காரணமாக பெண் இரண்டாம் பட்ச நிலைமைக்கு உள்ளாக்கப்பட்டதாகக் கூறும் ஏங்கல்ஸ் தந்தையாதிக்கம் என்னும் கருத்தியலானது வளர்ச்சியுற்ற விதம் பற்றியும் வரலாற்று ரீதியிலான பகுப்பாய்வினை மேற்கொண்டுள்ளார்.

**பங்குபற்றும் சனநாயக உரிமை: பெண்களுக்கான வெளி**

குடியேற்றவாத ஆட்சி முடிவுற்றதும் இலங்கைத் தீவு பெயரளவில் பெற்றுக்கொண்ட சுதந்திரமானது தார்மீக சமூகக் கட்டமைப்பிலும் இலங்கை மக்களின் சிந்தனை முறைமையிலும் பரிபூரண சுதந்திர வெளிப்பாடுகளைப் பிரதிபலிப்பதற்கு பெருமளவில் தூண்டு கோலாக அமையவில்லை. அரச நிர்வாக அமைப்பு அதிகளவு மத்திய மயப்படுத்தப்பட்டதாகவும் நலன்புரித் தன்மை மிக்கதாகவும் காணப்பட்டதோடு அதிகார பலம் நிர்ணயிக்கும் உரிமை என்பன பெருமளவு உயர் பிரமுகர் வர்க்கத்தினரை உள்ளடக்கிய பூர்ஷ்வா சமூகத்தவர்களின் மேலாதிக்கத்தால் சூழப்பட்டதாகவும் காணப்பட்டது.

அடிமட்டத்திலான கிராமிய அமைப்புகள் தொடங்கி உயர் அதிகார மையமான பாராளுமன்றம் வரையிலும் பெண்கள் சார்ந்த பங்குபற்றல் அநுபவங்கள் இன்று வரையிலும் திருப்தி அளிப்பதாக அமையவில்லை என்பதே ஆய்வுகளின் முடிவாக உள்ளது. தமது வாழ்வைப் பாதிக்கும் பிரச்சினைகள் தொடர்பில் அமைப்பு ரீதியில் தமது பங்குபற்றலை உறுதிப்படுத்தி கூட்டான முறையிலும் சக்தி வாய்ந்த நிலையிலும் தமது குரலை வெளிப்படுத்துவதற்கான வாய்ப்பு பெண்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட நிலையிலேயே உள்ளது.

இலங்கையிலும் கிராமிய அமைப்பில் தொடங்கி பாராளுமன்றம் ஈறாகவும் இந்த நிலைமையினையே எம்மால் அவதானிக்க முடிகிறது. பெண்களின் அமைப்பு ரீதியிலான பங்குபற்றல் என்பது கூட சனநாயகத்தின் உச்சங்களைத் தொட்டுவிட்ட ஒன்றாகவோ, அன்றேல் ஆண்களின் பங்கு பற்றலுக்கு நிகரானதாகவோ எம்மால்

இன்றளவும் துணிந்து கூறவியலாத ஒரு நிலைமையே காணப்படுகின்றது. பொதுவாகவே சமூக ரீதியிலான பெண்களின் பங்குபற்றல் என்பது நலன் நாடுதல், சுயதொழிலை முன்னெடுத்தல், கடன் உதவி பெறுதல் முதலான பாரம்பரியமான நோக்கங்களுடனேயே மட்டுப்படுத்தப்பட்டனவாய் இருக்கின்றன.

தென்கிழக்காசிய வட்டகை சார்ந்த நாடுகளின் குடும்ப அமைப்பு முறையிலும், கடப்பாடுகளிலும் இயல்பாகவே உள்ளார்ந்த நிலையில் விரவி நிற்கும் தந்தையாதிக்க விழுமியங்களும், எதிர்பார்ப்புக்களும், வார்ப்படங்களும் பெண்களின் சமூகவெளியைச் சமையலறையிலும், படுக்கையறையிலும் மட்டுமாகவே வரையறுத்துள்ள நிலை காணப்படுகிறது. இதனால் கூட்டங்களிலும் அமைப்புக்களிலும் பங்குபற்றுவதற்கான அவகாசம், ஆர்வம் என்பனவும் அரிதாகவே அமைகின்றன. அத்துடன் குடும்பத்திலுள்ள இதர ஆண்கள், பெண் அங்கத்தவர்களின் சமூக ரீதியிலான அல்லது அமைப்பு ரீதியிலான பங்கேற்பினைப் பெருமளவில் வரவேற்காத ஊக்குவிக்காத தன்மையையும் அவதானிக்கலாம்.

இவ்வகையில் பின்வரும் புள்ளி விபரங்கள் பயனுள்ளனவாகவும் இப்பிரச்சினை பற்றிச் சமூகவியல் பாங்கிலே பகுப்பாய்வு செய்து பார்ப்பதற்கு உறுதுணையாகவும் அமைகின்றன.

## சமூக நிறுவனங்களில் உறுப்புரிமை.

| நிறுவனங்கள். | பெண் | | ஆண்கள் | |
|---|---|---|---|---|
| | தொகை | % | தொகை | % |
| கூட்டுறவுச் சங்கம் | 16 | 8.6 | 1 | 2.7 |
| கிராம அபிவிருத்திச் சங்கம் | 15 | 8.1 | 5 | 13.8 |
| சமயநிறுவனங்கள் | 26 | 14.0 | 6 | 16.6 |
| மரண உதவிச் சங்கங்கள் | 81 | 43.7 | 27 | 75.0 |
| சர்வோதயம் | 10 | 5.4 | 1 | 2.7 |
| சனச | 25 | 13.5 | 3 | 8.3 |
| சமுர்த்தி | 32 | 17.2 | 6 | 16.6 |
| இளைஞர் ஸ்தாபனம் | 13 | 7.0 | 5 | 13.8 |
| பெண்கள் அமைப்புகள் | 31 | 16.7 | - | - |
| பாடசாலை அபிவிருத்திச் சங்கம் | 18 | 9.7 | 1 | 2.7 |
| ஏனையவை | 34 | 18.3 | 5 | 13.8 |

குடும்பப் பொறுப்புகள் பெண்களுக்கு மட்டுமே உரித்தானதாகக் கருதப்படும் பாரம்பரியமான ஓர் எதிர்பார்ப்பும், மனப்பதிவும் எவ்விதமான கேள்விகளுக்கும் உட்படுத்தப்படாமல் அவ்வாறே ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. மறுபுறம் சமூக ரீதியிலான பங்கு பற்றல் என்பது பெண்களுக்குத் தேவையற்ற ஒன்றாகவும், பெண்களின் இயல்புக்கும், ஆற்றலுக்கும் அப்பாற்பட்ட ஒன்றாகவும் எமது சமூக மனோபாவத்தில் சிந்திக்கப்படுவதனை மீள் கட்டவிழ்ப்புச் செய்ய வேண்டிய கட்டாய நிலை ஒன்றை நாம் பிரேரித்தே ஆக வேண்டி இருக்கிறது.

**அட்டவணை 2:-(பெண்கள்) பங்கேற்காமைக்கான காரணங்கள்.**

| நிறுவனங்கள் | பெண்கள் | | ஆண்கள் | |
|---|---|---|---|---|
| | தொகை | % | தொகை | % |
| செயற்பாடற்ற சங்கம் | 42 | 14.9 | 02 | 11.1 |
| நேரமின்மை | 56 | 19.9 | 07 | 38.9 |
| குடும்பத்திலுள்ள ஏனையோரின் ஈடுபாடு/ஊக்குவிப்பு | 44 | 15.6 | - | - |
| புதிதான இடம் | 33 | 11.7 | 05 | 27.7 |
| ஈடுபட விருப்பமின்மை | 21 | 7.4 | - | - |
| சந்தர்ப்பமின்மை | 30 | 10.6 | 02 | 5.6 |
| பிரயாணித்தல்/பயணித்தல் கடினமானது | 29 | 10.3 | - | 11.1 |
| ஏனைய காரணங்கள் | 03 | 1.1 | - | - |
| தெரியாது | 09 | 3.2 | - | - |
| பதில் இல்லை | 12 | 4.2 | 01 | 5.6 |
| **மொத்தம்** | **82** | **100** | **18** | **100** |

**முடிவாகச் சில சிந்தனைகள்:**

பெண்கள் இயக்காற்றலும், தன்னார்வமும் இயக்கபூக்கமாய்க் கொண்டவர்கள். உற்பத்தியிலும் (Production) மீளுற்பத்தி (Reprodution) பெண்களின் உயிர்ப்பான வகிபாகம் மனித குல வரலாறு நெடுகிலும் பதிவாகியுள்ளது. எனினும் இடைக்காலத்தில் ஏற்பட்ட சமூக அமைப்புமுறை மாற்றங்களும் தந்தையாதிக்க உயர்ச்சியும் முதலாளித்துவ நசிவுகளும் சனநாயக வெளியில் பெண்ணுக்கான வெளியை இன்மைப்படுத்தி அல்லது பலாத்காரமாகவே குறுகச் செய்து அவளின் சனநாயகக் குரலை அமுக்கி விட்டுள்ளதாகவே பெண் நிலை நின்று சிந்திக்கும் சமூகவிஞ்ஞானிகள் கருத்துரைக்கின்றனர்.

பின் நவீனத்துவம் (Post Modernism) பின் காலனியம் (Post Colnialism) முதலான (எமக்கு) புதிய சிந்தனை வீச்சுகளும், ஓரங்கட்டப்பட்டோர் சார்பான உலகின் பார்வையும் பதிவுகளும் வீறு பெற்று வரும் சமகாலத்தில் பெண்களின் சனநாயக மயப்பட்ட சமூகமயப்பட்ட பங்கேற்பினை இன்னும் உறுதிப்படுத்தவும், பலப்படுத்தவும் எமது குரலை இன்னும் அதிகமாய் உயர்த்த வேண்டிய தருணம் இதுவே. “பெண்களே மீண்டும் தொடங்குவதற்கு இதுவே சந்தர்ப்பம்….. உங்களின் நிலமையையும் எமது நிலமையையும் பற்றி மறுபடியும் சிந்தித்துப் பாருங்கள். நாங்கள் சாதித்து விட்டோம் என்று சொன்னால் மட்டும் போதாது மற்றவர்கள் எம்மீது சுமத்தியுள்ள வரையறைகளை நாம் கடந்து செல்ல வேண்டும்……… பெண்கள் என்ற முறையில் நாம் ஒன்றிணைந்து சாதிக்க முடியும்.” (Women For Peace Op.cit) என்னும் கூற்று இங்கு மிகப் பொருத்தமானது.

இலங்கையின் அரசியல் வெளி, சமூக, பண்பாட்டு வெளி, போருக்குப் பிந்திய சமாதானச் செயற்பாடுகள் சூழல் பாதுகாப்பு புதிய வலுவான அனைவர்க்கும் சமத்துவமான சுபீட்சம் வாய்ந்த எதிர்காலச் சமூகக் கட்டுமானத்தினை நிர்ணயித்தல் முதலான துறைகளிலான சனநயாகம் தழுவிய பெண்களின் பங்கேற்பும் அவசியம் உறுதிப்படல் வேண்டும். அப்போதே சமத்துவ, சமதா்ம தார்மீக சமுதாயம் மலரும். இதற்காக நாம் இன்னும் நீண்ட தூரம் பயணிக்க வேண்டிஉள்ளது என்பதே எம்முன் உள்ள யதார்த்தம்.

**அடிக்குறிப்புக்கள்.**

1.சரவணன். என், “இலங்கை அரசியலில் பெண்களும், பெண்களின் அரசியலும்:” (2001 ஒக்றோபர்), மூன்றாவது மனிதன் பதிப்பகம், பொழும்பு.

■ ***முறையூர் சந்திரசேகரன் சசிதரன்***

# வருடாந்த சந்தா – பெண்

ஐரோப்பா, வட அமெரிக்கா,
அவுஸ்திரேலியா
**US$ - 8**
இந்தியா
ரூபா 500.00
இலங்கை
ரூபா 200.00

**சந்தா விண்ணப்பம் 20.................**
**பெண் சஞ்சிகைக்கு சந்தா அனுப்பியுள்ளேன்.**

பெயர் : ....................................................................
விலாசம் : ....................................................................
திகதி : ....................................................................

இத்துடன் காசோலை / மணி ஓடர் சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையத்தின் பேரில் அனுப்பி வைக்கிறேன்.

சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம்
இல. 55, லேடி மனிங் டிறைவ்,
மட்டக்களப்பு,
இலங்கை.

**Suriya Women's Development Centre,**
No:55, Lady Manning Drive,
Batticaloa,
Sri Lanka.



ISSN : 1391-6122